
www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

பக்கம் 20
Registered as a News Paper in Sri Lanka
ரூபா 10/00
දිනමුරසු වාරමලර්
பெப்.26-மார்ச்.04,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 91

## புலிகளின் தனியரசும்



## தடுமாறும் அரசும்



எக்ஸ்ரே

யாழ்ப்பாணத்தில் என்ன நடக்கிறது?



ரிப்போர்ட்



திரைமறைவு தகவல்களோடு அரசியல் தொடர்

சினி விசிட்

கமல் மீது எம்.ஜி.ஆர் கசந்தது ஏன்?

ருசிகர தகவல்

அதிரடி அழகி பமீலா

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## நடிக்கத் தெரியாத விஜய்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
விஜய குமாரணதுங்காவின்
நினைவுநாள்
சென்றவாரம்-
சென்ற பல ஆண்டுகளைவிடவும்
சிறப்பாக நினைவு கூரப்பட்டது.

'விஜய்'
பற்றித் தெரியாதவர்கள்கூட
வேண்டுமென்றே வியந்துகொண்டனர்.
ஏன் எதற்கு என்பது
எல்லோரும் அறிந்ததுதான்.

'விஜய்' வெற்றிகரமான
வெகுஜனத் தலைவராக வளர்ந்தபோது
அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்கள்
அவர்மீது வெளிச்சத்திற்குப் பதிலாக
இருட்டைப் பூசியதும் நாமறிந்ததே.

'விஜய்' ஒரு சிறந்த நடிகர்.
ஆனால்-அரசியலில்
நடிக்கத்தெரியாதவர்.
இனவாத நஞ்சுக்கு அவர்
முறிவு வைத்தியம் தேடியவர்.

விரைவில் நம்மை விட்டு
பிரிந்து செல்பவர்கள்
மிகச் சிறந்தவர்களாக
இருப்பதுதான் பெரிய சோகம்.

'விஜய்' பற்றிய
பக்கம் பக்கமான நினைவுகூரல்களில்
அவரைக் கொன்றவர்கள் யார்
என்பது பற்றி
ஒரு வரிகூட இல்லையே?
கவனித்தீர்களா?
இதுதான் பாழாய்ப்போன
அரசியல்!

'விஜய்' நினைவுதினத்தோடு
அவரது தோழர் லக்ஷ்மன்
உட்பட வாசுதேவ நாணயக்காரவும்
மற்றும் சிலரும்
யாழ் சென்றது நல்ல பொருத்தம்.

'புலிகள்' என்ற பெயரோடு
யாழ்ப்பாணத்தையும் அடர்ந்தகாடாக
நோக்கிக்கொண்டிருந்த
தென்னிலங்கை மக்களுக்கு
யாழ்ப்பாண மக்களின் மன உணர்வுகளை
படம்பிடித்துக் காட்டவென்றாலும்
இவ்வாறான-
சென்று வருதல்கள் உதவும்.

தற்போது யாழ் சென்ற
லக்ஷ்மன், ஏற்கனவே
விஜய் யாழ் சென்றபோதும்
அவரோடு கூடவே சென்றவர்.
'விஜய்' விட்டுச்சென்ற முயற்சியை
தொடரும் பணியாக
இதனைக் கொள்ளலாம்.

□□

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பு
ஆர்ப்பாட்டங்களில் மக்களை
இறக்கிவிட ஆரம்பித்திருக்கிறது.
புலிகளது பிரமுகர்களின் பேச்சுக்கள்
அரசுமீது சந்தேகத்தை
இறைக்கத் தொடங்கிவிட்டன.

புலிகள் அவசரப்படுகிறார்களோ
என்று நினைக்க வேண்டியிருக்கிறது.
புலிகள் செய்வதைப்போல
அரச தரப்பு அவர்கள் மீது
அவநம்பிக்கைகளை வெளியிடவில்லை
என்பது கவனிக்கத்தக்கது.

ஆனாலும் அரச தரப்பு
அரசியல் தீர்வு பற்றிப்பேசினாலும்
நம்பிக்கையான
அறிகுறிகளைக் காட்டாமலிருக்கிறது.

"தீர்வுத் திட்டம் தயார்" என்று
ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.
புலிகள் அரசியல் பேச்சு நடத்த
ஆர்வம் காட்டவில்லை
என்ற குற்றச்சாட்டுக்கள்,
அரசு தனது தீர்வு என்னவென்று
சொல்வதற்கு தாமதம் காட்டுதலை
எவ்வகையிலும் நியாயப்படுத்தாது.

தாமதம் செய்யாமல்
அரசு மேற்கொள்ளும் முயற்சிகள்தான்
உருவாகிவரும் நம்பிக்கைகள்
உருக்குலைந்து போகாமல்
கட்டிக்காத்துக்கொள்ள
இன்று தேவையானவையாகும்.

□□

உண்மை சுடும்.
பொய்யில் குளிர்காய நினைப்போருக்கு
உண்மை சுடும்!

'முரசு' முகமூடிகளை கிழிக்கும்போதும்
ஊழலை ஊரறியச் சொல்லும்போதும்
சம்பந்தப்பட்டவர்களுக்கு
சகிக்கவே முடியவில்லையாம்.
சகிக்க முடியாதுதான்.
அதற்கு 'முரசு' என்ன செய்யும்?


'முகமூடிகள்' கிழியும் போது
'முரசு' மீது வசைபாடுகிறார்கள்.
முரசின் தாக்கம் எந்தளவுக்கு
இருக்கிறது என்பதையறிய
அவர்களது வசையே
வசதியான அளவுகோல்.

'முகமூடி' போர்வழிகளால்
வாழ்த்தப்பட்டால் முரசில்
ஏதோ தவறு இருக்கிறது
என்றுதான் அர்த்தமாகிவிடும்.
வசைபாடப்பட்டால்தான்
'முரசின்' அடி உரிய இடத்தில்
உரமாக விழுகிறது என்று அர்த்தம்.
எனவே-வசைகளை வரவேற்போம்!

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## கிறிஸ்துவின் வார்த்தை

"கிறிஸ்துவின் வார்த்தை நிறை வளத்தோடு உங்களுள் குடிகொள்வதாக முழுஞானத்தோடு ஒருவர்க் கொருவர் போதியுங்கள்; அறிவு புகட்டுங்கள்; தேவ ஆவி ஏவிய சங்கீதங்களையும் புகழ்பாக்களையும் பாடல்களையும் நன்றியோடு உளமாரப் பாடுங்கள்." (கோலோசேயர்3:16)

ஆம், நாம் மற்றவர்களுக்கு நல்லவைகளைப் போதிக்க வேண்டும். இதற்கு தேவ ஆவியின் பலத்தாலும், வரத்தாலும் நிரப்பப்பட்டிருக்கிறோம். தவறான பாதையில் செல்பவர்களுக்கு வழிகாட்ட நாம் ஒளியாக மாற வேண்டும். நாம் வழிகாட்டியாக ஒளியூட்டியாக இருக்க வேண்டும்

. நாம் முழுஞானத்தோடு ஒருவருக்கொருவர் நல்லவைகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கு இடைஞ்சலாய் இருக்காமல் அவர்களுக்கு கைகொடுத்து கரையேற்றுபவர்களாக வாழ வேண்டும். இதை நாம் செய்ய வேண்டும். செய்ய முடியும். ஏனெனில்-

"உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." என்று திருமறை வசனங்கள் வாசிப்பவர்கள் சொல்லக் கூடியதாக அமைய வேண்டும். அவ்வாறு அமைவது நிச்சயம். எனவேதான் இசையாஸ் தீர்க்கதரிசி கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

"ஆண்டவரின் நூலில் கவனமாய்த் தேடிப் படியுங்கள், இவற்றுள் ஒன்றும்குறைந்து போகாது." (ஏசா 34.16) என்கிறார். மேலும் ஒன்றுக்கொன்று துணையின்றிப் போகாது. ஏனெனில் அவரது வாயிலிருந்து வந்தது அவரது ஆணையே! எனவே ஆண்டவர் பெயரால் நாம் ஒருவருக்கொருவர் துணை நிற்போமாக

ஏ.பி.வி.கோமஸ்

## அல்லாஹ்வின் சமூகத்தில் உயர்ந்தவர்!

பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஸஹாபாக்களில் சிலர் கூடியிருந்த நேரத்தில் அவ் வழியாக ஒரு மனிதர் சென்றார். அப்போது நபியவர்கள் "இம் மனிதரைப் பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?" என்று வினவினார்கள்.

அதற்கு ஸஹாபாக்கள் "யா ரஸூலல்லாஹ்! இவர் சிறந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர் திருமணம் செய்து கொள்ள எங்கேனும் பெண் கேட்டால் அது உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படும். இவர் எவருக்காவது சிபாரிசு செய்தால் அதனை ஏற்றுக் கொள்வார்கள்." எனப் பதிலளித்தனர். இதனைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் எதுவும் பேசாது மௌனமாக இருந்தார்கள்.

அதன் பிறகு சற்று நேரத்தில் பிறிதொரு மனிதர் அவ் வழியாகச் சென்றார். நபி(ஸல்) அவர்கள் முன்பு போன்று அவரைப் பற்றியும் தன் ஸஹாபாக்களிடம் விசாரித்தார்கள். "யா ரஸூலல்லாஹ். இவர் வறுமையில் வாடும் கூட்டத்தைச் சார்ந்தவர். இவர் எங்கேனும் பெண் கேட்டால் இவருக்கு திருமணம் செய்து கொடுக்க முன் வரமாட்டார்கள்." இவர் எவருக்கேனும் சிபாரிசு செய்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இவர் பேசினால் அதனை யாரும் செவியேற்க மாட்டார்கள்." என்று கூறினர்.

அப்போது நபி(ஸல்) அவர்கள் "முந்திய மனிதரைப் போன்று உலகம் நிரம்ப இருந்தாலும், அவர்கள் அனைவரையும் விட இந்த மனிதர்தான் அல்லாஹ்விடத்தில் மிகவும் உயர்ந்தவராக மதிக்கப்படுகின்றார்" என்று அருளினார்கள்.

ஏ.ஆர்.எம்.றிஸ்வான்-ஏறாவூர்.

## கவிதைப்போட்டி இல-88

### போலிச் சாமிக்கு வாசகர் சாட்டையடி!

### பரிசுக்குரிய கவிதை

### தொழுதது வீணோ?

சாமியும் நீயோ! சடையதும் பொய்யோ!
சங்கரன் நாமமேன் சாற்றினாய் தினமும்-
பூமியில் செய்த! அற்புதம் பொய்யோ!!
பூச நீ தந்ததும் புனித வெண்ணீறோ
காம இச்சையில் திளைத்து கற்பினைக் குடிக்கும்
கயவரைத் தொழுததும் வீணோ
பாமர மக்கள் பக்தி என்றெண்ணி
பரிதவித்திட வைப்பதும் முறையோ?

முருகேசு—மன்னார்.

### 'குட்டி'ச்சாமியார்

பட்டினத்தார் பாடியதை
பலர் சிலிர்க்க உரைத்துவிட்டு,
கட்டிலிலே 'சுகம்' கண்டு,
காவிக்கே கறை தந்த
'குட்டி'ச்சாமியே!
கூண்டுக்குள்ளும் உன்னைக்
கும்பிட ஓர் கூட்டம் உண்டு!

நா.ஜெயபாலன்-பிபிலை.



### 'காவி'யன்

கன்னிகளை
குத்தகைக்கு
எடுத்த
மொத்த வியாபாரி.

வீ.எம்.எம்.ஏ.காதர்-மருதமுனை.

### சாயம் வெளுத்தது

பக்தியிலொரு
பகல்வேஷம்
பகலிரவெல்லாம்
பெண் மோகம்,
சத்தியத்தை மறந்த
பொய்த் தவக்கோலம்,
உத்தம வாழ்வென
ஊரெல்லாம் தம்பட்டம்
எத்தனை நாளைக்குத்தான்
இப்படியொரு தப்பாட்டம்?

வை.சித்திக் கிருஷ்ணா
பாண்டிருப்பு-01.

### வேண்டுதல்

காவியுடை வேண்டும் பராசக்தி காவியுடை வேண்டும்
காணி நிலத்துடனே பல கன்னியரும் பெற்றுக்
காமக்களியாட்டம் நாளும் நிகழ்த்திடவே
காவியுடை வேண்டும்.

மாவையூரான்-கொழும்பு.

### அடியப்பா!

சுவாமியே அடியப்பா
சுவாமிக்கு அடியப்பா
ஏட்டுவே அடியப்பா
போலிச்சாமிகள் போகட்டும்
பூட்டிப்போட்டு அடியப்பா

வித்தகி.ஜெ.-தெஹிவளை.

### கா(வி)மம் எதற்கு?

முற்றும் துறந்தவரே
உனது வற்றாத
காம ஊற்றில் முற்றாக
நனைந்த பின்னும்
காவி முக்காடு எதற்கையா?

பூனாகலையூர் அமிர்தன்.

### ஒரு முன் மாதிரி

கைகளிலே விலங்கிட்டுக் காவலர்கள் வழி நடத்த
பொய்களிலே வலி, எடுத்துச் செல்கிறேன் சிறைவாசம்.
ஆசாட பூதிகளாய் அந்தரங்க லீலை செய்யும்
ஆசாமிகள் நடபடிக்கு அடியேன் ஒரு முன் மாதிரி!

வாழையூர்-வைரமுத்து.

### வருவதைப் பார்

ஆ(சை)சிகள் கொடுத்த கைகள்
ஆசாபாசம் கொண்டதனால்
மாசுபட்டு வாழ்க்கையிலே
மானம் போய் கை விலங்குடனே வருவதைப்பார்!

வானம்பாடி-கொழும்பு-15.

### ஏனோ?

காவியுடையெனக்கு
காப்புத் தருமென்றிருந்தேன்
காக்கியுடை வந்து
காப்பணிவித்ததேனோ?

உ.புகசாந்தி-கொழும்பு-13.

### வரவேற்பு

பேரின்பத்தை விற்று
சிற்றின்பம் வாங்கியவருக்கு
'மாமியார்வீடு'
வரவேற்பு கொடுக்கிறது!

புத்தளம்-பொற்கவி.

### போலி

போலிகளைக்
கண்டு
ஏமாறாதீர்கள்
ஏ.எச்.எம் மாலிக்
நிந்தாவூர்.

### சாமி—யார்?

திரை மறைவில் நீ அன்று
மறை பொருளை இரசித்து
நின்றாய்
சிறை அறையில் நீ இன்று
இறை அருளை அறிந்தாயா?....

மு.யோகேஸ்வரி-வவுனியா.

### காவிக்குள் காமி

காவிக்குள் ஒளிந்த காமி
உன்னைப் போலெத்தனை சாமி?
இன்னமும் பொறுக்குமோ பூமி

என்.புன்னியமூர்த்தி-அக்கரைப்பற்று.

கட்டைவிரல் தந்தான்.
ஏகலைவன் அன்று!
கட்டழகைத் தந்தவர்கள்
கண்ணீரில் இன்று!
கயவர்கள் காலடியில்
புனிதங்கள், புதையுமென்றால்.
இங்கே!
காவி என்ன?
கடவுளுக்கும் கல்லடிதான்!

து.சர்மிளாதேவி-கலஹா.

### கைவிலங்கு

கடவுளென்ற வேஷம்
காவியுடைக்குள் சல்லாபம்
கடவுளுக்கே சகிக்கவில்லை.
கச்சிதமாயிட்டார் கைவிலங்கு

நாகூர் முகம்மது சித்தீக்-மூதூர்-6.

### சாபம்

கட்டழகு மங்கையர் காமத்தில் நெருங்கிட
கள்ளுண்ட மயக்கம் கூடலில் தோன்றிட
இறைவனைக் காணும் ஆன்மீக நாயகா
இதுவோ உன் அடியார்க்குக் காட்டும் அருள் வழி.
உன்னைக் கண்ட விழிகள் ஒளி இழந்திடும்
போற்றிய நெஞ்சம் அனல் கக்கிடும்
பாவி உனை தொழுத கரங்கள் அழுகிடும்.

இராஜேஸ்வரி பரராஜசிங்கம்- வத்தளை.

## கவிதைப் போட்டி இல-91


# கல்யாணச் சந்தை



சிந்தனைகள் சுழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள்.

சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.03.1995.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 91
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.



அன்பின் தினமுரசே!

நீ சுமந்து வரும் அத்தனை ஆக்கங்களும் வெகு சிறப்பாகவுள்ளன. குறிப்பாக லேடிஸ் ஸ்பெசல், ரசிகனின் இலக்கிய நயம், போன்ற அம்சங்கள் மிகவும் சிறப்பூட்டுவதாக அமைந்துள்ளன. இன்று போல் என்றுமே நீ வாடாத மலராக இருக்க எனது நல்வாழ்த்துக்கள்.

சாந்தி தங்கவேல்-டிக்கோயா.


□□

இதயத்தில் இன்பமாய் இணைந்திட்ட இளந் தங்கமே! "சுடச்சுட காப்பிகுடி, சுடு முன் என்னை நினை" என்பதைப் போல் உன் சூடான அரசியல் செய்திகள் உன் பெயரையே உச்சரிக்கச் செய் கின்றது. 'தாய்' எனும் தொடர் நாவல் என்னை மிகவும் கவர்ந்துள்ளது.

தமிழ்ச் செல்வி பெருமாள்-பறக்கடுவ

□□

உன்
பாப்பா முரசும்
மகா பாரதத் தொடரும்



பிஞ்சுகளையும்-நீ
சிந்தும் எழுத்து
மழையில் நனைய
வைத்ததற்காக
வாழ்த்துக்கள்.

எஸ்.ஏ.எச்.ஷேக் முஹம்மட்-தர்கா நகர்.

□□

அரசியல் தொடர் (அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை), தகவல் பெட்டி, பாப்பா முரசு மற்றும் அனைத்தும் சுவையோ சுவை. ஆனாலும் சிறுகதை பக்கத்தை குறைக்கும் படி கேட்டிருந்தார் ஒருவர். தயவு செய்து சினிமா பகுதியை குறைத்தாலும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் சிறுகதைப் பகுதியை குறைத்துவிட வேண்டாம்.

மு.தெய்வீகரஞ்சனி-பதுளை.

□□

சேதிகளோ புதுசு!
தெவிட்டாது அலசு.
தெளிவாகும் சிரசு
சிறப்பான தினுசு.

அ.லெ.பதுர்தீன்-காத்தான்குடி-1.

□□

தினமுரசின் ஒவ்வொரு பக்கமும் படு சூப்பர். அதிலும் மக்சீம் கார்க்கியின் 'தாய்' நாவல் அற்புதம். ரகுநாதனின் மொழி பெயர்ப்புநடை உண்மையில் பிரமாதம். இதுபோன்று வேற்று மொழி கவிதைகளையும் மொழி பெயர்த்து பிரசுரித்தால் மேலும் வரவேற்கக் கூடியதாக இருக்கும்.

ஜெஸ்மின் ஜுனைட்-தோப்பூர்.

□□

**யோவ்! யாரென்று நினைத்தீர் நம் அரசியல்வாதிகளை? இந்த வாங்கு வாங்குகிறீர். நெற்றிக் கண்ணைத் திறக்கப்போகிறார்கள். நாரதரே-கவனம்!**

**எஸ்.இரவிசங்கர்-கண்டி.**

**தாய் நாவல் தொடர் அற்புதமான தமிழ்நடை. இரகுநாதனுக்கு நிச்சயமாக பொன்னாடை போர்த்தலாம். (பொருத்தமில்லாத ஆட்களுக்கெல்லாம் போர்த்தும்போது பொருத்தமானவருக்கு...?)**

**ஏ.ஸ்.முகைதீன்-குருநாகல்.**

நீ எங்கள் இதய வானில் வாரத்திற்கொருமுறை மின்னி, உலக இருளில் மறைந்து கிடப்பவைகளையுமல்லவோ அவ்வெளிச்சத்தில் தெட்டத் தெளிவுபடுத்துகிறாய்.

ஜவாஹி றிஸ்வான், ஹொரவபொத்தானை.

□□

அன்பு முரசே ! உன் வரவை எதிர் பார்த்து ஏங்கும் ரசிகன் நான். நீ சுமந்து வரும் மக்சீம் கார்க்கீ எழுதும் புதுமைத் தொடரான 'தாய்' என்ற சிந்தனைத் தொடர் மிகவும் சிந்திக்க அருமை..

வீரசிங்கம் ஸ்ரீதரன்-மல்லிகைத்தீவு

□□

பார்புகழ வாரமொரு முறை மலரும் முரசே, நீ தரும் தேன் கிண்ணம், இலக்கிய தொடர் அரசியல் அலசல்கள், அற்புதனின் அரசியல் தொடர் மூலம் எம்மை அசத்தி வருகிறாய். மற்றும் புதிதாக தாய் நாவல் மகாசூலம் தொடர் அனைத்தும் வெகு ஜோர். இன்னும் வரும் தொடர்கள் மூலம் புது புது ஆக்கங்களை தர உனை வாழ்த்துகின்றேன்.

என்.எஸ்.பாபு-ராகல.

எனதன்பின் தித்திக்கும் என் இனிய தினமுரசே!

நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் வெகு ஜோர். வர்ண அட்டை படம் முதல் கவிதை, எக்ஸ்ரே ரிப்போர்ட்,

எனது அருமை முரசே!

நீ வெள்ளி தோறும் வந்து மலை நாட்டில் வாழும் என்னை மட்டும் அல்ல என்னை போன்ற எத்தனையோ அன்பு இதயங்களை கவர்வது மட்டுமல்ல அறிவையும் ஊட்டிக் கொண்டு இருக்கிறாய். நீ தான் எங்களை மறந்தாலும் நாங்கள் உயிருள்ளவரை உன்னை மறவோம். என்றும் நட்சத்திரமாய் பிரகாசிப்பாயாக!

அன்பு பிரியன் ஆர்.சிறிக்குமார்

□□

தேன் பரிசு தரும்
தினமுரசு தினம் உரசு.

□□

மறைந்தசில சம்பவங்கள்
மனதில் பதித்துவைத்து
வளர்ந்துவரும் பின்னவர்கு
வகையாகச் சொல்லுகின்றாய்
புலம்பெயர்ந்து பிறநாட்டில்
புலம்புகின்ற எம்மவர்க்கு
நலங்கூறிச் சேதிகொண்டு
நாடெல்லாம் செல்முரசே.

முல்லைக்கவி-கொழும்பு-13.

□□

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்ட

# புதிய அரசுக்கு புலிகளின் பகிரங்க எதிர்ப்பு!

## சந்திரிக்காமீது சந்தேகம் தெரிவித்து பிரசுரங்கள்!

யாழ் குடாநாட்டிற்கு சமாதான யாத்திரை சென்ற வாசுதேவ நாணயக்கார குழுவினர் முன்னிலையில் பல ஆயிரக்கணக்கான மக்கள் பேரணி ஒன்றை புலிகள் நடத்தினார்கள். பொது ஜனமுன்னணி அரசுக்கு எதிரான புலிகளது முதலாவது பகிரங்க எதிர்ப்பு நடவடிக்கையாக அது அமைந்தது.

(யாழிலிருந்து வர்மா)

### ஜனாதிபதியோடு முரண்பாடு

யாழ் குடாநாட்டிற்கு கிளாலி வழியாக சென்ற சமாதானக் குழுவினர் 17.2.95 அன்று மாலை ஐந்து மணிக்கு யாழ் போய்ச் சேர்ந்தனர்.

கிளாலி இறங்குதுறையில் வைத்து செய்தியாளர்களுக்கு வாசுதேவ நாணயக்கார பேட்டியளித்தார்.

"நான் அரச தரப்பு பிரதிநிதியாக இங்கு வரவில்லை. தமிழ் மக்களின் அபிப்பிராயங்கள், கருத்துக்களை அறிந்து சிங்கள மக்கள் மத்தியில் சமாதானம் குறித்து உண்மையான கருத்துக்களை தெரிவிக்க வுள்ளேன்.

"எனக்கும், ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் இடையே சமாதான முன் முயற்சிகள் தொடர்பாக கருத்து முரண்பாடுகள் உள்ளன.

"இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க தகுதியுடையவர்கள்"

என்று வாசுதேவ நாணயக்கார தனது பேட்டியில் தெரிவித்தார்.

சமாதானக் குழுவைச் சேர்ந்த திரு.வை. பி.டி.சில்வா, பா.உ கருத்துத் தெரிவிக்கும் போது "தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக போராடுவதில் தவறு எதுவும் இல்லை." என்று கூறினார்.

புலிகளின் சார்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வன், 'தமிழீழ காவல்துறை' பொறுப்பாளர் நடேசன் ஆகியோர் கிளாலியில் இருந்து சமாதானக் குழுவினரை அழைத்துச் சென்றனர்.

### புலிகளோடு பேச்சு

18.2.95 அன்று காலையில் சமாதானக் குழுவினர் புலிகளோடு பேச்சு நடத்தினர்.

காலை 09.30 மணிக்கு நடைபெற்ற அந்தச் சந்திப்பில், சிறீலங்கா அரசின் செயற்பாடுகளே பேச்சுவார்த்தையில் தாமதம் ஏற்படக் காரணம் என்று புலிகள் தெரிவித்தனர்.

காலை 09.30 முதல் பிற்பகல் ஒரு மணிவரை சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பு நடைபெற்றுக்கொண்டி ருந்தபோது யாழ் பல்கலைக்கழக கலை பீடத்தின் முன்னால் காலை பத்து மணிக்கு ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமாகியது.

பாடசாலை மாணவ மாணவிகள், அரசாங்க ஊழியர்கள், தனியார்துறை ஊழியர்கள் உட்பட பல்லாயிரம் மக்கள் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பிய வாறு யாழ் அரச செயலகத்தை நோக்கி சென்றனர்.

ஊர்வலம் யாழ் அரச செயலகத்தை சென்றடைந்ததும் புலிகள் சமாதானக் குழுவினரை அங்கிருந்த மேடைக்கு அழைத்து வந்தனர்.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தால் வாசுதேவ நாணயக்காராவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

### எட்டு கோரிக்கைகள்

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரிக்கக் கூடிய தீர்வை அரசு முன் வைக்க வேண்டும்.

பொருளாதார தடை முற்றாக நீக்கப்பட வேண்டும். பூநகரியில் இராணுவத்தை முற்றாக நீக்க வேண்டும். அவ்வாறு நீக்கி முதற்கட்டமாக பூநகரி பாதையை திறந்து விடவேண்டும்.

இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தமிழ் பிரதேசங்களிலிருந்து இராணுவ முகாம்கள், சோதனை முகாம்கள், தடைமுகாம்கள் போன்றவற்றை அகற்றி இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் மீளக் குடியமர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போன்ற கோரிக்கைகள் உட்பட 8 கோரிக்கைகள் மகஜரில் அடங்கியிருந்தன.

எட்டாவது கோரிக்கையில் நிரந்தரமான அரசியல் தீர்வுகாண அரசு விடுதலைப் புலிகளோடு பேச வேண்டும் என்று கூறப் பட்டுள்ளது.

மகஜரைப் பெற்றுக் கொண்டு வாசுதேவ நாணயக்கார திரண்டிருந்த மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அகதி முகாம்க ளுக்கும் சமாதானக் குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளும் சமாதானக் குழுவினருக்கு காண்பிக்கப் பட்டன.

### பிரசுரங்களில் கண்டனம்

ஆர்ப்பாட்டப் பேரணியை முன்னிட்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

அரசுமீது நம்பிக்கையீனங்கள் தெரிவிக்கப் பட்டிருந்தன.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட பிரசுரத்தில்:

"புனர் நிர்மாணம், புனரமைப்பு என்று பதவியில் இருக்கும் அரசாங்கம் பேசி வருகிறது. போக்குவரத்துப் பாதையை திறப்பதற்கு அரசு தயக்கம் காட்டுவது சந்திரிக்கா அரசுமீது சந்தேகத்தை ஏற்படுத் துகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமிய உழைப்பாளர் சங்கம் வெளி யிட்டுள்ள பிரசுரத்தில்:

"சிறீலங்கா அரசு உண்மையாகவே அரசியல் தீர்வு காண்பதில் அக்கறை கொண்டுள்ளதா? என்பதில் தமிழ் மக்களுக்கு நியாயமான சந்தேகம் இருக்கிறது." என்று கூறப்பட்டுள்ளது.

# அரசியல் தந்திரத்தில் புலிகள் தேர்ச்சி!

## சென்றார்-கண்டார்-வந்து சொன்னார்

யாழ் சென்ற சமாதானக் குழுவில் இடம் பெற்றிருந்த முக்கியஸ்தர் ஒருவர் முரசுக்கு தெரிவித்த சில சுவாரசியமான தகவல்கள்:

சமாதானக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த விடுதிக்கு ஆயுதம் தாங்கிய புலிகள் பாதுகாப்பு வழங்கினார்கள்.

### அகதிகள் மத்தியில்

அகதி முகாம்களுக்கு சமாதானக் குழுவினர் சென்றபோது மக்கள் தமது குறைபாடுகளை எடுத்துக்கூறினார்கள். விடுதிப் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த புலிகள் சிலர் அகதிகள் மத்தியில் சாறத்தோடு நின்றதை அவதானிக்க முடிந்தது. அகதிகள் சமாதானக் குழுவினரோடு பேசுவதை அவர்கள் கவனித்துக் கொண்டிருந்தனர்.

### தயாராக வந்தனர்

சமாதானக் குழுவினர் சந்தித்துப் பேசுவதற்காக புலிகளால் ஒழுங்குசெய்யப் பட்ட மக்கள் பலர் தாம் பேசவேண்டிய வற்றை தாள் ஒன்றில் எழுதிக் கொண்டுவந்து அதனை அடிக்கடி பார்த்துக் கொண்டே பேசினார்கள்.

பல்லாயிரக்கணக்கான மக்களை திரட்டி ஊர்வலம் நடத்திய ஒழுங்குமுறை புலிகள் அரசியல் நடவடிக்கையிலும் தேர்ச்சி பெற்றுள்ளதற்கு அடையாளம்.

ஊர்வலத்திலோ, சந்திப்புக்களிலோ புலிகளிடம் எந்தவொரு கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை. மாறாக புலிகள் முன்வைத்த கோரிக்கைகள்தான் மீண்டும் முன்வைக்கப்பட்டன.

புலிகள் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று எந்தக் கோஷமும் எழுப்பப்படவில்லை. அரசு அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று மட்டுமே ஊர்வலத்திலும், மகஜரிலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் தொகுதியில் உள்ள கிட்டு நினைவுப் பூங்காவையும் சமாதானக் குழுவினர் பார்வையிட்டனர். இலங்கையில் எங்குமே அவ்வாறான சிறந்த பூங்காவை தாம் பார்க்கவில்லை என்றார் அந்த முக்கியஸ்தர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட மக்களுக்கு முன்கூட்டியே கோஷங்கள் தயாரித்து வழங்கப்பட்டிருந்தன.

புலிகளது பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களையே வெகுஜன அமைப்பு பிரதிநிதிகளும் எவ்வித மாற்றமும் இன்றி சமாதானக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

ஆயுதபாணிகளாக சீருடைகளோடு கட்டுக்கோப்பாக காட்சியளித்த புலிகளை கண்ட சமாதானக் குழுவினருக்கு வியப்பாக இருந்தது.

அந்த முக்கியஸ்தர் பின்வருமாறு தெரிவித்தார்; **"புலிகளை யுத்தத்தில் வெல்ல அரசால் முடியாது."**

### வெல்ல முடியுமா?

மக்களைத் திரட்டி புலிகள் தமது கோரிக்கைகளை அரசியல்மயப்படுத்தி உள்ளனர்.

அரசாங்கத்தை தனிமைப்படுத்தும் மிகச் சிறந்த அரசியல் தந்திரம் அதுவாகும் என்றார் அந்த முக்கியஸ்தர்.

வெலிக்கடை படுகொலை தொடர் பாகவும், இந்தியப்படைக்கு எதிராக உண்ணாவிரதமிருந்து பலியான திலீபன் புகழ்பாடியும் சமாதானக் குழுவில் சென்ற ஒருவர்பாடல்களை பாடினார். தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் அவர் பாடினார்.

'யுத்தம் வேண்டாம்' என்று வாசுதேவ நாணயக்கார தமிழில் கோஷமிட்டார்.

# "தமிழ் புறக்கணிப்பு தாராளமாக நடக்கிறது"

## தமிழ் பேசும் பா.உ க்கள் ஒரே குரலில் கண்டனம்!

### புத்தளத்தில் ஆணைப் பெண்ணாக்கும் அதிசயம்

"அரசகரும மொழிகளில் ஒன்றாக தமிழ்மொழி இருக்கிறது. ஆனால் இது ஏட்டுச்சுரைக்காய் நிலமையில்தான் காணப்படுகிறது." இவ்வாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.டக்ளஸ் தேவானந்தா கூறினார்.

20.02.1995 அன்று பாராளுமன்ற கட்டிடத்தில் நடைபெற்ற அரசகரும மொழி ஆணைக்குழுவினருக்கும், தமிழ் பேசும் பாரளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பின்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

பிரதியமைச்சர் அலவி மௌலானா, பிரதியமைச்சர் சந்திரசேகரன் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இ.தொ.கா., புளொட், ஈ.பி.டி.பி, தமிழர் விடுதலைக்கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பின்போது சமுகமளித் திருந்தனர்.

புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் அங்கு கருத்துக் கூறும்போது; "சமுர்த்தி திட்டம் என்பதற்கு தமிழில் நல்ல சொற்கள் உள்ளன. அதுபோல பல சிங்கள சொற்கள் தமிழில் நேரடியாகவே தரப்பட்டிருக்கின்றன. கொழும்பில் கடவுச் சீட்டுக்கு தமிழர்கள் விண்ணப்பிக்கும்போது பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு கேட்கப்படுகிறது. தமிழும் அரசகரும மொழி என்னும் போது ஆங்கில மொழி பெயர்ப்பு எதற்காக கேட்க வேண்டும்?" என்று கேள்வி எழுப்பினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளு மன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராஜசிங்கம் மக்கள் வங்கியினால் வெளியிடப்படும் செய்தியறிக்கையை ஆணைக்குழுவினரது பார்வைக்கு காண்பித்தார்.

சிங்களமும், ஆங்கிலமும் மட்டுமே அட்டையில் காணப்படுகிறது. தமிழ் எங்கே என்று அவர் கேள்வி எழுப்பினார்.

யாழ் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் இல்யாஸ், புத்தளத்தில் அகதி முகாமில் உள்ள யாழ் மாவட்ட முஸ்லிம்களது குழந்தைகள் அகதி முகாமில் பிறந்ததாகவே பதிவு செய்யப்படுகின்றனர். அது மட்டுமல்லாமல் சிங்களத்தில் மட்டுமே பதிவு செய்யப்படுகிறது. இதனால் ஆண் குழந்தை பெண் குழந்தை என்றும் தவறுதலாக பதிவு செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன் "அமைச்சுக்களில் தமிழ் தெரிந்த ஊழியர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. தமிழ் தட்டெழுத்தாளர்கள் கூட பற்றாக்குறையாக உள்ளனர் என்று கூறியதோடு தான் இராஜாங்க அமைச்சராக இருந்தபோது ஏற்பட்ட அனுபவங்களையும் விபரித்தார்.

"தமிழ் பேசும் மக்களது பார்வை கூர்மையானது என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை. சிங்கள எழுத்துக்களை பெரிய அளவிலும் தமிழை சிறிய அளவிலும் எழுதுகிறார்கள். அறிவித்தல் மற்றும் பெயர் பலகைகளில் இருமொழி எழுத்துக்களும் சம அளவில் இருக்க வேண்டும்" என்று பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராஜசிங்கம் அமைச்சர் ஒருவரால் தனிச்சிங்களத்தில் அனுப்பப்பட்ட அழைப்பிதழ் ஒன்றை காண்பித்தார்.

பிரதியமைச்சர் சந்திரசேகரன், மு.சந்திரகுமார், க.சிவதாசன், இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜன் அகியோரும் தமிழ் புறக்கணிப்பு தொடர்பாக எடுத்துக் கூறினார்கள்.

# "ஒத்துக்கொண்டவற்றை அரசு செய்யவில்லை"

## நினைவுதினக் கூட்டத்தில் புலிப் பிரமுகர் சாட்டை

"போர் என்றாலும் சமாதானம் என்றாலும் நாம் பலமான நிலையில் இருப்பது முக்கியம்." இவ்வாறு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வன் கூறினார்.

1987ம் ஆண்டு யாழ்ப்பாணம் கைதடியில் வெடிவிபத்தில் பலியான புலிகள் அமைப்பு உறுப்பனர்கள் 10 பேரின் நினைவுதினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய தமிழ் செல்வன் பின்வருமாறு தெரிவித்தார்; "இன்று நாம் பலமாக இருக்கிறோம். நாங்கள் பலவீனமான நிலையில் இருந்திருந்தால் அச்சுறுத்தப்பட்டு அடிமைப்பட்டிருக்கும் நிலை வந்திருக்கும். எங்களது பலத்தின் வளர்ச்சியில் மட்டுமே நிம்மதியான சுதந்திரமான வாழ்க்கை தங்கியிருக்கிறது. போராக இருந்தாலும் சமாதானமாக இருந்தாலும் நாம் பலமாகவே இருக்க வேண்டும்." என்று அவர் கூறினார்.

யாழ் மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் இளம்பரிதி அங்கு உரையாற்றும்போது, "சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக நாம் பல கோரிக்கைகளை முன்வைத்தோம். சிறீலங்கா அரசால் ஒத்துக்கோள்ளப்பட்ட எந்தவொரு விடயமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை." என்று குறிப்பிட்டார்.

# முல்லையிலும் ஆர்ப்பாட்டம்

15.02.1995 அன்று முல்லைத்தீவிலும் புலிகள் அமைப்பின் அனுசரணையோடு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

"சிறீலங்கா அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் சுயநிர்ணய உரிமைகளையும் அங்கீகரிக்க வேண்டும்" போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

ஒட்டுசுட்டானில் உள்ள அரசாங்க பிரதேச செயலகத்தில் உதவி அரச அதிபரிடம் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

# அரசை சாடுகிறார் வாசு

பாராளுமன்றத்தில் ஆளும்கட்சி தரப்பில் உள்ள வாசுதேவ நாணயக்கார அரசுமீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறார்.

யாழ்ப்பாண விஜயத்தின்போது ஜனாதிபதி சந்திரிக்கா மீது வாசு தெரிவித்த குற்றச்சாட்டுக்களை யாழ்ப்பாணத்தில் புலிகளது பிரசார சாதனங்கள் முக்கிய மளித்து வெளியிட்டன.

யாழ்ப்பாணத்தில் வெகுஜன ஒன்றியப் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசிய வாசுதேவ நாணயக்கார தனது தனிப்பட்ட கருத்துக்கள் என்று பின்வருமாறு தெரிவித்தார்;

"தற்போதைய அரசு கடந்த 17 வருடமாக பதவியில் இருந்த ஐ.தே.கட்சி அரசின் கட்டமைப்பின் கீழ்தான் செயற்பட்டு வருகிறது. ஐ.தே.கட்சி ஆட்சியில் வேலை பறிபோனவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படும் என்று கூறிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

"அரசு மீண்டும் யுத்தம் நோக்கி செல்லுமானால் அதனை முறியடிக்கும் வகையில் நாம் செயற்படுவோம், என்று வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நடைபெற்ற கண்டனப் பேரணியையும் வாசுதேவ நாணயக்கார குழுவினர் பார்வையிட்டனர்.

அங்கு வாசுதேவ நாணயக்கார உரையாற்றும் போது,"வடபகுதி மக்கள் தன்னம்பிக்கையுடனும், உறுதியுடனும் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர். சமாதானத்தை கொண்டுவருதாக அரசாங்கம் மக்களுக்கு கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றத் தவறிவிட்டது"என்று தெரிவித்தார்.

# எல்லை தாண்டுகிறார்கள் இந்திய மீனவர்கள்!

யாழ்ப்பாணம் வடமராட்சி கடலில் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசிப்பதாக யாழப்பாணத்தில் 'புலிகளின் குரல்' குற்றம் சாட்டியுள்ளது.

இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிர வேசித்து உள்ளூர் மீனவர்களது வலைக ளுக்கும், வள்ளங்களுக்கும் சேதமேற்படுத்தி வருவதாகவும் 'புலிகளின் குரல்' குற்றம் சாட்டியுள்ளது.

தமக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து மீனவர்கள் யாழ் அரச அதிபரிடமும் முறையிட்டுள்ளனர்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# காதோடு காது



"புதைத்து வைத்த காசுப்பெட்டி, நகைப் பெட்டிகளை கண்டுபிடிக்க முயன்றுள்ளனர்."

உதாரா–

**மட்டக்களப்பில் சின்னக் கிளாலி**

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில்-கொம்மாதுறை முகாமுக்கு மக்கள் சூட்டியுள்ள பெயர்தான் சின்னக் கிளாலி.. நேர்பாதை மூடப்பட்டு இதுகாலவரையும் சுற்றி வளைத்து பயணம் செய்ய வேண்டும் மக்கள். இந்த சோதனை முகாமில்-தப்பினால் சுவர்க்கத்திற்கு போன மாதிரி. மனித உயிருக்கு இம் முகாம் பகுதியில்-பெறுமானமே இல்லை, என்று சொன்ன காலமும் உண்டு. நேர்பாதை திறக்கப்பட்டபின் மக்களும் மகிழ்வாக போக்குவரத்துச் செய்து வருகிறார்கள். மழை காலத்தில் சுற்றுப்பாதை போக்குவரத்து என்பது நினைக்க முடியாதிருந்தது. அத்துணை சிரமம். சிரமங்களை எண்ணிப் பாருங்கள். அப்போது மக்கள் சூட்டிய பெயர் சரிதான் என்று படும்.

**கல்லடி முகாம் பலம் பெறும்**

மட்டக்களப்பு மாவட்டத்தில்- மிகப் பெரிய முகாம்களில் ஒன்றான கல்லடி முகாம்-பலப்படுத்தப்படுகிறது. கண்காணிப்பு அரண்களை புனரமைப்பதும் இன்னொரு ஏற்பாடு. ஏனோ என்று மக்கள் விழிக்கிறார்கள். நிரந்தர முகாம் ஆக்கும் யோசனையும் உண்டாம். இம் முகாம் கடற்கரையை அண்டி அமைந்துள்ளது.

**எல்.ரி.ரி.இ பொடியனுகள்**

மட்டக்களப்புப் பிராந்தியத்தில்-விடுதலைப் புலிகள் இயக்க இளைஞர்கள் வெகுவாக நடமாடி மகிழ்கிறார்கள். உணவகங்களில் உல்லாசமாக உட்கார்ந்து உண்ணுகிறார்கள். கழுத்தில் சயனைட் குப்பி தொங்கும்வரை கவலையும் இல்லை. உடல் நொந்து போகாத காவல் தெய்வமல்லவா சயனைற்.

**பூநகரிப் படங்கள் புளக்கத்தில்**

மட்டக்களப்பு பகுதியில்– 'பூநகரித் தாக்குதல்' சம்பந்தப்பட்ட படங்களை பலர் பார்க்கும் சந்தர்ப்பம்! இயக்கச் செயல்பாட்டை மக்களுக்குத் தெரியப்படுத்தும் முயற்சி இதுவாம். பார்த்தவர்கள் சொல்லுகிறார்கள்–உண்மைச் சம்பவம் அல்லவா? வெளிநாட்டுச் சண்டைப் படங்களை பார்த்த நமக்கு-ஒரு Chance. சிறந்த தயாரிப்பு என்கின்றனர் பார்த்தவர்கள்.

**காவல் அரண்களில் 'கபேடுகள்'**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான காவல் அரண்களில் ஏராளமான 'கபேடுகள்' வரிசைக் கிரமமாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதே வேளை வீதிகளிலும் ஊருகின்றன. மக்களும் பதட்டத்துக்குள்ளாகின்றனர்.

**மாங்கேணியில் காணி எதற்கு?**

மட்டக்களப்பின் வடகோடி கடற்கரைப் பிரதேசம் மாங்கேணி– கிழக்கின் உல்லாசபுரி. ரம்மியமான கடற்கரைப் பிராந்தியம். இப்பகுதியில் இருநூறு ஏக்கர் காணியில் நிரந்தர பாரிய முகாமொன்றை அமைக்கும் முயற்சியாம். ஏனோ?

**தேடுதல் வேட்டை**

பகைமைத் தவிர்ப்பு- அதனையொட்டிய அமைதி ஒப்பந்தம். இக்காலப் பகுதிக்குள் மட்டக்களப்புப் பிராந்திய மக்கள் புத்தியுடன் செயல்பட ஆரம்பித்துள்ளனர். 90 ஜூன் திங்களுக்குப் பின் நிகழ்ந்த அனர்த்த விளைவின்போது புதைத்து வைத்த காசுப்பெட்டி, நகைப் பெட்டிகளை கண்டுபிடிக்க முயன்றுள்ளனர். புல்பூண்டுகள் பிடித்து காடாய் காட்சிதரும் பிரதேசங்களில் தேடுதல் பலனளிக்கவில்லையாம். இலக்குகளைத் தேடிப்பிடிக்க முடியாத அவலம். பாவம் போர் செய்த நஷ்டம்!

**இப்படியும் ஒரு அறிக்கை**

மட்டக்களப்பு பிரதேச பாதுகாப்புப்படை அதிகாரி பிரிகேடியர் சரத் பொன்சேகா சுற்றறிக்கை ஒன்றை சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பியுள்ளார். பகைமைத் தவிர்ப்பு செயல்படும் இவ்வேளையில் திணைக்கள வாகனங்களைப் பயன்படுத்தி-பெருமளவு பொருட்களை ஏற்றி இறக்கும் முஸ்தீபு உள்ளதாக அறிய வருகிறது. தவிர்த்துக்கொள்ளுங்கள். எல்.ரி.ரி.இ.யினர் சங்கடத்துக்குள் உங்களை மாட்டப்பார்ப்பார்கள். உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். பெருமளவில் (Bulk) பங்கீட்டுப் பொருட்கள் எரிபொருட்கள், தடைப்படுத்தப்பட்ட பொருட்கள், யூரியா, இத்தியாதி இன்னோரன்ன இதனுள் அடங்கும். நடு நடுங்கிப் போனார்கள் திணைக்கள அதிகாரிகள்.

**நம்மவர் குரல்**

"சாப்பிட மட்டுந்தான் வாய்திறக்க வேண்டும். இல்லையென்றால் ஆபத்து. மூச்...சத்தம்." வாயை நான் திறப்பதே இல்லை.

# வசதியான இடம்தேடும் வாத்திமார்கள்!

## தேவையில் பாதிகூட இல்லாத ஆசிரியர் தொகை

(திருமலை நிருபர்)

மூதூரைச் சேர்ந்த ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்தில் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. எட்டுப் பாடசாலைகளைக்கொண்ட இப்பிரதேசத்தில் ஆகக் குறைந்த ஆசிரியர்களின் தேவை 115 ஆக இருந்த போதிலும் உண்மையில் 52 ஆசிரியர்களே பணியாற்றுகிறார்கள்.

கல்வித் திணைக்களத்தின் தகவல்களின்படி போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டபோதிலும் அரசியல் வாதிகளின் செல்லப்பிள்ளைகளை வாத்திமார்கள் தங்கள் செல்வாக்கைப் பிரயோகித்து தாங்கள் திருகோணமலைப் பாடசாலைகளில் ஒட்டிக் கொள்வதோடு தங்கள் சகாக்களையும் ஒட்ட வைத்து விடுகிறார்களாம்.

இவ்வாறு வந்த பலர் சொந்த மண்ணுக்குத் திரும்பவிடப்படாமையே இத்தகைய தட்டுப்பாட்டுக்குக் காரணம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஆசிரியர் பற்றாக்குறை சம்பந்தமாகவும் பாடசாலைகளின் தளபாட, கட்டட வசதிக் குறைவுகள் சம்பந்தமாகவும் விருட்சம் கிராம அபிவிருத்தி மன்றம் உடன் நடவடிக்கை மேற்கொள்ளக் கோரும் கடிதங்களை கல்வி உயர்கல்வி அமைச்சர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், திரு.அ.தங்கத்துரை பா.உ. ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி அபிவிருத்தி மன்றம் தனது இன்னொரு கோரிக்கையாக ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்குமாறு சம்பந்தப்பட்டோரைக் கேட்டுள்ளது.

தமது அயல் கிராமங்களான சிங்கள மக்கள் வதியும் இடங்களுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட போதிலும், தங்கள் பகுதி புறக்கணிக்கப்பட்டிருப்பது பற்றியும் அக்கடிதத்தில் ஆழ்ந்த கவலையுடன் சுட்டிக்காட்டியுள்ளது.

# இந்த மாடுகளைக் கவனியுங்கள்!

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை பஸ் நிலையத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து வருவதாகப் புகார் தெரிவிக்கப் படுகின்றது.

கட்டாக்காலி மாடுகளின் உறைவிடமாக இந்த பஸ் நிலையம் மாறிவருவதால் பஸ் சாரதிகளும், பஸ் பிரயாணிகளும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

கல்முனை பஸ் நிலையத்தை கட்டாக்காலி மாடுகள் உறைவிடமாக மாற்றியிருப்பதைப் படத்தில் காண்க.

இக்கட்டாக்காலிகளின் தொல்லையை ஒழிப்பதற்கு சம்பந்தப்பட்டோர் கண்டிப்பான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனப் பிரயாணிகள் கோருகின்றனர்.



# மாத்தளையில் பணம் திரட்டும் பாடசாலை!

## இலவச கல்வி இருந்தும் ஏழைகளுக்குத் தொல்லை!

மாத்தளையில் பிரபல அரசாங்க பெண்கள் பாடசாலையொன்று ஏழைப் பிள்ளைகளிடமிருந்து பணம் திரட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகின்றது. பல்வேறு காரணங்களைக் கூறி, இங்கு கல்வி பயிலும் ஏழைப் பிள்ளைகளை தினமும் பணம் கொண்டு வந்து தருமாறு நிர்பந்திக்கின்றனராம்.

பிள்ளைகளை முதலாந்தரத்தில் சேர்க்கும் பெற்றோர்களை பெயிண்ட், ஓடு, செங்கல், மேசை, கதிரை அல்லது ரூபா 750 பணம் கொண்டு வந்து தருமாறு நிர்பந்திக்கின்றனராம். 750 ரூபா பணத்திற்கு ரசீதும் கொடுப்பதில்லையாம். 5ம் ஆண்டு புலமை பரீட்சை எடுக்கும் பிள்ளைகளுக்கு இலவசமாக வகுப்பு வைக்காது ரூபா 75 வீதம் ஒரு பிள்ளையிடமிருந்து அறவிடுகின்றனராம். வேறு இடங்களில் நடைபெறும் புலமை பரீட்சை வகுப்புக்கு செல்லும் பிள்ளைகளின் அனுமதிப்பத்திரம் பரீட்சை எடுக்க விடாமல் நிராகரிக்கப்படுமென்றும் எச்சரித்துள்ளனராம். 5ம் ஆண்டு புலமைப்பரீட்சை பணமும் ஒழுங்காக கொடுபடுவதில்லையாம். இவ்வூழல் விடயங்களை கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வருமாறு ஏழைப் பெற்றோர் பெரிதும் அங்கலாய்க்கின்றனர்.


## விளம்பரப் பகுதி

கசெட் இல. 357. ஆரம்பம்: 1984
(அரச அங்கீகாரம் பெற்றது)



இணைந்த பல்கலைக்கழக
கணணி
பயிற்சி நிறுவனம்.

ஆதாரம் அற்ற மாணவ மாணவிகளுக்கு வெளிநாட்டு நன்கொடையில் கற்கை நெறிக்கு ஒரு பொன்னான சந்தர்ப்பம்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குகோ மேற்படிப்புகளுக்கோ பயிலும் பாடங்களில் திறமை சித்தி பெற்றவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

IBM
- COMPUTER BUISNESS MANAGEMENT
- COMPUTER ANALYSIS AND DESINING
- COMPUTER PROGRAMING
- COMPUTER SCIENCE

- AIR CRAFT
- PRACTICAL RADIO & T.V.
- ROBOTIC
- TELECOMMUNICATION
- AUTO MOBILE
- MARINE
- COMPUTER
- PRACTICAL ELECTRONIC
- REF:AIR CONDITION

இலங்கையில் பேராசிரியர்களாலும் மிகவும் தேர்ச்சி பெற்ற பொறியில் பயிற்சியாளர்களாலும் தமிழ், சிங்கள, ஆங்கில, மொழிமூலம் விரிவுரைகள் போதிக்கப்படும் ஒரே ஒரு நிறுவனம்

M. E. E. T. I.
OF LONDON CEYLON
No. 22-2/1, GALLE ROAD, DEHIWALA.
(22-2/1, 2வது மாடி, காலி வீதி, தெகிவளை, கமிஹிரி ஹோட்டலுக்கு அருகாமையில்)



அற்புத மலையாள மாந்திரீகம்

மலையான மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா! காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா! அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 492/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 251/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 128/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் THINAMURASU VAARAMALAR
த.பெ.இல:1772 P.O.BOX: 1772
கொழும்பு COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

புத்தகம் வாடகைக்கு

பிரபல்ய இந்திய– இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் அங்கத்துவ அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படும்.

FALCAN INTERNATIONAL
LENDING LIBRARY
S-11, THIRD FLOOR
COLOMBO CENTRAL SUPER MARKET
COLOMBO-11.

தேவை

கொழும்பு- 11, 12ல் அமைந்துள்ள நூலகம், புத்தக வியாபார நிலையத்தில் கடமையாற்றக்கூடிய பெண்கள் தேவை.
விண்ணப்பிக்குக:
விளம்பர இல: B-101
C/O தினமுரசு வாரமலர்
த.பெ.இலக்கம்: 1772.
கொழும்பு.

பிறைட் - இன் தபால் மூலம் கல்விகள்
(ஒளிமயமான எதிர்காலத்திற்கான வழிகாட்டி)

90 நாட்களில் பேச்சு ஆங்கிலக் கல்வி
90 நாட்களில் பேச்சு சிங்களக் கல்வி
ஆண்டு 5 புலமை பரிசில் முன்னோடிப்பயிற்சி
G.C.E. (O/L) முன்னோடிப் பயிற்சி
கடைக் கணக்கு எழுதும் முறை
மேலதிக விபரங்கட்கு

Mercantile Ads

BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR, P.O.BOX. 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO - 11. (T.P : 434770)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்




## நாரதர்

# புலிகளின் தனியரசும் தடுமாறும் அரசும்

□□

புலிகளது நிர்வாக கட்டமைப்புக்கள் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி துரிதமாக விரிவாகி வருகின்றன.

இரு வாரங்களுக்கு முன்பாக தொழில் வங்கியும் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டு விட்டது.

அரசாங்கம் வழங்கும் சம்பளத்தில் அரச ஊழியர்களையும் தமது நிர்வாகத்தில் சேர்த்துள்ளது புலிகளது புத்திசாலித்தனம்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக யார் இருந்தாலும் தாண்டிக்குளத்தை தாண்டி கொழும்பு வரும்போதுதான் அவர் ஜீ.ஏ(அரச அதிபர்) தாண்டிக்குளத்தை தாண்டி யாழ்ப்பாணம் சென்றால் அவர் எல்.ஏ (புலிகளது ஏஜன்ட்)

யாழ் குடாநாட்டில் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள அரச ஊழியர்கள் புலிகளது நிர்வாகத்திற்கு ஏற்ப செயற்படவேண்டும்.

இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள தமிழ் அரசாங்க ஊழியர்களும் புலிகளது உத்தரவுகளுக்கு மறைமுகமாக கட்டுப்பட்டே செயற்படுகிறார்கள்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் பகுதிகளில் நடைபெறும் அரச நிர்வாக செயற்பாடுகள் குறித்த புள்ளி விபரங்களை புலிகள் விரல் நுனியில் வைத்திருக்கிறார்கள்.

சில அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளில் இருந்து மாதாந்த நடவடிக்கை அறிக்கைகள்கூட புலிகளுக்கு ஒழுங்காகப்போய் சேருகிறது.

வவுனியாவில் புளொட் அமைப்பின் தலையீட்டால் புலிகளுக்கு ஆதரவாளர்கள் என்று கருதப்பட்ட அரச அதிகாரிகள் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

அதில் முக்கியமானவர் வவுனியா அரச அதிபராக இருந்த தில்லை நடராஜா. இப்போது கிளிநொச்சி அரச அதிபராக இருப்பதால் முழுமையான எல்.ஏ போன்றே அவர் நடந்துகொள்ள வேண்டியிருக்கும்.

தமது குடும்பங்கள் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருப்பதால் புலிகளை அனுசரித்துப்போக வேண்டியிருப்பதாக தமிழ் அரச அதிகாரிகள் சிலர் சொல்வதை முற்றாக மறுதலிக்க முடியாது.

அரசாங்கத்தின் கண்டிப்போ, இடமாற்றங்களோ புலிகளது ஆதிக்கம் தமிழ் அரச அதிகாரிகள் மத்தியில் இருப்பதை தடுக்கப் போதுமானவையல்ல.

புலிகளது சொற்படி நடக்க வேண்டாம் என்று யாழ் குடாநாட்டில் உள்ள அரச ஊழியர்களுக்கு அரசாங்கம் உத்தரவிட முடியாது.

அவ்வாறு உத்தரவிட்டால் யாழ் குடாநாட்டில் தனது நிர்வாகம் உண்டு என்று சொல்ல பெயருக்காக இயங்கும் நிர்வாகப் பிரிவுகளைக்கூட அரசாங்கம் மூடவேண்டியதாகிவிடும்.

புலிகளது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு 'தமிழீழ தேசியக் கொடி எனப்படும் புலிக்கொடியை ஏற்றிவைக்கும் அரச அதிகாரிகளுக்கும் தம்மை அரசாங்கம் ஒன்றும் செய்ய முடியாது என்று தெரியும்.

பாடசாலை மாணவர்களுக்குத்தான் ஒரு குழப்பம்.

புலிகளும் பரீட்சை நடத்துகிறார்கள். அரசாங்கமும் பரீட்சை நடத்துகிறது.

உங்கள் தாய்நாடு எது? நம் நாட்டின் தேசியக் கொடி என்ன?

இந்தக் கேள்விக்குப் புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் உள்ள மாணவர்கள் விடை எழுதுவதற்கு கூர்மையான ஞாபகசக்தி வேண்டும்.

பரீட்சை யாரால் நடத்தப்படுகிறது என்பதைப் பொறுத்தே விடை எழுதவேண்டும்.

புலிகளால் நடத்தப்படும் 'செஞ்சோலை' சிறுவர் இல்லத்தில் தொடங்கி சிறுவர்களுக்கு "தாய் நாட்டின் பெயர் தமிழீழம். தேசியக் கொடி புலிக்கொடி. அதில் சிவப்பு மஞ்சள் என்னும் இரு நிறங்கள் காணப்படும்" என்றே சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

தமிழீழ பொதுக் கல்வி தேர்வு வருடா வருடம் புலிகளால் நடத்தப்படுகிறது.



அரசு நடத்தும் க.பொ.த. சாதாரணதர பரீட்சை போன்றதே அதுவாகும்.

புலிகளது தொழில் வங்கியில் வேலை பெறவேண்டும் என்றால் த.பொ.க. தேர்வில் சித்தியடைந்திருக்கவேண்டும் என்று கூறப்படலாம்.

நிதி, நீதி, கல்வி, போக்குவரத்து, புனர்நிர்மாணம், என்று சகல துறைகளிலும் தமக்கான ஒரு தனி நிர்வாகத்தை உருவாக்கியுள்ளனர் புலிகள். அந்த நிர்வாக சேவைகளுக்கு அரச நிர்வாக ஊழியர்களை பயன்படுத்துவதோடு, தாமே ஊதியம் கொடுத்து புதிய ஊழியர்களையும் கொண்டுள்ளனர்.சமீபத்தில் முல்லைத்தீவில் தாமே தேர்வு நடத்தி தொண்டர் ஆசிரியர்களை நியமித்து சம்பளம் வழங்கியுள்ளனர் புலிகள்.

சில குறைபாடுகளைக் கொண் டுள்ள போதிலும் புலிகளது நிர்வாகம் மோசமல்ல என்ற கருத்து மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

வீட்டிலுள்ள பட்ட மரத்தை வெட்டக் கூட புலிகளிடம் அனுமதி கேட்கவேண்டியிருக்கிறதே என்பது போன்ற முணுமுணுப் புக்கள் இருந்தாலும் அனைத்து அசைவுகளையும் தமது கட்டுப்பாட்டில் புலிகளால் நிர்வகிக்க முடிந்துள்ளமை ஆச்சரிய சாதனைதான்.

டீசல் விலை ஏற்றம் பற்றி தென்னிலங் கையில் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் மண்ணெண்ணெய் 35 ரூபா. பெற்றோல்,டீசல் வாகனங்களை மண்ணெண்ணையில் ஓடக்கூடிய வகையில் மாற்றி அமைத்துள்ளனர்.

தமிழீழத்தை குறிக்கும் த. என்ற எழுத்தில் தொடங்கும் இலக்கத்தகடுகளோடு தனியார் வாகனங்கள் ஓடித் திரிகின்றன.

தமிழீழப் போக்குவரத்துப் பிரிவில் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் வரிகள் செலுத்த வேண்டும். அரசுக்கு செலுத்தத் தேவையில்லை.

தாண்டிக்குளம் வழியாக வாகனத்திற்குரிய பற்றரிகள் கொண்டு செல்ல வேண்டுமானால் வாகன அனுமதிப் பத்திரம் காட்டுமாறு இராணுவத்தினர் கேட்கிறார்கள்.

எப்படிக் காட்ட முடியும்? 1990ம் ஆண்டிலிருந்து புலிகளிடம் தான் வாகன அனுமதிப்பத்திரம் பெறுகிறோம் என்று படையினரிடம் சொல்லவா முடியும்.

வடக்கிலிருந்து வந்தால் தாண்டிக்குள தடை முகாமை தாண்டிய பின்னர் தான் அரச நிர்வாகம் ஒன்று இருக்கிறது என்ற உணர்வே ஏற்படுகிறது.

ஆக, மொத்தத்தில் புலிகளது தனியரசு அரசாங்கத்தின் உதவிகளையும் மறைமுகமாக பெற்றுக் கொண்டு கச்சிதமாக வளர்ந்து புஸ்டியாக நிற்கிறது.

அறவிப்புக்கள் தவிர எந்தவொரு செயற்பாட்டையும் புலிகளது நிர்வாகம் ஊடாகவே அரசு வடக்கில் செய்ய வேண்டியிருக்கும்.

எந்தவொரு தீர்வு திட்டமானாலும் தமது நிர்வாகக் கடமைகளை உள்ளடக்கியே அமைய வேண்டும் என்று புலிகள் கூறியிருக்கிறார்கள்.

தமது கட்டமைப்புக்கள் கற்பனை ராச்சியமாக காணாமல் போவதை புலிகள் அனுமதிக்கப் போவதில்லை.

அவற்றை அனுமதிப்பது என்பது அரசாங்கத்தைப் பொறுத்தவரை நினைக்கவே நெஞ்சு அதிரும் காரியமாகும்.

சமாதானம் பற்றி அழகாகப் பேசும் போது சிரமங்கள் இருக்காது.

செயலில் இறங்கும்போது தான் உண்மை நிலவரங்கள் தடுமாறவைக்கும். அச்சுறுத்தும். நடைமுறை எப்போதுமே பேசுவதைவிட கசப்பானது. தேவையானது துணிச்சல். ■

செய்திச் சுதந்திரம் பற்றி பேசப்பட்டாலும் அரசாங்கம் ஓர் உத்தரவை உறுதியாகப் பிறப்பித்திருப்பதாகத் தகவல்.

அரச கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய வெகுஜன தொடர்பு சாதனங்களில் புலிகளை பாதிக்கக்கூடிய செய்திகளை தவிர்க்குமாறு கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தொலைக்காட்சி, பத்திரிகைகள், வானொலி ஆகிய அரச கட்டுப்பாட்டிலுள்ள வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு பொதுவாக அந்த உத்தரவு பொருந்துகிறது.

பேச்சுவார்த்தை நடைபெறும் நேரத்தில் புலிகளை எரிச்சல் அடையாமல் பார்த்துக்கொள்வதே அரச தரப்பின் நோக்கம்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகளதும், புலிகளது கட்டுப்பாட்டிலுமுள்ள பிரசார சாதனங்கள் வேறு விதமான போக்கையே தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றன.

அரசு நியாயமாக நடந்துகொள்ளுமா? என்ற சந்தேகத்தை எழுப்புவதில் ஆரம்பித்து அரசு நியாயமாக நடந்து கொள்ளப் போவதில்லை என்று இப்போது சொல்லத் தொடங்கிவிட்டன.

அரசோடு பேசுவது என்பது அரசுக்கு நல்ல பெயர் சம்பாதித்து கொடுப்பது என்று அர்த்தமல்ல.

அவர் நல்லவர்-வல்லவர் என்று இலங்கை அரசுத் தலைவர்களை புகழ்ந்துகொண்டு பேச்சு நடத்துவது கூட்டணியின் காலம்.

நல்லவர்கள் என்று நம்புவதற்கில்லை. ஆனாலும் நாம் பேச்சுக்கு எதிரானவர்களல்ல. ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்க்கிறோம் என்று கூறிக்கொண்டு பேச்சு நடத்துவது புலிகளது பாணி.

வாசுதேவ நாணயக்கார குழுவினர் யாழ்ப்பாணம் சென்று திரும்பியிருக்கிறார்கள்.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்களும் அமோக முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

ரூபவாஹினி தொலைக்காட்சியிலும் வாசுவின் விஜயமும், புலிகள் கை குலுக்கி வரவேற்றதும் வெகு சிறப்பாகக் காட்டப்பட்டன.

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் வாசுவின் விஜயத்தையும் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளில் ஒரு அங்கமாக சிலர் நினைக்கலாம்.

ஆனால், வாசுதேவ நாணயக்கார இனப்பிரச்சனை தொடர்பாக தனித்துவமான கருத்துக்களை கொண்ட ஒருவர்.

தமிழ் மக்கள் பிரிந்துபோகக்கூடிய சுயநிர்ணய உரிமையை கொண்டவர்கள். அதனை அங்கீகரிக்கவேண்டும் என்ற கருத்து வாசுவுக்கு இருக்கிறது.

இனப்பிரச்சனையில் அரசாங்கம் கொண்டுள்ள கருத்தைவிட மேலும் வெகுதூரம் முன்னே சென்று சிந்திக்கிறார் வாசு.

யாழ்ப்பாணத்தில் வாசுதேவ நாணயக்கார தெரிவித்த சில கருத்துக்களை அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

ஆனால், புலிகளது வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் யாழ் குடாநாட்டு மக்களது காதுகளில் அதனைப் போடத் தவறவில்லை.

**"எனக்கும் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் இடையே சமாதான முன் முயற்சிகள் தொடர்பாக கருத்து முரண்பாடுகள் உள்ளன. வடபகுதி மீதான பொருளாதார தடையை முற்றாக நீக்கும்படியும், பாதுகாப்பான போக்குவரத்து பாதை ஒன்றை திறந்து விடும்படியும் ஜனாதிபதி சந்திரிக்காவை நான் வலியுறுத்தியுள்ளேன்."**

என்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களுக்கு தெரிவித்துள்ளார் வாசு.

இதனை புலிகளது வானொலியும், யாழ் குடாநாட்டு பத்திரிகைகளும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

17ம் திகதி நடத்துவதாக இருந்த ஆர்ப்பாட்டத்தை 18ம் திகதியே நடத்தினார்கள் புலிகள்.

வாசு குழுவினர் 17ம் திகதி மாலையில் தான் வந்து சேருவார்கள் என்று தெரிந்தமையால் ஆர்ப்பாட்டம் ஒருநாள் தள்ளி வைக்கப்பட்டு நடந்தது.

ஆயிரக்கணக்கான மக்களை வீதியில் இறக்கி அவர்கள் மூலமே 'பொருளாதார தடை முற்றாக நீக்கப்படவேண்டும், பூநகரிப் பாதை" திறக்கப்படவேண்டும், கடலோரத் தடை அகற்றப்பட வேண்டும்.' போன்ற கோரிக்கைகளை கோஷம் போடவைத்தனர் புலிகள்.

அந்தக் காட்சியை வாசுதேவ நாணயக்கார உட்பட சமாதான குழுவினரை வியந்துபோய் காண வைத்து தமது அரசியல் பலத்தை நிரூபித்தனர் புலிகள்.

இங்கே நீங்கள் கண்டதைச் சென்று தெற்கில் தெரிவியுங்கள் என்று வாசு குழுவினரை புலிகள் வழியனுப்பியதோடு சமாதானக் குழுவின் பயணம் இனிதே நிறைவேறியது.

வடக்கில் தாம் கண்டதை தெற்கில் வாசுதேவ நாணயக்கார சொல்லத்தான் வேண்டும். ஆனால் வாசு குழுவினர் புலிகளிடம் கேட்டதை அவர்கள் செய்யப் போவதில்லை.

அரசியல் தீர்வை புலிகள் முன்வைக்க வேண்டும் என்று வாசு குழுவினர் புலிகளிடம் கேட்டனர்.

தமிழீழத்திற்கு குறைந்த எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் புலிகள் தாமாக முன்வைக்க மாட்டார்கள். ஆனால், மாற்றுத் திட்டத்தை அரசு முன்வைத்தால் பரிசீலித்து கருத்துச் சொல்வார்கள்.

இதுவே புலிகளது உறுதியான நிலைப்பாடு. தெற்கிலிருந்து வாசு குழுவினர் மட்டுமல்ல, தென்னிலங்கையே திரண்டு போய் கேட்டாலும் புலிகளது நிலைப்பாடு மாறாது.

ஆக, வாசு குழுவினரது விஜயம் புலிகளது அரசியல், இராணுவ நிலைப்பாடுகளில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தாவிட்டாலும், தென்னிலங்கையில் இனவாதத்திற்கு எதிரான மனப்போக்குகள் மேலும் வளர உதவும்.

## அதிரடி அய்யாத்துரை



வரவு-செலவு விவகாரத்திலை அதிகார தரப்பின் வெகுஜன பிரதிநிதிகள் மத்தியிலும் அதிருப்தி நிலவியதாம். அதாலை மேலிடம் உஷாராய் இருந்ததாம். சபையிலை வாக்கெடுப்பிலை பாதகம் வந்துவிடக்கூடாது எண்டதாலை தமிழ் தரப்பின் ஆதரவும் கேட்கப்பட்டதாம். நாங்கள் உங்களோடுதான் என்று தமிழ் பிரதிநிதிகள் ஒரே குரலில் சொல்லிப்போட்டினம். தங்களுக்குள் ஒன்று படுகினமோ இல்லையோ இந்த விசயங்களிலை விட்டுக்கொடுக்க மாட்டினம்.

கூட்டான கட்சியின் நீலமானவருக்கு பலத்த... பலத்த.... பலத்த.... பாதுகாப்பு! அவர் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டால் ஒரு மணி நேரத்துக்கு முன்னமே பாதுகாப்பாளர்கள் வந்து தோட்டமிடுகினமாம். அதிகார பாதுகாப்போடு வந்தே அதிகாரமுள்ளவைக்கு எதிரானவர் மாதிரிப் பேசிப்போட்டுப் போறார் மனுசன். எவ்வளவு புத்திசாலித்தனம் பார்த்தியளோ? சட்டத்துறையிலை மட்டுமில்லை அரசியல்துறை சூக்குமங்களையும் அண்ணர் கப்பென்று பிடிச்சுப்போட்டார்.

கிழக்கின் தனித்துவ தலைவர் இம்முறை புனித பயணம் செய்ய முடியேல்லை. சபை வாக்கெடுப்பு நேரத்திலை அவர் நிக்க வேணும் எண்டு மேலிடம் விரும்பியதுதான் காரணமாம்.

அரச ஆங்கிலப் பத்திரிகை பூநகரி விவகாரத்தை ரெண்டு எழுத்தார் கைவிடப்போகினம் எண்டு செய்தி போட்டது. செய்தி வந்து நாலு நாள் முடியுமுன்னரே பூநகரியை திற எண்டு யாழ்ப்பாணத்திலை அமர்க்களமான ஊர்வலம். செய்திச் சுதந்திரம் என்பது செய்திகள் மீது சனத்துக்கு நம்பிக்கை ஏற்படவும், உண்மைகளை அறியவும்தான் எண்ட விசயத்தை இனியாவது புரிந்துகொள்ளவேணும்.

என்ன பிரச்சனைக்கு எவர் போனாலும் ரெண்டு எழுத்தார் 'ஐயா வாங்கோ' எண்டுதான் வரவேற்கினமாம். அதாலை யாழ்ப்பாணத்திலை சனம் நல்ல விதமா பேசுகினம். ஆனால் பாருங்கோ, ரெண்டு எழுத்தாரின் நீதிமன்றங்களை நினைச்சாத்தான் சனம் கொஞ்சம் கலங்குதுகள். அனுபவம் குறைஞ்ச பிள்ளைகள் பார்த்துப் பாராமல் தண்டனையை அள்ளிக்கொடுத்துப்போட்டா என்ன செய்யிறது.

யாழ் குடாநாட்டிலை இருந்து வந்த நண்பர் ஒருவர் சொன்ன ஜோக் ஒண்டு. "படைத்தவன் பிரம்மன். படைப்புத் தொழிலும் ஒரு 'பி' கையில், எங்களைக் காத்தலும், அழித்தலும் இன்னொரு 'பி' கையில்." என்ன உங்களுக்கும் விளங்குதோ? ஏன் விளங்காமல் போகுது.

அதிகாரமுள்ள மேலிடத்தாரை எத்தனை மணி நேரம் சந்திச்சு பேசினது எண்டும் அறிக்கையிலை தெரிவிக்கிறதுதான் லேட்டஸ்ட் ஸ்ரைல். கூட்டான தமிழ் கட்சியும் அதனை பின்பற்றத் தவறேல்லை. இந்த இடத்திலை எனக்கொரு சந்தேகம். ரெண்டு எழுத்தாரும் அதிகார தரப்பும் பேசும்போது யாரும் குறுக்கிடக்கூடாது எண்டுபோட்டு தாங்கள் மட்டும் குறுக்காலை ஓடிப்போய் அதிகாரப் பரவலாக்கல் பற்றி கூட்டான கட்சி பேசினது மட்டும் என்ன நியாயம்? இல்லைக் கேட்கிறேன் என்ன நியாயம்? முன்னுக்குப் பின் முரணா நடக்கிறதை இனியாவது கைவிட்டா என்ன?

அந்தக்கால இலக்கியங்களை படிச்சு புதுக்கருத்து உருவாக்குவது உற்சாகமான விசயமல்லோ. தமிழக கவிஞர் அப்துல் ரகுமான் ராமாயணத்தை அலசி ஒரு புதுக்கருத்து சொல்லுகிறார்.

"இராமா யணத்தில்
இணையற்ற வில்லாளி
இராமனல்ல கூனிதான்.
இராமன் வளைத்த வில்லோ
இற்றுப் போய் கிடந்த வில்.
கூனியோ-யாராலும்
வளைக்க முடியாத
மங்கை கையேகி
உள்ளத்தை வளைத்து
உடைத்து விட்டாள்.
தான் அறுத்துக்கொண்டு
வளைந்தவில் இந்த வில்தான்."

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அச்சுக் கூடத்தில் சிந்திய இரத்தம்

**16**

அற்புதன் எழுதுவது

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## இலங்கை வரலாற்றில் முதல் பெரும் கொள்ளை!

## அரசியல் தொடர்



நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் தங்கத்துரை

### பிரபாவின் முடிவு

**1981ம்** ஆண்டில் நடைபெற்ற அரச பயங்கரவாதம், ஆயுதப் போராட்டமே ஒரே பாதை என்ற நம்பிக்கைக்கு உரமிட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இளைஞர்களுக்கும் இடையிலான விரிசல் அதிகமாகியது.

உமா-சுந்தரம் குழுவினர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) என்னும் பெயரில் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

1981ம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பொங்கல் வாழ்த்துக்களை வெளியிட்டது.

அதேசமயம் புலிகள் என்ற பெயரையும் உமா-சுந்தரம் குழுவினர் பயன்படுத்தி வந்தனர்.

'புதிய பாதை' பத்திரிகையும் தொடர்ந்து வெளிவந்து கூட்டணியினரை சாடிக்கொண்டிருந்தது.

சுந்தரம் ஒரு சுறு சுறுப்பான போராளி. ஆயுதங்களைக் கையாளுவதிலும் தேர்ச்சியானவர்.

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத் தாக்குதலில் துணிச்சலாக செயற்பட்டு அந்த தாக்குதலை வெற்றிகரமாக நடத்தி முடித்தவர் சுந்தரம்.

சுந்தரத்தை 'மண்டையில் போட வேண்டும்' என்று முடிவு செய்தார் பிரபாகரன்.

யாழ் வெலிங்டன் திரையரங்குக்கு முன்பாக இருந்தது சித்திரா அச்சகம்.

அங்குதான் 'புதிய பாதை' பத்திரிகை அச்சிடப்பட்டது.

ஆக்கங்கள் கொடுக்கவும், அச்சிடப்பட்ட ஆக்கங்களை சரிபிழை பார்க்கவும் சுந்தரம் சித்திரா அச்சகத்திற்கு வந்து செல்வார்.

சுந்தரத்தை அச்சகத்தின் உள்ளே வைத்து சுடவேண்டும் என்று திட்டமிடப்பட்டது.

### சுந்தரத்துக்குக் குறி

2.1.1982 அன்று வழக்கம்போல சித்திரா அச்சகத்திற்கு வந்தார் சுந்தரம்.

அவர் உள்ளே சென்று அச்சிடப்பட்ட ஆக்கங்களை பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

அச்சகத்தின் ஜன்னல் ஒன்றின் வழியாக சுந்தரத்தை குறிபார்த்தது ஒரு கைத்துப்பாக்கி.

வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சுந்தரத்தின் உயிர் பிரிந்தது.

முதன் முதலில் இயக்க மோதல் பகிரங்கத்திற்கு வந்தது அன்றுதான்.

இயக்கங்களின் முரண்பாடு துப்பாக்கியால் தீர்க்கப்பட்ட முதல் சம்பவமும் அதுதான்.

அதற்கு முன்னர் புலிகள் இயக்கத்தின் உள் இயக்கப் பிரச்சனையில் சரவணன் எனப்படும் பற்குணராசா, மட்டுநகர் மைக்கல் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

ஆனால், இரு பிரிவாக இயங்கிய அமைப்புக்களிடையே நிலவிய முரண்பாடு துப்பாக்கியால் தீர்க்கப்பட்டது சுந்தரம் கொலையில் தான் ஆரம்பித்தது.

அச்சகத்தில் வைத்து சுந்தரம் கொல்லப்பட்டதிலும் ஒரு நோக்கம் இருந்தது.

'புதிய பாதை' பத்திரிகையை அச்சிடுவதற்கு வேறு அச்சகங்கள் முன்வராமல் இருக்க வேண்டும். அதற்கான அச்சுறுத்தலாகவே 'புதிய பாதை' அச்சிடப்பட்ட சித்திரா அச்சகத்தில் வைத்தே சுந்தரத்தை பிரபா அணியினர் தீர்த்துக்கட்டினார்கள்.

சுந்தரம் கொலை நடப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர்மட்டக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அக்கூட்டத்தில் பேசிய அமிர்தலிங்கம் 'புதிய பாதை' வெளிவராமல் தடுப்பதாகக் கூறியிருந்தார் என்று 'புதிய பாதை' குழுவினர் தெரிவித்தார்கள்.

சுந்தரம் கொலையை அடுத்து பிரபாகரனையும், அமிர்தலிங்கத்தையும் கண்டிக்கும் துண்டுப்பிரசுரங்கள் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்டன.

'சுந்தரம் புலிப்படை' என்ற பெயரிலும் பிரசுரங்கள் வெளியாகியிருந்தன.

இயக்க மோதல்களை வேதனையோடு நோக்கினார்கள் மக்கள். பிரசுரங்கள் பரபரப்பாக வாசித்தறியப்பட்டன.

### பிரபா அணி விளக்கம்

சுந்தரம் தமது இயக்க ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்தார் என்றும், தமது இயக்க பெயரை பயன்படுத்தினார் என்றும் அதனால் மரணதண்டனை விதிக்கப்பட்டதாகவும் பிரபாகரன் அணியினர் கூறினார்கள்.

இயக்க மோதல்கள் பகிரங்கத்துக்கு வந்தமை இலங்கை புலனாய்வுப் பிரிவுக்கு வாய்ப்பாக அமைந்தது.

'புதிய பாதை' தொடர்பாகவும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் குறித்தும் விசாரணைகள் நடத்தப்பட்டன.

இதனால் தமிழீழ விடுதலைக் கழகம் என்ற பெயரில் பகிரங்கமாக இயங்க முடியாமல் போனது.

தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி என்ற பெயரில் இயங்கிய இளைஞர்கள் பலர் உமாமகேஸ்வரன் தலைமையில் செயற்பட முன்வந்தனர்.

அவர்களில் ஒருவர் மட்டக்களப்பைச் சேர்ந்த இரா.வாசுதேவா.

இரா-வாசுதேவாவை அமைப்பாளராக கொண்டு தமிழீழ விடுதலைக் கழகம் என்றும் ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தலைமறைவாக இயங்கியது.

அதன் தலைமையில் மக்கள் அமைப்பாக 'தமிழீழ விடுதலைக் கழகம்' பகிரங்கமாக செயற்பட்டது. புலனாய்வுத்துறையினரை ஏமாற்றவே அந்த முயற்சி.

### மற்றொரு திட்டம்

இதற்கிடையே ஒரு முக்கிய நடவடிக்கை பற்றிக் கூறவேண்டும். பிரபாகரன் அணியினரும், குட்டிமணி, தங்கதுரை குழுவினரும் மீண்டும் ஒரு பாரிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

நீர்வேலியில் இருந்த வங்கியில் இருந்து பெருந்தொகையான பணம் யாழ்நகர் வங்கிக்கு கொண்டு செல்லப்படும் தகவல் அவர்களுக்குக் கிடைத்தது.

பலத்த பொலிஸ் காவலோடு பணம் கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

எனவே-மிகத் திட்டமிட்டு துணிச்சலான தாக்குதல் ஒன்றை நடத்தவேண்டும். சற்றுப் பிசகினாலும் திட்டம் தோல்வி அடைந்துவிடும்.

பணம் கொண்டு செல்லும் முறையையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஓரிரு தடவை கண்காணித்தனர். நடவடிக்கைக்கு தயாராகினர்.

பிரபாகரன், குட்டிமணி, தங்கத்துரை, சிறீ சபாரத்தினம், ஒபரோய் தேவன் போன்ற முக்கியமானவர்களே நேரடியாக களத்தில் இறங்கினார்கள்.

### தாக்குதல்

வாகனங்கள் பணத்தோடும், பொலிசாரோடும் வந்தன. தாக்குதல் ஆரம்பமானது. பாதுகாப்புக்கு வந்த பொலிசார் கொல்லப்பட்டனர். பணம் போராளிகளது கைக்கு வந்தது.

1981ம் ஆண்டு நடைபெற்ற அந்தக் கொள்ளை நடவடிக்கையே இலங்கையில் நடைபெற்ற மிகப் பெரிய கொள்ளை என்று அப்போது வியக்கப்பட்டது.

கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின் பெறுமதி 82 இலட்சம் ரூபாய்கள்.

அப்போது இது மிகப் பெரிய தொகை.

இலங்கை அரசு திகைத்துப்போனது. யாழ்ப்பாணம் எங்கும் தேடுதல் வேட்டை நடத்தியது.

82 இலட்சம் ரூபாய் பணத்தோடு யாழ் திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் இருந்த ஒபரோய் தேவன் வீட்டில் மறைந்து இருந்தனர் குட்டிமணி, தங்கத்துரை, பிரபாகரன் குழுவினர்.

**"தாக்குதல் நடவடிக்கையின்போது பொலிசார் ஒருவரது துப்பாக்கி பிரபாகரனை குறிபார்த்தது.**

**அதனைக் கண்டுவிட்ட சிறீ சபாரத்தினம் தனது துப்பாக்கியால் அந்த பொலிஸ்காரரைச் சுட்டார். இல்லாவிட்டால் பிரபாவின் கதை முடிந்திருக்கும்."** இது நீர்வேலி கொள்ளையின் பின்னர் குட்டிமணி குழுவினரால் கூறப்பட்ட சம்பவம்.

சிறீசபாரத்தினம் உயரமாக இருப்பார். அதனால் ரோல் சிறீ என்று இயக்க வட்டாரங்களில் அழைக்கப்பட்டார்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை நடவடிக்கையைப் பற்றிய விசாரணைகளில் இருந்து புலனாய்வாளர்கள் சில தகவல்களை கண்டறிந்தனர்.

பிரபாகரன், குட்டிமணி தங்கத்துரை ஆகியோர் தீவிரமாக தேடப்பட்டனர்.

**'நீர்வேலி வங்கி கொள்ளைப்பணம் பிரபாகரனிடம்!**

என்று பொலிஸார் தெரிவித்த செய்தி பிரபாகரனின் சிறுவயதுப் புகைப்படத்தோடு பத்திரிகையில் வெளிவந்தன.

### தங்கத்துரையின் திருமணம்

தேடுதல் வேட்டை தீவிரமானதால் தமிழ்நாட்டில் சென்று சிலகாலம் தங்கியிருக்கலாம் என்று குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் முடிவு செய்தனர்.

ஏற்கெனவே தமிழ்நாட்டில் தங்கியிருந்தபோது தங்கத்துரையின் இதயத்தைத் திருடிவிட்டார் ஒரு பெண். அவரது பெயர் நவமணி - பி.ஏ.பட்டதாரி.

**1980ம் ஆண்டு தங்கத்துரைக்கும் நவமணிக்கும் தமிழ் நாட்டில் திருமணம் நடந்திருந்தது.**

மனைவியைத் தமிழகத்தில் விட்டு தாயகம் வந்த தங்கத்துரை கடமையைச் செய்துவிட்டு தலைமறைவு வாழ்க்கைக்காக மீண்டும் தமிழகம் செல்ல தயாரானார்.

கடற்கரையில் படகு தயாராக காத்து நின்றது.

**கடற்கரை மணலில் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் அகியோர் நடந்து சென்றுகொண்டிருந்தனர்.**

**திடீரென்று அங்கே வருகிறது பொலிஸ்படை.**

**எதிர்த்துப் போராடும் தயார் நிலையில் இல்லை. எதிர்பாராத சம்பவம். மூவரும் கைது செய்யப்பட்டனர்.**

கைதுசெய்த போது பொலிஸாருக்கு விசயம் தெரியாது.



நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் ஜெகன்-குட்டிமணி.

தலைக்கு 5 இலட்சம் விலை வைத்து தேடப்பட்டவர்களையே தாம் கைது செய்திருக்கின்றோம் என்பது பொலிஸாருக்குத் தெரியாது.

மூன்று கடத்தல்காரர்கள் சிக்கியிருக்கிறார்கள் என்றே பொலிசார் நினைத்தனர்.

இன்ஸ்பெக்டர் நவரத்தினராசா தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் மூவரையும் கைதுசெய்தனர்.

பொலிஸ் நிலையத்திற்கு மூவரும் கொண்டுசெல்லப்பட்டனர்.

அங்கிருந்த பொலிஸ்காரர் ஒருவர் குட்டிமணியை அடையாளம் கண்டுகொண்டார்.

(குட்டிமணி முன்னர் 73ல் கைதாகி 76ல் விடுதலையானவர்.)

அப்போதுதான் தம்மால் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை ஆபத்தானவர்கள் என்று கைதுசெய்த பொலிசாருக்குத் தெரியவந்தது. பொலிஸ் நிலையம் முழுவதும் உஷாரானது. தகவல்கள் பறந்தன.

உடனடியாக மூவரும் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

### விலகாத மர்மம்

குட்டிமணி-தங்கத்துரை ஆகியோர் படகில் ஏறுவதற்குச் செல்லும் நேரத்தில், பொலிஸாருக்கு ஒரு தகவல் சென்றடைந்தது. கடத்தல் நடவடிக்கை ஒன்று நடக்கப் போவதாகவும், கடத்தல்காரர்களது நடமாட்டம் கடற்கரையில் இருப்பதாகவும் அந்த தகவல் தெரிவித்தது.

அந்த தகவலை யார் கொடுத்தார்கள்? நோக்கம் என்ன? என்பது இதுவரை விடை அறியப்படாத மர்மமாகவே இருக்கிறது.

கைதுசெய்யப்படும் முன்னரே குட்டிமணி-தங்கத்துரை குழுவினர் 'தமிழ்ஈழ விடுதலை இயக்கம்' என்ற பெயரில் இயங்க ஆரம்பித்திருந்தனர்.

தமிழ் இளைஞர் பேரவையில் இருந்து பிரிந்து முத்துக்குமாரசாமி தலைமையில் உருவாகிய தமிழ் ஈழ விடுதலை இயக்கம் செயலிழந்து போனது. அதனால் அந்தப் பெயரையே தமது இயக்கத்திற்கு சூட்டிக்கொண்டனர் குட்டிமணி, தங்கத்துரை குழுவினர்.

குட்டிமணி-தங்கத்துரை ஆகியோர் கைதுசெய்யப்பட்ட பின்னர் சிறீ சபாரத்தினம் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

### தமிழீழ இராணுவம்

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்த ஒபரோய் தேவன் பிரபாகரனோடு முரண்பட்டார்.

அவர் தனித்து வெளியேறி சென்னையில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் க.பத்மநாபாவோடு சேர்ந்துகொண்டார்.

ஒபரோய் தேவனை ஈபி.ஆர்.எல்.எஃப் உறுப்பினராக சேர்த்துக்கொள்வதை அப்போது சென்னையில் இருந்த ரமேஷ், சிவா போன்ற ஈ.பி.எல்.எஃப் முக்கிய உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

அதன்பின்னர் யாழ்பாணம் திரும்பிய ஒபரோய் தேவன் தமிழ் ஈழ இராணுவம் (ரெலா) என்னும் அமைப்பை உருவாக்கினார்.

தனியார் கடைகளில் வீடியோ டெக் போன்றவற்றை கொள்ளையடித்தமையால் அவருக்கு ஏற்பட்ட கெட்ட பெயர் புலிகளுக்கு சாதகமாக அமைந்தது. ஒபரோய் தேவனை பிரபாவின் உத்தரவுப்படி 1983 ல் புலிகள் யாழ்நகரில் நீராவியடி என்னுமிடத்தில் வைத்துச் சுட்டுக் கொன்றனர்.

குட்டிமணி - தங்கத்துரை கைதுசெய்யப்பட்ட பின்னர் பிரபாகரன் தலைமையிலான புலிகளும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினரும் சில காலம் மட்டுமே சேர்ந்திருந்தனர்.

புலிகள் இயக்கத்தை பலப்படுத்த பிரபாகரன் ஒரு நிபந்தனை விதித்தார்.

புலிகளது தலை விதியை தீர்மானித்த நிபந்தனை அது. (தொடர்ந்து வரும்)

இலங்கையின் வெளிநாட்ட மைச்சர் திரு.லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த வாரங்களில் அமெரிக்காவுக்கு விரிவான விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

அமெரிக்காவில் நடத்தப்பட்டிருந்தனர்.

அமெரிக்க கறுப்பின மக்களின் ஆரம்பகால அடிமை வாழ்க்கை முறை பற்றி பிரபல கறுப்பின



அலசுவது–இராஜதந்திரி

# அமெரிக்காவில் கதிர்காமர்

அரசியல் ரீதியாக இந்த விஜயம் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகவே விளங்கியிருந்தது.

அமெரிக்காவுக்கும், இலங்கைக்குமிடையிலான உறவுகள் பன்நெடுங்காலப் பழமை வாய்ந்தவை. இலங்கையில் பிரிட்டிஷாரின் ஆட்சி நிலவிய காலம் முதற்கொண்டே அமெரிக்கா மிஷனரிமார் இலங்கையின் கல்வி, மற்றும் பொருளாதார மேம்பாடுசார்ந்த விடயங்களில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைச் செய்திருக்கக் காணப்படுகின்றனர்.

இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் காணப்படும் கல்விக் கூடங்கள், வைத்தியசாலைகள் என்பன அமெரிக்க மிஷனரிமாரின் உயர்ந்த சேவைகளை எடுத்துரைப்பனவாக இருக்கின்றன.

அமெரிக்கா உலகின் ஒரு பெரும் வல்லரசாக இருந்து வருகின்றது. இராணுவ, கைத்தொழில், மற்றும் விண்வெளி விஞ்ஞானம் என்பவற்றில் அபரிமிதமான வளர்ச்சியைப் பெற்ற ஒரு நாடாகவே அமெரிக்கா விளங்குகின்றது.

அமெரிக்காவின் முன்னைய ஜனாதிபதிகள் பலரும் தமது நாட்டின் ஜனநாயக ஆட்சி மற்றும் சர்வதேச அரசியல் சார்ந்த விடயங்களில் பெருமளவு பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

இந்த ஜனாதிபதிகளில் ஜோர்ஜ் வாஷிங்டன், ஆபிரகாம் லிங்கன், ஜோன் எஃப்.கென்னடி, ஐஸன்ஹோவர் போன்றோர் குறிப்பிடத்தக்களவுக்கு முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளனர்.

அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியான ஜோர்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவில் உறுதியான ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தும் அரசியலமைப்பை உருவாக்கியிருந்தார்.

இந்த அரசியலமைப்பே இன்று அமெரிக்காவின் அரசியல் பாரம்பரியத்தைப் பேணுவதில் ஒரு பெரும் விருட்சமாக விசாலமடைந்திருக்கக் காணப்படுகிறது.

ஆபிரகாம் லிங்கன் உலகம் போற்றும் ஒரு தலைவராக விளங்கியிருந்தார். ஜனாதிபதி லிங்கனின் ஆட்சிக்காலத்திலேயே அமெரிக்க கறுப்பின மக்களின் உரிமைகள், மற்றும் வெள்ளையின மக்களுடனான அவர்களது சகவாழ்வு என்பன பெரிதும் உறுதி செய்யப்பட்டன.

18ம் நூற்றாண்டில் மேற்கு ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளாக விலங்கிடப்பட்ட நிலையில் ஆபிரிக்க கறுப்பின மக்கள் அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

விலங்குகளை விடக் கேவலமாக இவர்கள் நடத்தப்பட்டனர். அன்று அமெரிக்கச் சந்தைகளில் கழுத்திலும் கை, கால்களிலும் விலங்கிடப்பட்டு கால் நடைகள்போல கறுப்பின மக்கள் விலைபோயிருந்தனர்.

உண்ணவும் உறங்கவும் சுவாசிக்கவும் மட்டுமே கறுப்பின அடிமைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இது தவிர அவர்கள் உரிமைகள் எதுவுமின்றி அடிமைகளாக சவுக்கடிகளுக்கும், துப்பாக்கி வேட்டுகளுக்கும் மத்தியில் மிருகத்தனமாகவே பந்நெடுங்காலம்

எழுத்தாளரான அலெக்ஸ் ஹெய்லி (Alex Hailey) என்பவர் நூல் ஒன்றை எழுதியிருந்தார்.

சர்வதேச ரீதியாக பெருமளவு விற்பனையான இந்நூலை எழுதிய எழுத்தாளர் அலெக்ஸ் ஹெய்லி, அடிமைகளாக இருந்த தனது மூதாதையினர்கள் குறித்து வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டே அந்த நூலை வெளியிட்டிருந்தார்.

எனவே மயிர்கூச்செறியும் உண்மைத் தகவல்கள் பலவற்றை 'வேர்கள்' (Roots) என்ற அலெக்ஸ் ஹெய்லியின் அந்த நூல் உள்ளடக்கியிருந்தது.

அமெரிக்க கறுப்பர்களின் அடிமைத்தனம் ஆபிரகாம் லிங்கனின் ஆட்சிக் காலத்தில் தளர்த்தப்பட்டதுடன், அவர்கள் நிலபுலன்களை சொந்தமாக்கி ஏனைய வெள்ளையின அமெரிக்கர்களைப் போல் சுதந்திர மக்களாக வாழத் தொடங்கினர்.

இருந்த போதிலும் அவர்களின் சமூக,

ஜனாதிபதியான ஜோன் எஃப். கென்னடிகூட துப்பாக்கி வேட்டுகளுக்கு இரையாகியிருந்தார்.

அமெரிக்காவின் கறுப்பின மக்கள் மட்டும் வெள்ளை இனத்தவர்களால் பாதிக்கப்படவில்லை. அமெரிக்காவின் ஆதிவாசிகள் என வர்ணிக்கப்படும் செவ்விந்தியர்கள்கூட ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய வெள்ளையர்களால் பெரிதும் வேட்டையாடப்பட்டார்கள்.

அமெரிக்க செவ்விந்தியர்களுக்கும் (Red Indians), வெள்ளையர்களுக்குமிடையிலான போராட்டங்கள் நீண்ட நெடுங்காலமாக அமெரிக்காவில் தொடர்ந்திருந்தன.

எனவே இன ஒடுக்குமுறைகள், நிறபேதங்கள் என்பவற்றினால் இரத்தக் கறைபடிந்த வரலாற்றைக் கொண்டுள்ள அமெரிக்கா இன்று உலகில் ஒரு பெரும் வல்லரசாக நிமிர்ந்து நிற்கின்றது.

(Statue of Liberty) அமெரிக்காவுக்கு பிரான்ஸினால் அன்பளிப்புச் செய்யப்பட்டதொன்றாகும். அமெரிக்காவின் சுதந்திரத்தைக் குறிக்கும் வகையில் கையில் தீப் பந்தமொன்றை ஏந்திய நிலையில் அச்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பிரமாண்டமான சிலை உலகில் அடக்கு முறைகளால் சூழப்பட்டு சுதந்திரம் வேண்டிநிற்பவர்களை அரவணைக்கும் வாசகங்களைத் தாங்கியதாக அமைந்திருக்கக் காணப்படுகின்றது.

நியுயோர்க் நகரில் சுதந்திர சிலை மட்டுமல்ல சர்வதேச அரங்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் நெடிதுயர்ந்திருக்கக் காணப்படுகின்றது.

ஆண்டு தோறும் ஐ.நா.வில் இடம் பெறும் கூட்டத் தொடரில் உலக நாடுகள் பலவும் தமது பிரச்னைகளை பிரஸ்தாபித்து வாதப்பிரதிவாதங்கள், கருத்துப்

ஜனாதிபதி கிளின்டன் நிர்வாகமும் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு தனது பூரண ஆதரவைத் தெரிவித்திருந்தது.

பல்வேறு உலக நாடுகளின் உள்நாட்டுச் சர்ச்சைகள் குறித்த நடவடிக்கைகளில் அமெரிக்கா தீவிர பங்கெடுத்திருப்பதையே அறியமுடிகின்றது!

வியட் நாமில் அமெரிக்கா மேற்கொண்ட நீண்டகால யுத்தம், அதன் வெளிவிவகாரத் தலையீடுகளுக்கு ஒரு நல்ல உதாரணமாக இருக்கின்றது.

இறுதியாக வளைகுடா பிரச்னை, இதனையடுத்து சோமாலியா, மற்றும் ஹெயிட்டி போன்ற நாடுகளில் அமெரிக்கா இராணுவ ரீதியாகத் தலையிட்டுப் பிரச்னைகளை கையாண்டிருந்தது.

இருந்தபோதிலும் அமெரிக்கா தனது பெரும்படை பலத்துடன் தலையிட்ட அனைத்துப் பிரச்னைகளிலும் வெற்றியைத் தழுவியிருக்கவில்லை.

வியட் நாமில் கோடி, கோடியாக பணத்தை விரயஞ் செய்தும், ஆயிரக்கணக்கில் பலரைப் பலிகொடுத்தும் அமெரிக்காவினால் தனது நோக்கங்களை நிறைவேற்ற முடியாது போயிருந்தது.

கடந்த ஆண்டில் சோமாலியாவில் கூட பெருமளவு படைகளுடன் இறங்கிய போதிலும் அமெரிக்காவினால் அங்கு உறுதியாக நிலை கொண்டு ஒரு தீர்வினை ஏற்படுத்தமுடியவில்லை.

பொஸ்னியாவில்கூட ஐ.நா. அமைதிப்படை நிலைகொண்டுள்ளது. ஆயினும் அங்கு நிலவும் இனத்தகராறுக்கு ஓர் உறுதியான தீர்வை எட்டச் செய்வதில் அமெரிக்காவின் பங்களிப்பு, எது விதத்திலும் பயனளிக்காதிருக்கின்றது.

ரஷ்ய-செச்னிய மோதலில் கூட யுத்தத்தைக் கைவிடும்படி மட்டுமே அமெரிக்க ஜனாதிபதி கிளின்டனால் கூறமுடிகின்றதே தவிர, அங்கு நிலவும் பிரச்னையை அவரால் எவ்வகையிலும் தீர்த்து வைக்க முடியாத தன்மையே காணப்படுகின்றது.

இந்நிலையில் அமெரிக்காவில் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு ஒத்துழைப்பு நல்கும்படி அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கிளின்டன் நிர்வாகத்தைக் கேட்டிருந்தார்.

## கிளின்டன் நிர்வாகத்தினால் இனப் பிரச்னை தீர்வுக்கு ஒத்துழைக்க முடியுமே தவிர, நிரந்தரத் தீர்வை ஏற்படுத்திவிட முடியாது.

பொருளாதார, அரசியல் விடயங்களில் வெள்ளையர்களின் அடாவடித்தனங்கள் அவ்வப்போது இருந்து வரவே காணப்படுகின்றது.

அமெரிக்க கறுப்பின மக்களின் குடியியல் உரிமைகளை விருத்தி செய்வதில் மார்ட்டின் லூதர் கிங் கணிசமானளவு பங்களிப்பைச் செய்திருந்தார்.

மார்ட்டின் லூதர் கிங் சாத்வீகத்தில் நம்பிக்கை கொண்டவர். கூடவே மகாத்மா காந்தி மீதும் பெரும் மதிப்பைக் கொண்டிருந்தார்.

மார்ட்டின் லூதர் கிங்கின் அமெரிக்க கறுப்பின மக்களின் குறித்த போராட்டங்கள் துணிகரமானவையாகவும், உலகின் கவனத்தைப் பெற்றவையாகவும் இருந்தன.

இறுதியாக மார்ட்டின் லூதர் கிங் துப்பாக்கி வேட்டுக்களுக்கே இரையாகி உயிர் துறந்தார்.

அமெரிக்காவில் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனும் பின்னர் மார்ட்டின் லூதர் கிங் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டமை, அமெரிக்க வெள்ளையினவாதிகளின்



பரிமாற்றங்களில் ஈடுபடுவதுண்டு.

இந்நிலையில் இன்று சர்ச்சைக்குரிய நாடுகளில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பணிகளும் விரிவுபட்டிருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் எமது வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் அமெரிக்க விஜயம் இலங்கை இனப்பிரச்னை தொடர்பிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவே காணப்படுகின்றது.

திரு.கதிர்காமர் அமெரிக்காவில் இத்தடவை மேற்கொண்ட சந்திப்புக்கள், ஆற்றிய உரைகள், பத்திரிகைப் பேட்டிகள் என்பன பெருமளவு கவனத்தை ஈர்த்திருக்கக் காணப்படுகின்றன.

திரு. லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்காவில் தாம் உத்தியோகபூர்வமாகப் பங்குபற்றிய நிகழ்ச்சிகளிலெல்லாம் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு அமெரிக்காவின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வலியுறுத்திக் கோரியிருந்தார்.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இயங்கிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை

அமெரிக்காவினால் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு குறித்து சாதகமான கருத்துக்களையும், அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகள், நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் சூழ்நிலைகளை உருவாக்க முடியுமே தவிர நிரந்தரத் தீர்வொன்றை எட்டுவதென்பது இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையுமே பெரிதும் சார்ந்திருக்கின்றது.

## செவ்விந்தியர்களையும், கறுப்பின மக்களையும் வதைத்துத் தம்மை வளப்படுத்திய அமெரிக்க வெள்ளையர்கள்.

உக்கிர போக்கையே வெளிப்படுத்தியிருந்தன.

இக்கொலைப்படலம் அந்த இரு பிரமுகர்களுடன் மட்டும் நின்று விடவில்லை. மானிட உரிமைகள், சமத்துவம் என்பவற்றை வலியுறுத்திய இளம் அமெரிக்க

அமெரிக்காவின் குடியேற்றக் கொள்கை, இன ரீதியிலான நிலைப்பாடுகள் என்பவற்றில் பல்வேறு மாற்றங்கள் பெருமளவில் இடம் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

அமெரிக்காவின் நியுயோர்க் நகரில் அமைந்துள்ள சுதந்திர சிலை

இனப்பிரச்னை குறித்த பேச்சுக்களில் தீவிரமாகப் பங்குகொள்ளத் தூண்டும் வகையில் அமெரிக்கா ஒத்துழைக்கவேண்டுமென்று திரு. கதிர்காமர் அமெரிக்க அரசைக் கேட்டிருந்தார்.

அமெரிக்க அரசாங்கமும், அதாவது

இந்நிலையில் 'சமாதானம்' என்ற குழந்தையை ஈன்றெடுக்க உதவும் ஒரு 'மருத்துவமாதா'க வேண்டுமானால் அமெரிக்கா செயற்படலாம்.

ஆனால் அந்த சமாதானம் என்ற அழகிய, ஆரோக்கியமான குழந்தையை கருக்கொள்ளச் செய்வதற்கு வேண்டிய உறவுகளும், பிணைப்புகளும் ஜனாதிபதி சந்திரிகாவையும் திரு. பிரபாகரனையுமே பெரிதும் சார்ந்திருக்கின்றன.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சென்ற வாரத் தொடர்.......

# தருவது ரசிகன்

## உண்மைச் சம்பவம்



**தனது சாகசங்களால் உலகின் பெரும் புள்ளிகளை கலங்கடித்தவள் பமீலா. அந்த புதிர் அழகியின் சொந்தக் கதையில் சில பக்கங்கள்.....**

பமீலா தொலைபேசியில் குரல் கேட்டு வியந்ததுக்கு காரணம் சந்திரசுவாமி.

அவர் சாதாரண சாமியல்ல; சாகச சாமி. பூர்வீகம் இந்தியா.

உலகெங்கும் உள்ள பணக்காரர்கள், பாதாள உலகப் புள்ளிகள், ஆயுத வியாபாரிகள், அரசியல்

குழைந்தாள் பமீலா.

"உன் கட்டழகை கண் நிறையக் கண்டு மகிழ்ந்து உணரவேண்டுமாம். விரும்புகிறார்..... யார் தெரியுமா? கசோகி."

பமீலாவுக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது.

உலகில் மிக உயர்ந்த பணக்காரர்கள் வரிசையில் இருப்பவர் கசோகி.

சுட்டுவிரல் அசைத்தால் போதும். உலக அழகிகள் பலர் அவர் மாளிகைக்கு உடல் குலுங்க ஓடுவார்கள்.

அவரா...? அந்த கசோகியா...? வாவ்! பமீலா பனிக்கட்டியாக உறைந்து போனாள்.

"உ...உண்மையாகவா சொல்கிறீர்கள்?"

"உன் இளமை எத்தனை உண்மையோ அப்படித்தான் நான் சொன்னதும் உண்மை."

"நான் என்ன செய்யவேண்டும்?"

"கசோகி ஒரு சுகவாசி. அவர் காணாத சுகம் கிடையாது. அவர் பார்க்காத உலக அழகிகள் கிடையாது. உலக அழகுராணிகள் கசோகியிடமிருந்து அழைப்பு வராதா என்று காத்துக்கிடக்கிறார்கள்."

"தெரியும்!"

"அந்த கசோகியே நீ வேண்டும் என்று தானாகவே கேட்கிறார் என்றால் அல்லவா?"

"யெ....யெஸ்!"

"அதுதான் சந்திரசுவாமி."

சிரித்தபடி றிசீவரை வைத்துவிட்டார்.

பமீலாவும் றிசீவர் சாத்திவிட்டு திரும்ப, விளையாட்டமைச்சர் கொலின் மொய்னிகன், அவளையே பார்த்துக்கொண்டிருந்தார்.

அருகில் வந்து அமர்ந்த பமீலா அமைச்சரின் தலைமுடியை செல்லமாய் களைந்தாள்.

யார் போனில்? என்று கேட்க நினைத்தார் அமைச்சர். பமீலாவின் நெருக்கமும், வாசனையும், சற்றே அவள் குனிய தெரிந்த மார்பின் விளிம்புகளும், முகத்துக்கருகே துடித்த பமீலாவின் உதடுகளும் சிந்தனையை வேறு புறம் திருப்பியதில் விளையாட்டமைச்சருக்கு கேள்வி கேட்கவே நேரமில்லாமல் போய்விட்டது.

பமீலாதான் கேள்வி கேட்டாள்.

"நான் சொன்னது என்னாயிற்று?"

"என்ன?"

"அரசியல்வாதிகள் பேச்சு அடுத்த நொடியே போச்சு என்பதை உறுதிப்படுத்துகிறீர்கள்."

"நோ...நோ... உன்னை பார்த்தால் போதும் என்னையே மறந்துவிடுகிறேன் டியர்."

"நான் கேட்பது பாராளுமன்றத்தில் ஒரு உயர்ந்த வேலை."

"ஓ...அதுவா? சிம்பிள்! உதவி ஆராய்ச்சியாளர் பதவி ஒன்று காலியாகவிருக்கிறது."

பமீலா சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்..... பிடிக்கவில்லையா?"

"என்னிடம் வருபவர்கள்தான் ஆராய்ச்சி செய்வது வழக்கம். இப்போது எனக்கே ஆராய்ச்சியாளர் பதவி! ஓ.கே. ஏற்பாடு செய்யுங்கள்."



நடிகர் ஜிம்டேவிட்சனுடன் பமீலா



# அழகுப் புயல் பமீலா

வாதிகள் என்று சந்திரசுவாமியின் சாம்ராச்சியம் அமோகமானது.

சாமிக்கும் சரசலீலைக்காரி பமீலாவுக்கும் என்ன தொடர்பு?

"என்னம்மா பமீலா, அதிர்ந்து போய் நிற்கிறாய்? உன் குரலைக் கேட்டு எத்தனை நாளாகிறது?"

"நீங்கள் இந்தியாவில் இருப்பதாகச் சொன்னார்களே? இங்கே எப்போது...?"

மறுமுனையில் சாமி தொண்டையைச் செருமிக்கொண்டார்.

"நான் அங்குமிருப்பேன். இங்குமிருப்பேன். எங்குமிருப்பேன். சாதுவுக்கு உலகமே வீடு. வீடே உலகம். சேவையே சுவாசம். நீ எப்படியிருக்கிறாய் பமீலா?"

"உங்கள் தயவு இருக்க எனக்கு என்ன குறை?"

"பிரிட்டிஷ் பாராளுமன்றமே உன் படுக்கையறையில் இருக்கிறதாமே? நீ நினைத்ததை விட முன்னேறிவிட்டாய்."

சாமி சிரித்தார். அனைத்தையும் இவர் எப்படித்தான் அறிந்துகொள்கிறாரோ? என்று பமீலா நினைத்தாள். சாமியே பேசினார்.

"பமீலா உனக்கு ஒரு அதிஷ்டம். சொன்னால் நம்பமாட்டாய்."

"அப்படியா? சொல்லுங்கள்-ப்ளீஸ்."

உனக்கு அதிஷ்ட தேவதையின் ஆசிர்வாதம் கிடைத்திருக்கிறது என்றுதான் அர்த்தம்."

"ஓ...காட்!"

"நீ வியக்கக்கூடாது! கசோகி வியக்க வேண்டும். நீ கொடுக்கும் விருந்தில் கசோகியை வியக்கவைக்க வேண்டும்."

"முடியும்."

"எனக்குத் தெரியாதா என்ன?

சாமி அர்த்தத்தோடு சிரித்தார்.

"எப்போது?"

"உன்னைக் கொடுப்பதா?"

"இல்லை. நீங்கள் என்னை புறப்பட அழைப்பது?"

"இன்றிரவு தயாராக இரு. பயண ஏற்பாடுகளை செய்துவிட்டு வாகனம் அனுப்பப்படும். வா! வீட்டில் விருந்தாளி யாராவது வந்திருக்கிறாரா?"

பமீலா தயங்கி, சாமிக்கு மறைப்பது கூடாது என்று நினைத்து,

"ஆம்!"

"யார் விளையாட்டமைச்சர்தானே!"

பமீலா திகைத்து

"ஆம்!"

"பொருத்தமான அமைச்சைத்தான் அவருக்கு கொடுத்திருக்கிறார்கள்! அமைச்சுப் பொறுப்பை நிர்வகிக்கிறாரோ இல்லையோ உன்னை அணைக்கும் பொறுப்பை அட்டகாசமாக நிறைவேற்றுகிறார். இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்று நினைக்கிறாய்

"செய்யலாம். முதலில் நீ எனக்கு ஆராய்ச்சியாளர் பதவி கொடு."

சிரித்தாள்..... சரிந்தாள்.... விளையாட்டமைச்சர் கவிழ்ந்தார்.

□□

பகட்டாக- பளபளப்பாக சுறுசுறுப்பாக தெரிந்தது பாரிஸ் நகரம்.

இனிமேலும் பணத்தைக் கொட்ட இடமில்லை என்ற நிலையில் பல கோடிகளை விழுங்கி செழிப்பாக தெரிந்தது கசோகியின் மாளிகை.

கசோகி ஒரு சுருட்டுப் பற்றவைத்துக்கொண்டு எதிரேயிருந்த பமீலாவை கண்களால் உரித்துப் பார்த்தார்.

கண்கள்- அதிலே கனவுகள், உதடுகள்- அதிலே நிரந்தரமான போதை, பளபளப்பான கன்னங்கள், வளமான வசீகரமான கழுத்துக்குக்கீழே உள்ள இரண்டு அழகுகள்......

கசோகிக்கு பமீலாவை பிடித்துவிட்டது. சந்திரசுவாமியை ஒரு பார்வை பார்த்தார்.

"இது ஒரு விலை உயர்ந்த சந்திப்பு. பமீலா! உனக்கு மறுப்பில்லை என்றால் என் விருந்தாளியாக நீ இங்கே ஒரு வாரம் தங்கிச் செல்லலாம்!"

பமீலா சந்திரசுவாமியைப் பார்த்தாள். 'சம்மதித்துவிடு' என்பதுபோல கண்களால் சொன்னார் சாமி.

"பெறுமதியான வாய்ப்பு."

என்று மட்டும் சொன்னாள் பமீலா. கசோகியை பார்வையால் எடைபோட்டு, சமாளிப்பது ஒன்றும் கஷ்டமில்லை என்று நினைத்தாள்.

சந்திரசுவாமி விடைபெற்றார். விடை பெறும்போது கசோகியை தனியே அழைத்து,

"அந்த ஐம்பது கோடிக்கான ஆயுதங்கள்..."

"விலை கொஞ்சம் அதிகமாக இருப்பதால் விட்டுப் பிடிக்கலாம் என்றிருக்கிறேன்."

"நாங்கள் கேட்கும் விலைக்கு படியாவிட்டால் பமீலாவை வைத்து படிய வைத்துவிடலாம்."

கசோகி உரத்துச் சிரித்தார்.

"குட் ஐடியா! எனக்கு ஒரு வாரம் பமீலா தேவை. அதற்குப் பின் என் விருந்தாளிகளுக்கு பமீலா உபயோகமாவாள்."

□□

கசோகியின் மாளிகையில் ஒரு வாரத்தின் பின்னர் பமீலா விருந்தாளிகளுக்கு அறிமுகம் செய்யப்பட்டாள்.

அறிமுகம் செய்யப்படும் போது மிகக் குறைவான மெல்லிய உடையில் இருந்தாள்.

"பமீலா இவர்தான் வில் உவைமன். நடனத்தில் ராஜா."

கசோகி அறிமுகம் செய்தார். அகன்றார். வில் உவைமன் பமீலாவிடம் கேட்டார்.

"உனக்கு நடனமாடத் தெரியுமா?"

"கொஞ்சம் தெரியும். கற்றுக் கொள்ள ஆசை. சொல்லித் தருவீர்களா?"

"மாபெரும் சந்தோசம் மட்டுமல்ல சந்தர்ப்பமும் கூட."

வில் உவைமன் கண்ணடித்தார். பமீலாவுக்கு நடனம் கற்றுக்கொடுக்கும் சாக்கில் கைகளை அலைய விட்டார். பமீலா அநுமதித்தாள்.

பின்புறமாய் வந்து பமீலாவின் நடன அசைவை சரிசெய்வதுபோல இடையை சுற்றி தனது கைகளைக் கொண்டுவந்து, பமீலாவின் வயிற்றில் அழுத்தினார். பமீலா பின்புறமாய் தலையைச் சரித்து,

"இதிலெல்லாம் தயக்கம் கூடாது. உங்கள் கைகள் நடுங்குகிறது பாருங்கள்."

என்று கண்களில் வழியும் போதையோடு சிரித்தாள்.

"நீ மறுப்பாயோ என்றுதான்..."

"குருவுக்கு மறுப்பா?"

பமீலா நகைத்தாள். அதே சமயம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் பற்றி பிரிட்டனில் வெளிவந்த பத்திரிகைகளும் நகைத்தன.

அது பமீலாவின் விதியை மாற்றும் நகைப்பு.

(தொடர்ந்து வரும்)

---

## அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ✚ விந்தைகள்

## சிறுவர்களும் சிறுநீர்க்கோளாறும்

### மிக முக்கிய தகவல்!

பெருந்தாக்கத்தை ஏற்படுத்தும் நோய்களில் சிறுநீரகக் கோளாறும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இவற்றிற்கான உச்சநிலை சிகிச்சை வசதிகள்கூட வெளிநாடுகளில் மாத்திரமே இருக்கப்பெற்று வருகிறது.

இச் சிறுநீரகக் கோளாறு வளர்ந்தோர் மத்தியில் பல்வேறு காரணங்களின் நிமித்தம் ஏற்பட்டு வந்தாலும்கூட சிறுவர்களைப் பொறுத்தவரை, குறிப்பாக இரு காரணங்களின் நிமித்தமே ஏற்பட்டு வருவதாக கூறப்பட்டு வருகிறது.

01. பிறப்பிலேயே சிறுநீரகத்தில் குறைபாடு காணப்படுதல்.
02. சிறுநீரகத்தின் பின்புற உறுப்புகள் இயற்கைக்கு மாறாக அமையப் பெற்றிருத்தல்.

என்று குழந்தை வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். தொடர்ந்தும் இது குறித்து வைத்தியர்கள் கூறுவதை கேட்போம்:

சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டு காணப்படும் குழந்தைகளில் பெரும்பாலானோருக்கு பிறப்பிலே ஏற்பட்டு காணப்படும் சிறுநீர்



அடைப்புக்களினூடாகவே இச் சிறுநீரகக் கோளாறு ஏற்பட்டு வருவது புலனாகியுள்ளது.

இவை தவிர சிறுநீரகப் பகுதி உள்ள உறுப்புக்கள் சில இயற்கைக்கு மாறாக அமையப் பெறுவதாலும் இக்கோளாறு நிகழப் பெறுவதற்கு வாய்ப்பிருந்து வருகிறது.

இவற்றோடு சிறுவர்களுக்கு சிறுநீர்க் கோளாறுகளும் ஏற்படுவதற்கும் சந்தர்ப்பமிருந்து வருகிறது. சிறுவர்களின் பாலுறுப்பினூடாக சில வேளைகளில் கிருமிகள் உட்செல்லப்படும் பட்சத்திலும் அவை சிறுநீரகக் கோளாறுகளை ஏற்படுத்தக்கூடும்.

இக் கிருமித் தாக்கத்திற்கு தகுந்த தருணத்திற்குள் சிகிச்சையளிக்கப்படாத பட்சத்தில் அவை சிறுநீரகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

பொதுவாக ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைக்கு அடிக்கடி சிறுநீர்க்கழிவுக் கோளாறு காணப்படும் பட்சத்தில் தாமதியாது குழந்தை வைத்திய நிபுணரிடம் வைத்திய ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

ஆண் குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்கள் பிறந்த நாள் தொடக்கம் அவர்கள் கழித்துவரும் சிறுநீர் அளவை கவனித்து வருவது முக்கியமாகும்.

## வளம்—நலம்—ஆரோக்கியம்

### சின்னதாக ஒரு யோசனை

குழந்தை பிறக்கும்போது 20 அங்குல நீளமிருக்கும். ஒராண்டு முடிகிறபோது 30 அங்குல நீளமாகும். இரண்டாம் ஆண்டு முடிகிறபோது 35 அங்குலம் நீளமிருக்கும். அதன் பிறகு ஆண்டுக்கு 2 அங்குல வளர்ச்சி என்ற கணக்கில் 12 வயதுவரை வளர்ச்சியடையும். 12 வயது முடியும்பொழுது 60 அங்குலம்- அதாவது 5 அடி உயரமாக வளர்ந்துவிடும்.

வீட்டில் சமையல் மற்றும் வேலை செய்யும் பெண்களுக்கு உடலுழைப்பின் பொழுது தசைகளின் இயக்கத்திற்கு மிகவும் அவசியமான பொட்டாசியம் என்னும் தாதுப் பொருள் நிறைய செலவழிந்துவிடும். அதனால் அவர்கள் களைத்து சோர்ந்து போவார்கள். இந்தப் பொட்டாசியச் சத்து தோடம்பழச் சாற்றில் நிறைய உள்ளது. அவர்கள் நிறைய தோடம்பழச்சாறு பருகினால் இழந்த சக்தியை மீண்டும் பெறுவார்கள். தோடம்பழச் சாற்றில் உள்ள விற்றமின் 'சி' செல்களின் வளர்ச்சிக்கு உதவும். ஃபோலாசின் என்ற ஒரு தாதுப் பொருளும் இதில் இருப்பதால் உடல் நலம் பெறும். தோடம்பழச்சாற்றில் கொழுப்போ, உப்போ கிடையாது.

அவர்கள் தாயின் மடியில் படுத்திருக்கும் தருணத்தில் நிறுநீர்கழிக்கும் போது தாயின் முகத்திற்கு நேராக முட்டுப்படுத்தி மூச்சை வெளியேற்றுவார்களானால் அக் குந்தைக்கு சிறுநீர்க்கழிவுக் கோளாறு ஏற்படும்.

நித்திரை விட்டெழுந்து கழிக்கப்பெறும் சிறுநீர் அளவு குறைவாகக் காணப்படும் பட்டசத்திலும் குழந்தை அடிக்கடி சிறுநீர் கழித்து வரும் பட்சத்திலும் அவர்கள் மீது பெற்றோர் கவனம் செலுத்துவது முக்கியமாகும்.

தற்போது இருந்துவரும் நவீன வசதிகளின்படி கர்ப்ப காலத்தில் மேற்கொள்ளப்படும் ஸ்கான் பரிசோதனை மூலம் வயிற்றிலுள்ள குழந்தையின் சிறுநீரகக் கோளாறு பற்றி தெளிவாக தெரிந்து கொள்வதற்கு வாய்ப்புள்ளதாக மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# துணிந்தால் துக்கமில்லை
# வாயடியும் கை கொடுக்கும்



பிலிப்பைன்ஸ் தலைநகரான மனிலாவில் 'ஹொபிற் ஹஷான்' என்றொரு கிளப் இருக்கிறது. இதில் மதுபானம், சூது விளையாட்டுகள் யாவுமுண்டு. இந்தக் கிளப்பின் பின்புற வாயிலில் சின்னஞ்சிறு உருவம் ஒன்று நின்று வாடிக்கையாளரை வரவேற்று உள்ளனுப்புவதும் வெளியனுப்புவதுமாக, மிகத்துரிதமாக இயங்கும். அவர்தான் நொயெல் அயலா. முன்னாள் பிலிப்பைன்ஸ் நாட்டு திரை நட்சத்திரம் இன்று அந்த பிரபலமான கிளப்பின் வாயில் காப்பாளர்.

உயரம் ஆக 2அடி 10 அங்குலம் மட்டும்தான். ஆனால் சுமார் ஆறரை அடி உயரமுள்ள ஆஜானுபாகுவான ஒருவனை ஒரே(வா)யடியால் மண் கவ்வ வைத்து விடுவார்.

இந்தக் கிளப்புக்கு வரும் வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் உள்ளே வரும் போது சாதுக்களாகவே வருவார்கள். ஆனால் உள்ளே சில 'கிளாஸ்'கள் போனதும் அவர்களுடைய சாதுத் தன்மை மிரண்டு ஓடிவிடும். சண்டியர்களாக மாறி சண்டை போட ஆரம்பித்துவிடுவார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களை 'அடக்கு'வதற்கு நொயெல்தான் முன்வருவார். அவர் கை, கால் எதையும் பயன்படுத்துவதில்லை. வெறும் வாய்ச் சொற்களால் வீரம் பேசி அடங்காத 'ரௌடி'யையும் அடங்க வைத்துவிடுவார்.

மாபெரும் வீரர்களும் பேசத்தயங்கும் வார்த்தைகள் அவருடைய வாயிலிருந்து உதிரும். இதனால் அங்கு குழுமியிருக்கும் அனைவரும் சிரிப்பை அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். அத்துடன் சண்டித் தனம் காட்டிய ரௌடியையும் ஏளனமாக அவர்கள் கிண்டல் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். அவருக்கும் அவமானம் தாங்க முடியாமல் அடங்கிப் போவார்.

இவ்வாறு அந்த கிளப்பில் பலருடைய ஆதரவைப் பெற்ற நொயெல் சில குழப்பக்காரர்களால் வீதியில் தூக்கி எறியப்பட்ட சம்பவங்களுமுண்டு. இருந்த போதிலும் நொயெல் அந்த கிளப்பில் மிக விரும்பத்தக்க ஒரு தொழிலாளியாக இருந்து வருகிறார்.



## வாழவைக்கும் காதலுக்கு ஜே!

உயரம் குறைந்தவர்கள்
வாழ்க்கையில் முன்னேற
முடியுமா?
வாழ்க்கையை ருசிக்க
இயலுமா?
மிக முக்கியமாக இந்தக்
கேள்விக்கு விடை தேடினார்
2 அடி 11 அங்குலம்
மட்டுமே உயரமுள்ள
மைக்ஹென்பறி.
ஏன் முடியாது?
உனக்கு உதவ நான்
இருக்கிறேன்.
'நீபாதி நான்பாதி' என்று
குள்ளமான மைக்
உள்ளத்திலும் காதலுக்கு ஜே!
சொல்லி குடியேறினார் ஒரு பெண்.
காதல் ஓ.கே.
கல்யாணக் கனவுகளோடு
காத்திருக்கிறார் மைக்.
இப்போது மைக்
தன்னம்பிக்கையோடு
சொல்கிறார், வாழ்க்கையில்
உயர மட்டுமல்ல, ஒரு
பெண்ணின் உள்ளத்திலும்
அமரவும் குள்ளம் ஒரு
பிரச்சனையல்ல. உறுதியான
உள்ளம் போலும்!!

## தகவல் பெட்டி



## நெடுமரமாய் உயர்ந்த நிஜமனிதன்

கின்னஸ் புத்தக தகவலின்படி உலகில் மிக உயர்ந்த மனிதர் 'றொபேர்ட் பேர்சிங் வட்லோவ்'.

வட்லோவ் அமெரிக்காவைச் சேர்ந்தவர். தெருவில் இறங்கினால் கூட்டம் நிறைந்த பேருந்துகளில் ஏற முடியாது. வளைந்து நின்றால் முதுகுப்பிடிப்பு ஏற்பட்டுவிடும். திரையரங்கில் படம் பார்க்க செல்ல முடியாது. பின்னால் இருப்பவர்களுக்கு வாழ்க்கை வெறுத்துவிடும். இப்படியாக நாம் அண்ணாந்து பார்க்க வேண்டிய அண்ணருக்கு பல சங்கடங்கள்.

இப்போது 'வட்லோவ்' எங்கிருக்கிறார் என்று அறிய ஆவல் எழுந்தால் அடக்கிக்கொள்ளுங்கள். 8 அடி 11.1 அங்குலம் உயரமான வட்லோவுக்கு ஆயுள் மட்டும் சின்னதாகிவிட்டது. தனது 22 வயதில் 1940ம் ஆண்டு ஜுலை 15ம் திகதி நோய் வந்து இறந்து போனார். வட்லோவின் சப்பாத்தின் அளவு 18 1/2 அங்குலம். எடை, 222.7 கிலோகிராம்.

## சத்திர சிகிச்சையால் சட்டென்று வளர்ந்தார்

உலகில் உயரத்தால் உயர்ந்த பெண் சண்டி அலென். இவரும் அமெரிக்காவைச் சேர்ந்தவர்தான். (அதென்ன உயரத்திற்கும் அமெரிக்காவுக்கும் ஒரு 'இது'...)

சண்டி அலென் இப்போது வாழ்ந்துகொண்டிருக்கிறார். வயது 40. கின்னஸில் பதியப்பட்டபோது இருந்த உயரம் 7அடி 7 1/4 அங்குலம். எடை 209.5 கிலோ கிராம். பாதணியின் அளவு 14 1/4 அங்குலம்.

அலென் உயரமானது எப்படித் தெரியுமோ? இவர் பிறந்தபோது வயிற்றில் ஒரு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அதன் தாக்கமே வேகமாக வளரக் காரணமாகியதாக கின்னஸ் புத்தகம் கூறுகிறது.

உயரமான அலெனைப் பராமரிக்கும் தாதிதான் அருகில் காணப்படுகிறார்.


www.padippakam.com

## அசத்துகிறார் எஸ்.பி.பாலசுப்பிரமணியம்

ரகுமான் கதாநாயகனாக நடித்து வெளியாகியுள்ள படம் 'பாட்டு பாடவா'. பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியமும் நடித்திருக்கிறார். நடிப்பிலும் தனது முத்திரையை பதிக்க முடியும் என்று மீண்டும் ஒரு முறை எஸ்.பி.பாலசுப்பிரமணியம் நிரூபித்துள்ளார். தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் நான்கு திரையரங்குகளில் 10.2.95 அன்று வெளியாகியுள்ள படம் பாட்டு பாடவா கொழும்பில் மினி தியேட்டர்களுக்கும் வீடியோ வழியாக வந்திருக்கிறது.

## ராதிகா-ஊர்வசி ஓஹோ

'நான் பெத்த மகனே' படத்தின் வெற்றி வி.சேகர் புகழை மேலும் உயர்த்திவிட்டது. நடிகர் எஸ்.வி.சேகரும் இருப்பதால் வி.சேகரை எஸ்.வி.சேகர் என்றே பலர் நினைத்து குழம்பிப் போகிறார்களாம். அதில் சிறு வருத்தம். ராதிகாவையும் ஊர்வசியையும் ஓஹோ என்று புகழுகிறார் வி.சேகர். "இருவரும் அதி சிறந்த நடிகைகள். ஆனால் பந்தா இல்லாதவர்கள். தமது பாத்திரத்தை உணர்ந்து ஈடுபாட்டோடு நடிப்பவர்கள்." என்று சான்றிதழ் வழங்குகிறார் வி.சேகர். குறைந்த செலவில் லாபம் சம்பாதிக்கும் படத்தை தரும் பழம் வி.சேகர்.





பிரசாந்த்-கஸ்தூரி படம்-ஜானகிமகன்

# 91

## 'தமிழனின் தரம் கெட்டுப் போச்சு' வருத்தப்படுகிறார் சத்யராஜ்

பகுத்தறிவு கருத்துக்களில் நம்பிக்கைகொண்ட நடிகர் சத்யராஜ் எண் சாத்திரம் பார்ப்பது, ராசி பார்ப்பது போன்ற விடயங்களில் சத்யராஜுக்கு உடன்பாடு கிடையாது. சினிமா இதழ் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறுவதைக் கேளுங்கள்:

"தமிழன் அறிவாளி புத்திசாலி என்று ஒரு புறம் கூறிக்கொள்கிறோம். ஆனால் சுயமரியாதை என்பது நாளுக்கு நாள் தேய்ந்துகொண்டே வருவது வேதனைக்குரியது. மூட நம்பிக்கையால் தரங்கெட்ட தமிழன் இன்று சுயமரியாதை இழந்து சோரம் போவதை நினைத்து வருத்தப்படுகிறேன். உலகின் முடிவான கொள்கை பகுத்தறிவுதான். நானும் மூட நம்பிக்கையின் அடிப்படையிலான கதைகளில் நடித்திருக்கிறேன். அதற்காக இப்போது வருத்தப்படுகிறேன். இனி என் கொள்கைக்கு எதிரான படங்களில் நடிப்பதில்லை என்று முடிவெடுத்திருக்கிறேன். உலகில் தழைக்க வேண்டியது மனிதாபிமானமே தவிர மதாபிமானமல்ல. வளர வேண்டியது தன்னம்பிக்கையே தவிர மூட நம்பிக்கையல்ல"

இவ்வாறு கூறியிருக்கிறார் சத்யராஜ்.



## சிரிப்பால் நஷ்டம்

பிரபுதேவா- ரோஜா- ராதிகா விஜயகுமார், வடிவேலு ஆகியோரது நடிப்பில் நிறைவுக் கட்டத்தை நெருங்கிவிட்டது 'ராசய்யா.' கிராமத்து திருவிழா காட்சி ஒன்றில் பிரபுதேவா-வடிவேலு இருவரும் நடிக்கும் காட்சி படமாக்கப்பட்டது. இருவரது நகைச்சுவையையும் ரசித்து சக நடிகர்கள் சிரித்துவிட்டதால் அந்த காட்சியை பல தடவைகள் படமாக்கவேண்டி ஏற்பட்டதாம். தயாரிப்பாளருக்குத்தான் நஷ்டம்.

## கார்த்திக்கின் அம்மா

'லக்கிமேன்' படத்தில் கார்த்திக்கின் அம்மாவாக நடிக்கிறார் மஞ்சுளா. மகள்-மகன் உட்பட குடும்பமே நடிக பட்டாளமாகிவிட்ட மகிழ்ச்சி அவர் உடலில் தெரிகிறது. அதாவது சற்று மேலும் பருத்துவிட்டார்.

## பக்தியிலும் கவர்ச்சி


பக்திப் படங்களை இயக்குவதில் கில்லாடியான கே.சங்கர் இயக்கியுள்ள பக்திப் படம் 'வெற்றிவிநாயகர்'. மார்ச் மாத வெளியீடு. பக்திப் படம் என்றாலும் கவர்ச்சியான நடனங்களும் இருக்கிறதாம். இசை-மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன்.

## வயதுக்கு மீறிய திறமை

தனது மகள் பற்றி மீனாவின் தாய்க்குலம் சொல்லியுள்ள வாக்குமூலம் "நடிப்பில் என்னுடைய பொண்ணுக்கு வயதுக்கு மீறிய திறமை இருக்கிறது. ஆனால் அதை நிரூபிப்பதற்கான முதிர்ச்சியான பாத்திரங்களை அவள் தெரிவு செய்ய அனுமதிக்கமாட்டேன். ஒன்னுமே தெரியாத பெண்ணாக, இளமைத் துடிப்புடன் அவள் நடிப்பதைத்தான் நான் விரும்புகிறேன்." என்கிறார் தாய்க்குலம்.

# மினி சினி

- கேடி.குஞ்சுமோன் அடுத்து இரண்டு படங்களை ஒரேயடியாகத் தயாரிக்கவிருக்கிறார். பிரதாப் போத்தன், 'இதயம்' புகழ் கதிர் ஆகியோர் இப்படங்களை இயக்கவுள்ளனர்.
- பொங்கலுக்கு வெளிவந்த கமலின் சதிலீலாவதியில் சிறிய வேடமொன்றில் நடித்துள்ள 'கடலோரக் கவிதைகள்' ராஜா தற்போது 'மனைவிகள் ஜாக்கிரதை', 'மிஸ் ரேவதி', 'சாமி சொன்னா சரிதான்' போன்ற படங்களில் நடித்து வருகிறார். இவர் விரைவில் பி.வாசு இயக்கும் படமொன்றில் நடிக்கவிருக்கிறார்.
- 'இதயத்தாமரை', 'நியாயத்தராசு', 'அமரன்' போன்ற படங்களை இயக்கியுள்ள கே.ராஜேஷ்வர் தற்போது அருண்பாண்டியன்-ஷோபனா நடிக்கும் 'துறைமுகம்' படத்தை இயக்கி வருகிறார். சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற பின்னர் ஷோபனா நடிக்கும் முதல் தமிழ்படம் இது.
- வெளிவரத் தயாராக இருக்கும் 'அவதாரம்' படத்தை இயக்கி நடித்திருக்கும் நாசர், இனி வருடத்திற்கு குறைந்தது இரண்டு படங்களையாவது இயக்கத் திட்டமிட்டுள்ளார்.
- தமிழில் வெற்றி பெற்ற 'அமைதிப்படை' இந்தியில் 'ஜல்லாத்' என்ற பெயரில் தயாராகிறது. இந்தியில் மிதுன் சக்கரவர்த்தி, மதுபாலா, ரம்பா ஆகியோர் நடிக்கின்றனர்.
- பாலுமகேந்திராவிடம் உதவியாளராக இருந்த நித்யா, முதன் முதலாக 'சுப்பிரமணிய சாமி' படத்தின் மூலம் ஒளிப்பதிவாளரானார். இதனை அடுத்து 'பாண்டியனின் ராஜ்ஜியத்தில்' என்ற படம். தற்போது இவர் 'மாப்பிள்ளை மனசு பூப்போல' என்ற படத்திற்கு ஒளிப்பதிவு செய்துவருகிறார்.
- பவித்திரன் இயக்கத்தில் சரத்குமார் நடிக்கவிருந்த 'இந்தியா டுடே' என்ற படம் பூஜை போட்ட நிலையிலேயே நிறுத்தப்பட்டது. இப்போது இந்தத் தலைப்பில் தெலுங்கில் ஒரு படம் தயாராகிறது. கோதண்டராமிரெட்டி இயக்கும் இப்படத்தில் மோகன்பாபு நடிக்கிறார்.
- மனநிலை பாதிக்கப்பட்ட பெண்ணாக குஷ்பு நடிக்கும் 'முத்தும் குளிக்க வாரீயளா' படத்திற்குத் திரைக்கதை அமைத்து இயக்கி வரும் கே.எஸ்.ரவிக்குமார் பட்டாளத்தான் டில்லி என்ற வேடத்தில் நடிக்கிறார்.
- 'ஜென்டில்மேன்', 'காதலன்' ஆகிய படங்களை இயக்கிய ஷங்கர் அண்மையில் திருமணம் செய்துள்ளார். டெல்லியைச் சேர்ந்த மணப்பெண்ணின் பெயர் ஈஸ்வரி.
- 'ரயில் ஸ்நேகம்' என்ற தொலைக்காட்சித் தொடரை இயக்கியுள்ள இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர், 'கையளவு மனசு'' என்னும் ஒரு தொலைக் காட்சித் தொடரை இயக்கி வருகிறார்.



சிரஞ்சீவி



## கவர்ச்சியான 'அமைச்சர்'

சத்யராஜ் இயக்கி மூன்று வேடங்களில் நடித்துவரும் 'வில்லாதி வில்லன்' படத்தில் விசித்ராவுக்கு பெண் அமைச்சர் வேடம். அரசியலை கிண்டல் செய்யும் பாத்திரம். கவர்ச்சியும் கலந்துதான் நடிக்கிறார். சத்யராஜும் இருப்பதால் கிண்டலுக்கும் கிளுகிளுப்புக்கும் கேட்கவா வேண்டும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ...ார் தெலுங்குக்கு!


...ரீதேவியின் தங்கை மகேஸ்வரி ...டங்கள் இரண்டில் ஒப்பந்தமாகி ...' படத்தில் பாரதிராஜா அறிமுகம் ...ட்டால் என்னால் உயர்ந்திருக்க ...என்று நன்றியோடு பாரதிராஜா ... உச்சரிக்கிறார்.

## 25 வயது வில்லன்

'நாட்டாமை' படத்தில் வெளுத்து வாங்கியதோடு 'பிரபல வில்லனாகிவிட்டார் பொன்னம்பலம். திருமணமாகாத 25 வயது பொன்னம்பலத்திற்கு வீட்டில் மணமகள் தேடுகிறார்கள்.

## ராக்கம்மா மீண்டும் கையைத்தட்டு!

'தளபதி' படத்தில் 'அடி ராக்கம்மா கையைத் தட்டு' பாடலுக்கு ஆடியவர் சோனுவாலியா. இப்போது மீண்டும் சோனுவாலியா தமிழுக்கு வருகிறார்: சரத்குமார் நடிக்கும் புதிய படம் ஒன்றில் ஒரே ஒரு பாடலுக்கு நடனம் ஆடப்போகிறார் சோனுவாலியா. பாடலும் ரெடி. "ஒரு வெண்ணிலா சிறு பெண்ணிலா" என்று ஆரம்பிக்கிறது பாடல்.


சல்மான்கான்

## நூற்றி அறுபது கோடி வசூல்

சல்மான்கான்-மாதுரி டிக்ஷித் நடித்த படம் 'ஹம் அப்கே ஹை கௌன்'. இடையில் மார்க்கெட் டல்லான சல்மான்கான் மீண்டும் உச்சத்திற்கு வந்திருக்கிறார். 'ஹம் ஆப்கே ஹை கௌன்' சம்பாதித்துள்ள தொகை இந்திய நாணயமதிப்பின்படி நூறு கோடி. இங்கே அதன் பெறுமதி கிட்டத்தட்ட நூற்றி அறுபது கோடி. அப்பா! '1942 லவ் ஸ்டோரி' என்னும் படத்தில் வருவதையும் இது ...விட்டது. மாதுரி டிக்ஷித் இந்த படத்தில் நடிக்க வாங்கிய சம்பளம் 50 இலட்சம். இங்கே அதன் பெறுமதி கிட்டத்தட்ட 80 லட்சம் ... வருத்தமான செய்தி ஸ்ரீதேவியின் ... குறைந்துவிட்டது. 35 லட்சம் வாங்கியவர் இப்போது 25 இலட்சம்தான் வாங்குகிறார். ... வாங்குவது 20 இலட்சம். இந்தியில் அவரும் சிரஞ்சீவியும் நடித்த 'ஜென்டில்மேன்' தோல்வியைக் கழுவியிருக்கிறது.


கரிஷ்மா கபூர்

## கரிஷ்மா கபூர் என்ன சொல்கிறார்?

கரிஷ்மா கபூர் இந்தியில் வளர்ந்துவரும் நடிகை. சில நடிகர்களோடு நெருங்கிப் பழகினால் போதும். உடனே காதல் என்று கதை கட்டிவிடுகிறார்களே என்று வருத்தப்படும் கரிஷ்மா மேலும் சொல்வதாவது "திரை நிறைய கவர்ச்சியை அள்ளிக்கொடுக்கும் நடிகைகள் 'நான் இன்னும் சின்னப் பெண், எதுவுமே எனக்குத் தெரியாது' என்று சொல்வதெல்லாம் சுத்தப் பொய். நான் அப்படிச் சொல்ல மாட்டேன். இந்த ஆண்களின் குணமே விளங்கவில்லை. தாங்கள் யாரை வேண்டுமானாலும் 'சைட்' அடிக்கிறார்கள். பெண்கள் மட்டும் தலைகுனிந்து நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இது என்ன நீதி?" கேட்கிறார் கரிஷ்மா.

## இருபதுபேர் தேவை

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹுமான் ஒரு பேட்டியில் கூறியிருக்கும் கருத்து இது: "பணம் மட்டுமே குறியாக இருந்தால் பல படங்களை ஒப்புக்கொண்டு பத்து, பதினைந்து பேர்களை வேலைக்கமர்த்தி இசையமைத்து கொடுக்க முடியும். இன்றைய திரையுலகிற்கு என்னைப் போன்ற இருபது இசையமைப்பாளர்கள் தேவை. திறமையாளவர்களைக் கண்டுபிடித்து பொறுப்புக்களை ஒப்படைப்பது தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் கைகளில் இருக்கிறது." அடக்கமான பதில்.

## வளரும் வாரிசு

கமலின் அண்ணன் சந்திரஹாசனின் மகள் அனுஹாசன் 'இந்திரா' படத்தில் நடித்து வருகிறார். படத்தின் இயக்குநர் சுஹாசினி. அவரும் கமலின் அண்ணன் சாருஹாசனின் மகள். அனுஹாசனின் நடிப்பை பாராட்டுகிறார் சுஹாசினி. தனது குரல் போலவே அனுஹாசனின் குரலும் இருக்கிறதாம். படத்தைப் பார்ப்பவர்கள் சுஹாசினி தான் பின்னணிக்குரல் கொடுத்திருக்கிறார் என்று நினைக்கப் போகிறார்களாம். இடைநடுவே சிறு தடங்கலின் பின்னர் 'இந்திரா' படத்தின் படப்பிடிப்புக்கள் நடந்துவருகின்றன.


அனு அகர்வால்

## அனு-மது

திருடா-திருடா படத்தில் நடித்தவர் அனு அகர்வால். இந்தி திரையுலகில் ...மான நடிகையாக பேசப்படும் அனு ...னமும் குறைந்தது இருபது சிகரெட் ...பாராம். மதுவிலும் பிரியம் உண்டாம்.

## ரஜினி கொடுத்த அதிர்ச்சி குஷ்பு மெல்ல நழுவல்

'சூப்பர் ஷோ' நிகழ்ச்சியை சிங்கப்பூரிலும், கோலாலம்பூரிலும் நடத்திய ரஜினிகாந்த் அங்கு பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்தார். சினிமாவில் இருந்து விரைவில் விலகிவிடப் போவதாக ரஜினி கூறியதால் கூடச்சென்றவர்களே அதிர்ந்து போனார்களாம். எப்போது விலகுவார் என்று ரஜினி எதையும் தெரிவிக்கவில்லை.

குஷ்புவிடம் அவரது திருமணம் பற்றி நிருபர்கள் கேட்டனர். 'தனிப்பட்ட விசயங்களை கிளறவேண்டாம் பிளீஸ்' என்று சொல்லி நழுவிக்கொண்டார் குஷ்பு.

## ஐஸ்வர்யாவின் ஆட்டம்

ஆர்.கே. செல்வமணி இயக்கத்தில் மம்முட்டி-ரோஜா ஜோடியாக நடித்துவரும் படம் 'மக்களாட்சி'.

ஒரே ஒரு பாடல் காட்சியில் சிலுக்கை தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு நடனம் ஆடியிருக்கிறாராம் ஐஸ்வர்யா.

ஒரு பாடல் காட்சியில் நடிப்பதற்கு ஐஸ்வர்யா சொல்லியுள்ள சுருக்கமான விளக்கம் இதோ: "கல்யாணம் செய்ய முன்னர் இந்தப் படத்தில் கதாநாயகியாக நடிக்க கைநீட்டி பணம் வாங்கியிருந்தேன். அதனால்தான் வாங்கிய பணத்துக்கு வஞ்சகம் செய்யாமல் ஒரு நடனமாவது ஆடிக் கொடுத்திருக்கிறேன்." காரணத்தை நம்பலாமா?

## "இன்று பாரதிராஜாவின் மாணவன்"

பிரபு தனது அப்பா சிவாஜியோடு நடித்துவரும் படம் 'பசும்பொன்'. இரண்டு மாறுபட்ட பாத்திரங்களில் நடிக்கிறார் பிரபு. அன்று பாலசந்தரின் மாணவன் (நோட்) இன்று பாரதிராஜாவின் மாணவன் என்று தன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிறார் பிரபு. 'பசும்பொன்' தவிர சின்னவாத்தியார், பெரிய குடும்பம் போன்ற படங்களிலும் நடித்துக்கொண்டிருக்கிறார் பிரபு.

## அர்ஜுன்-விஜயசாந்தி ஜோடி 'தாயின் மணிக்கொடி'

ஆக்சன் கிங் அர்ஜுன், ஆக்சன் சூப்பர் ஸ்டாரினி விஜயசாந்தி இருவரும் இணைந்து நடிக்கும் படத்திற்கு பெயர் சூட்டியாக்கிவிட்டது. படத்தின் பெயர் 'தாயின் மணிக்கொடி.' 'ஜெய்ஹிந்த்' படத்தின் பின்னர் அர்ஜுன் கதை வசனம் எழுதி- இயக்கும் படம் இதுதான். பிரமாண்டமான செலவில் தயாரிக்கிறார்கள். படத்தின் தொடக்க விழாவின்போதே விநியோகஸ்தர்கள் முகாமிட்டிருந்தார்கள். பெரிதும் எதிர்பார்க்கப்படும் படங்களில் ஒன்று.


சோனாலி

## ...மீது எம்.ஜி.ஆர். கோபம்

... இருந்து தமிழக ... சென்றுபின்னரும் எம்.ஜி.ஆர் ... திரையுலகின்மீது ஒரு கண் ...திருந்தார். ... கமலஹாசன் இனம் ...அப்போது ... அறிமுகமாகியிருந்த ... பேட்டி ஒன்றில் ... சினிமாவில் டூப் போடாமல் ... நடிகர் தான் மட்டுமே ... கூறியதாக செய்தி ... போன் அவ்விஷயத்தை கமலுக்கு இன்ப ... காதில் வைத்த ... அதிர்ச்சி. ... எம்.ஜி.ஆர். ... கமலின் பேட்டி வந்த பத்திரிகையின் 'பேட்டி பார்த்தேன் ... சொல்லியிருக்கிறீர்கள் நாங்கள் எல்லாம் ... அப்படித்தானே?' ... கமல் பதில் சொல்ல முன்னரே போனை வைத்துவிட்டார் எம்.ஜி.ஆர். "டூப் போடாமல் நடித்தேன்" என்று சொன்னதைத்தான் குறிப்பிட்ட கமல் ... வேறு விதமாகத் திரித்து பத்திரிகை ... வெளியிட்டிருந்தது. ... சொல்ல எம்.ஜி.ஆர். வீட்டுக்கு விளக்கம் சொல்ல ... கமல். ஆனால் கமல்மீது கோபமாக இருந்த எம்.ஜி.ஆர் அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார். ... பத்திரிகைக்கு தனது மறுப்பை எழுதி உடனடியாகப் பிரசுரிக்குமாறு சொன்னார் கமல். மறுப்பு வெளியாகியது. தானே தொடர்பாக கமலுக்கு போன் செய்தார் எம்.ஜி.ஆர். "மறுப்பைப் படித்தேன். நல்லது" என்று ... கமலோடு பேசினார் எம்.ஜி.ஆர்.

## புதிய இரக்குமதி

'பம்பாய்' படத்தில் மனிரத்னம் இயக்கத்தில் ... கொய்ராலா நடித்திருப்பது தெரிந்த செய்தி. மனிரத்னம் இன்னொரு ... சோனாலி ...


## அடி தூள்

நெப்போலியன் நடித்துவரும் புதிய படமான 'மாயன்...' படத்திற்கான விளம்பர வாசகம் தூள் கிளப்புகிறது. அந்த வாசகம் இதுதான்: "பிரம்மனுக்கே தெரியாம பொறந்தவன் நான்... சோ... எமனோட லிஸ்டில் நான் இல்லை"


நிழல்கள் ரவி-ராதிகா படம்-தான் பெத்த மகனே (வெளிவந்துவிட்டது)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்


# லேடீஸ் ஸ்பெசல்



## சிநேகிதிகளுடன் பழகுவது எப்படி?

உங்களைத் தேடிக்கொண்டு வந்த சிநேகிதி கூறும் விஷயத்தை பொறுமையுடன் கேளுங்கள். அவள் சொல்லும் விஷயம் உபயோகமில்லாததாக இருந்தால் கூட அதை நீங்கள் முகபாவனை மூலம் வெளிப்படுத்திக் கொள்ள வேண்டாம். புன்முறுவலுடன் முழுவதும் கேளுங்கள். உங்களுக்கு சிநேகிதி சொல்லும் விஷயம் மிகவும் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் பிரச்சனை உள்ளவர்களுக்கு இருந்தாலும் அது மலையள வாய்த் தெரியும். அந்தப் பிரச்சனையைத் தீர்க்க உங்களால் முடிந்த பதில்களைக் கூறுங்கள். உங்களுக்குப் புரியாவிட்டால் நாசுக்காக வேறு யாரிடமாவது கேட்டுச் சொல்லுங்கள்.

- எந்தத் தோழியிடமும் முகத்தைச் சிடுசிடு வென்று வைத்துக்கொண்டு பேசாதீர்கள். உங்களுடைய கவலைகள், பிரச்சனைகள், கோபம் இவைகளை உங்கள் சிநேகிதியிடம் காண்பிக்காதீர்கள். சிரித்துக் கொண்டே பேசுங்கள்.
- தோழி உங்களிடம் ஒரு வேலையைக் கொடுத்து செய்யச் சொல்லிக் கேட்டால், அதில் உங்களால் முடிந்த ஈடுபாட்டைக் காட்டிச் செய்து கொடுங்கள். நாளைக்கு உங்களுக்கு ஒரு வேலை அவசரமாகச் செய்யப்பட வேண்டுமென்றால் அந்தச் சிநேகிதி செய்து கொடுப்பாள்.
- சிநேகிதி உங்களைப் பார்க்க வந்தால் அவள் ஏன் வந்தாள் என்பது போன்ற உணர்ச்சியை முகத்தில் பிரதிபலிக்க அவளிடம் பேசுவதையோ, நடந்து கொள்வதையோ தவிருங்கள்.
- உங்கள் சிநேகிதி உங்களிடம் ஏதாவது ஒரு விஷயம் பற்றி அபிப்பிராயம் கேட்டால் அவள் சொன்னதைப் பொறுமையுடனும், கவனமுடனும் கேட்டு அபிப்பிராயம் கூறுங்கள். வாக்குவாதம் செய்யக் கூடிய நிர்ப்பந்தம் ஏற்படும் போது மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால்,பிறர் கூறுவதைப் பொறுமையுடன் கடைசிவரை கேட்பதுதான். படபடப் புடன் வார்த்தைகளைக் கொட்டுவது விரோதத்தில் தான் முடியும்.
- அவர் பேசும்போது அவரை உற்சாகப் படுத்துங்கள். தற்பெருமை பேச வேண்டாம்.பிறர் உங்களிடம் தற்பெருமையுடன் பேசுவதைக் கேட்கும்போது உங்களுக்கு என்ன எரிச்சல் உண்டாகுமோ அதே எரிச்சல்தான் உங்கள் தோழிக்கும் உண்டாகும் என்பதை மறக்க வேண்டாம்.
- அவரைப் பற்றி அவர் இல்லாத போது இன்னொருவரிடம் அபிப்பிராயம் கூற வேண்டாம்.
- பொதுவாக சிநேகிதிகளிடம் எதையும் இரவல் வாங்க வேண்டாம்.
- கடன் வாங்க வேண்டாம்.
- கோபமாகப் பேச வேண்டாம்.
- முடிந்ததைச் செய்யத் தவற வேண்டாம்.



## மலரை இரசித்தால் மனதில் பரவசம்

உடலுக்கும், உடைகளுக்கும் நறுமண தைலங்கள் மனதுக்கு இதமான தன்மையைத் தருகின்றன.

இந்த நறுமண தைலங்களை மலர்களில் இருந்தே தயாரிக்கிறார்கள். மலர்கள் பற்றி மேலும் உபயோகமான சில தகவல்கள்:

மனதில் கவலை ஏற்பட்டால் அழகான மலர்களை இரசியுங்கள்.

கவலை பறந்துவிடும். மலர்கள் தரும் வாசனை மனதை வருடும். மலர்களின் நிறமும் மனதை லேசாக்கும் என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

வெண்மை மற்றும் வயலெட் பூக்கள் மனதை சாந்தப்படுத்தும்.

ஒரேஞ்ச், சிவப்பு, மஞ்சள் வண்ணப் பூக்கள் மனதை தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்துகின்றனவாம்.

நீங்களும் பரீட்சித்துப் பார்க்கலாமே.

## வீட்டுக் குறிப்பு

சுடுநீர் போத்தலில் வரும் துர்வாடையைப் போக்க செய்தித்தாள்களைச் சிறிது சிறதாக கிழித்து அதனுள் போட்டு தண்ணீர் ஊற்றி வைக்கவும். பின்பு கொஞ்ச நேரம் கழித்து நன்றாகக் குலுக்கி சுத்தம் செய்தால் பளபளப்பாகவும், துர்வாடை இல்லாமலும் இருக்கும். எக்காரணத்தைக் கொண்டும் பிரஷ்ஷை உபயோகப்படுத்த வேண்டாம்.

பாகற்காய் கசப்புத்தான். இருந்தாலும், கவலைப்பட வேண்டாம். பாகற்காயைச் சுத்தமாகக் கழுவி சிறிது சிறதாக நறுக்கி ஒரு பாத்திரத்தில் சிறிது உப்புப்போட்டுக் குலுக்கி சிறிது நேரம் வைத்து விட வேண்டும். பின்பு வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு அரைத்தேக்கரண்டி உளுந்து, பருப்பு, வெங்காயம், கறிவேப்பிலை, மிளகாய (நறுக்கியது) போட்டு வதக்கிவிடவும். நன்றாக வதக்கியவுடன் மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், உப்பு சிறிதளவை (ஏற்கெனவே உப்பு போட்டிருந்தால் சுவைக்கேற்றபடி போடவும்.)போட்டு திரும்பவும் வதக்கவும். பின்பு கடலைமாவு, தேங்காய் போட்டு பொரியல் செய்தால் சுவையாகவும், கசப்புத்தன்மை இல்லாமல் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும்.

## மச்சம் எங்கே?

உடலில் உள்ள மச்சங்களை வைத்து ஜோதிடம் கணிப்பதை 'மோலோசாபி' என்கிறார்கள்.

மச்ச ஜோசியப்படி தெரிய வந்துள்ள சில சமாச்சாரங்கள் சொல்கிறோம்.

சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

முழங்காலில் மச்சம் இருந்தால் மணவாழ்க்கை சந்தோசமாக அமையும். இடது முழுங்காலில் மச்சம் இருந்தால் மிகவும் முரட்டுத்தனம் இருக்கும்.

## முடிவளர முத்தான யோசனை!

தலைமுடி நன்றாக வளர வீட்டிலேயே எளிதான முறையில் எண்ணை தயாரித்துக் கொள்ள லாம். முதலில் தேங்காய் எண்ணெய் அரை லீற்றர் கறிவேப்பிலை இலைகளைப் பறித்துச் சுத்தமாகக் கழுவிப் பசும்பாலை விட்டு நன்றாக அம்மியில் அரைத்து வடைகளாகத் தட்டிக்கொள்ளவும். வாணலியில் எண்ணெயை ஊற்றிக் கொதித்ததும் தட்டிய வடைகளைப் போட்டு இளம் பச்சை நிறமானதும் வாணலியை இறக்கி வடைகளை எடுக்கவும். எண்ணெய் ஆறியபின் போத்தலில் ஊற்ற வேண்டும். தலைமுடி கறுப்பாகவும், நீளமாகவும் வளரும்.

## கைவேலைப் பகுதி

### எஸ்-எஸ்.

## மெழுகுவர்த்தி தாங்கி

## CANDLE STAND

**தேவையான பொருட்கள்.**

வாணிஷ் பேப்பர் இரு நிறங்கள்

மெழுகுதிரி- நடுத்தரமானது.

மெழுகுதிரி நிறுத்துவதற்கான தக்கை.

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**

பேப்பர் 6 அங்குல அகலம், 15 அங்குல நீளம். (இவ்வாறு இரு பேப்பர்களை எடுக்கவும்.)

**செய்முறை:**


மேற்குறிப்பிடப்பட்ட அளவிலான ஒரு பேப்பரை படம் 1ல் காட்டியுள்ளவாறு சுருட்டுக. அதனைச் சுருட்டி முடிவைடய இருக்கும் அதே இடத்தில் அடுத்த பேப்பரை வைத்து சுருட்டவும்.

சுருட்டிய பேப்பர் குழாய் வடிவத்தில் அமைந்ததும் அக்குழாய் வடிவத்தினை 3 அங்குல தூரத்திற்கு- படம் 2ல் காட்டியபடி வெட்டவும். அவ்வாறு வெட்டிய பகுதியை கீழ்நோக்கி விரல்களால் மடிக்கவும். மடிக்கும் பகுதி படம் 3ற்கானது.

மடித்த அப்பகுதியின் நடுவில் தோன்றும் துவாரத்தில் விரலினைவிட்டு இலேசாக மேல் நோக்கி இழுக்கவும். இழுக்கும்போது படம் 4ன் அமைப்பு தோன்றும்.

இவ்வாறு இழுக்கப்பட்ட தாங்கியின் ஊடே மெழுகுதிரியினை உட்செலுத்தி தக்கையின் மேல் அத்திரியினை நிறுத்தி கிளம்பியுள்ள அடிப்பாகப் பேப்பருக்கு ஒட்டும் பசை (கம்ரேப்) போட்டு ஒட்டவும். (இது படம் 5ற்குரியது.)

குறிப்பு: (இரு கலரில் அல்லது பல வர்ணத்தாள் மிகவும் அழகினைக் கொடுக்கும்)




## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது–சுகந்தினி

## கருணைக்கிழங்கு மசியல்

**தேவையான பொருட்கள்:**

கருணைக்கிழங்கு-1/4 கிலோ

பச்சை மிளகாய்- 3

கடுகு- ஒரு தேக்கரண்டி

உப்பு-அளவாக

புளி-சிறிய எலுமிச்சை அளவு உருண்டை

சின்ன வெங்காயம்-15

வெண்ணெய்-25 கிராம்

**செய்முறை:**

கருணைக்கிழங்கை நன்கு வேக வைத்து தோல் உரித்து, பின் அதனை கைகளால் நன்கு நசுக்கி மசியலாக வைத்துக்கொண்டு அத்துடன் புளிக்கரைசலை விட்டுப் பிசைய வேண்டும். உப்பும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

5 நிமிடம்வரை இதனை ஊறவைத்தபின் வாணலியில் வெண்ணெய் ஊற்றிக் கொதிக்க வைத்து, கடுகைப்போட்டுப் பொரிய வைத்து, நறுக்கி வைத்த வெங்காயம், பச்சை மிளகாயைப் போட்டு, நன்கு வதக்கி, பின் மசியலாக வைத்துள்ள கிழங்கையும் போட்டு வதக்க வேண்டும்.

## முக அழகு பெற



முகத்திற்கு சிறிது தேனும் இரண்டு சொட்டு எலுமிச்சை சாறும் கலந்து முகத்தில் தடவினால் முகம் பளபளப்பாக இருக்கும்.

முகத்தில் கரும்புள்ளிகளுக்கு தினமும் நல்ல பழுத்த வாழைப்பழத்தை தேய்த்து வந்தால் சிறிது, நாள் கழித்து கரும்புள்ளிகள் மறைந்துவிடும்.

## பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல 2

## மகளிர் மட்டும் –பரிசுப் போட்டி–

### முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.



## கையேந்தும் கனவு ராணி

### வியப்பான பெண்

ஹொலிவூட் திரையுலகில் மர்லின் மன்றோவுக்குப் பின்னர் கவர்ச்சியால் இரசிகர்களை கவர்ந்தவர் எலிசபெத் டெய்லர்.

உலகெங்கும் பலகோடி இரசிகர்களின் சூடான கனவுகளுக்கு காரணமாக இருந்த டெய்லர் இப்போது திரையுலகில் இருந்து ஒதுங்கியிருக்கிறார்.

ஆடையைக் குறைத்து ஒரு காலத்தில் திணறடித்தவர் இப்போது தனது சேவை ஒன்றால் உலகை வியக்க வைக்கிறார்.


'எய்ட்ஸ்' நோயைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான அமைப்புக்கு நிதி திரட்டும் டெய்லர், இலவசமாக நடித்தும் உதவுகிறார்.

ஒரு காலத்தில் கோடி கோடியாக சம்பாதித்த எலிசபெத் டெய்லர் இப்போது வீடு வீடாகச் சென்று சமூக சேவைக்கு நிதி திரட்டுகிறார். தாராளமனம்.

பொப்பிசை மன்னன் மைக்கெல் ஜாக்சனுக்கு எலிசபெத் டெய்லர் கொடுத்த முத்தம் பிரபலமானது. மைக்கேல் ஜாக்சன் டெய்லரின் பரம இரசிகர்.

மர்லின் மன்றோவைப் போல இரசிகர்கள் மனதில் நிலையான இடத்தில் இன்றும் இருப்பவர் எலிசபெத் டெய்லர்.

மர்லினைப் போலவே எலிசபெத் டெய்லருக்கும் காதலர்கள் சற்று அதிகம்.



www.padippakam.com

# கைகொடுங்கள் மது ரகவி



தமிழக கவிஞர் வைரமுத்து தனது கவிதைகளை ஓடியோ கசட் மூலமாக வெளியிட்டிருந்தார். மூன்று வெளியீடுகள் வைரமுத்து தந்தார்.

இலங்கையிலும் வைரமுத்து பாணியில் ஒரு முயற்சி. மதுரகவி பாஸ்கரன் அந்த முயற்சியின் சொந்தக்காரர். 'கவிதாப் பிரவாகம்' என்ற தலைப்பில் 16 கவிதைகள் மற்றும் சில குறுங்கவிதைகள்.

கவிஞர் வைரமுத்து வெளியிட்டு வைக்க மதுரகவியின் தாயார் முதல் ஒலிப்பேழையைப் பெற்றுக்கொண்டார். மதுரகவி அம்மா பிள்ளை.

இசையின் ஆதிக்கம் சில கவிதைகளில் சற்றே அதிகம். ஒலிப்பதிவும் இடறுகிறது. கவிதைகளில் மதுரகவி ஒரு முன்னாள் போராளி என்பது ஆங்காங்கே பளிச்சிடுகிறது. சில கவிதைகளில் வாசிப்புக்கு ஏற்ற வார்த்தைகள் இல்லாமல் போனதும் குறை. கண்ணால் தாளில் கண்டு உணர எழுதப்படுவதற்கும், காதால் கேட்டுணர எழுதப்படுவதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை கவனத்தில் கொள்ளவில்லை. அதனால் ஆழமான உணர்ச்சியுள்ள கவிதைகள்கூட கேட்கப்படும்போது அந்த உணர்ச்சியை தராமல் போகின்றன.

எனினும், தனி ஒருவராக நின்று வேறுசில தனிப்பட்ட நண்பர்களின் உதவியோடு மதுரகவி சாதித்துள்ளதில் ஒரு கலைஞனின் தன்னம்பிக்கை உற்சாக முகம் காட்டுகிறது. மதுரகவியின் சில கவிதைகள் 'தேன் கிண்ணத்திலும்' வெளிவந்திருக்கின்றன.

"நீல நெடும்திரை ஆழி-நாம்
நேசித்த நெல்வயற் காற்று.
வானம் தொடும் பனை உச்சி-இவை
யாவும் விலங்குண்டு போச்சோ!

ஆளும் மனிதர்க ளிங்கு
ஆடும் சதுரங்கப் போரில்

நாமும் அகப்பட்டுக் கொண்டோம்-இனி
நாளும் வதைபட்டுச் சாவோம்."

இவ்வாறான நல்ல கவிதைகள் பலவும் உண்டு.

'கவிதாப் பிரவாகம்' வேண்டுவோர் தொடர்புகொள்ள முகவரி இதோ:

**மதுரகவி**
**த.பெ.இல. 1354**
**கொழும்பு.**

# தேன் கிண்ணம்

## இளமையும் முதுமையும்

முதுமை வந்து இளமை முகத்தில்
முத்தம் கொடுக்குது—அந்த
முதுமையன்பை இளமைதள்ளி
முகத்தைத் திருப்புது!

முகத்தைத் திருப்பி முறைத்தபோதும்
முத்தம் கிடைக்குது—இளமை
அகத்தில் மட்டும் அழகையெண்ணி
அழுது வடிக்குது!

அழுதுமென்ன இளமை தேற்று
அணைத்துக் கொள்ளுது—முதுமை
இளமை வடிவை தன்னுள் சேர்த்து
இணைந்து வெல்லுது.

'அழிந்திடாத அழகு' என்று
ஆசை நினைத்தது—அந்த
கழிந்தகால நினைவு இன்று
கண்ணை நனைத்தது.

அழகுபோலே மனிதவாழ்வும்
அழிந்துபோய்விடும்—எங்கள்
இளமைக்காலக் கனவும் சிர்நாள்
இறந்துபோய்விடும்!

இளமை வாழ்வில் முதுமை நிலையை
எண்ணிப் பார்ப்பதார்? அதை
கிழடு தட்டிப் போனபின்தான்
கிண்டிப் பார்க்கிறோம்!

செ. குணரத்தினம்-அமிர்தகழி.



## வா...... ஜாதி பற்றிப் பேசுவோம்.....

அவள் திட்டினாள்.
வார்த்தைகளால்
நகங்களைப் பிடுங்கினாள்.
நுனி மூக்கைச்
சிவக்க வைத்தாள்.

மகளைப் பற்றிப்
புராணம் பாடி
ஜாதியில் முற்றுப்புள்ளி இட்டாள்.
காற்றை உண்டு
நெருப்பைக் குடிப்பதுபோல்
பெருமைப்பட்டாள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.
மகளின் உடைகளை
உதறிப் பார்த்தேன்.

வித்தியாசமாய் ஒன்றும் விழவில்லை!

அவளுக்கு என்னைத் தெரியும்
எனக்கு மனிதரைத் தெரியும்
காதலி.... வா...
ஜாதி பற்றிப் பேசுவோம்.
நீயும் நானும்—என்ன ஜாதி என்பதை
மகப்பேற்று மருத்துவர்
உறுத்திப்படுத்தும் வரை!!

எம். சுரேஷ்-கொழும்பு பல்கலைக்கழகம்.

## காலம் பிறக்கும்

வாழ்வைத்
தொலைத்துவிட்டு
வானம் பார்த்து
ஏங்காதே!
உன்னில் வீழ்ந்து
தொலைந்துபோக
வானம் நீயல்ல!

விடிந்த பின்
எப்போதும்
விடிவெள்ளியும்,
முடிந்தபின்
மறுபடி
முதலிரவும்
வருவதேயில்லை!

வாலிபம்
உனைக்கண்டு
வணக்கம் சொன்ன
வானவில் காலத்தில்
வசந்தம் உன்மீதில்
உமிழ்ந்துவிட்டுப்
போனவை
எச்சிலானாலும்
சேமித்து வை!

எச்சங்களும்
மிச்சமின்றி
வாடும் நாட்களில்
அவை உச்சமாகலாம்!

மனவெளிகளில்
சோகம் வளர்த்து
மணிவிழிகளில்
கண்ணீர் பனிபூக்கும்
உன்விரக்தி
வெள்ளாமைக்கு
சந்தோஷ நீர்பாய்ச்சு.

இப்போ
நீ அண்ணாந்து
பார்க்கின்ற வானம்
உன்னை
அண்ணாந்து பார்க்கும்
காலம் பிறக்கும்!

பூண்டுலோயா மெய்யன் நடராஜ்

□□□

## ஏங்கும் இதயம்

நான்
சகாராவைப்போல்!

அருவியாய் ஆரம்பித்து
நீர் வீழ்ச்சிகளாய்
என் மீது பொழிந்த
உன் ஸ்நேகங்கள்!

இன்று
மழைத்துளி ஒன்றாவது
விழுவதற்காக காத்திருக்கும்
ஓ........நான்
பாலைவனம்!

-ஹெந்தளை நவா-



## கருக்கட்டிய கவிதை!

கற்பனை
சதுக்கத்தில்
பதுக்கப்பட்டிருந்த
என் கனவுகள்....!
அத்துமீறிப்
பிரவேசம் பெற்றன
உன்னில்!

*

காதல்
பிரசவத்திற்காய்
கண்விழித்து
கர்ப்பிணியாய்
'கவிதை' சுமக்கிறது
இதயம்...

*

இருட்டுச் சாமத்திலும்
குருட்டுப் புத்திக்கு
புலப்படாமல்
மருட்டிய பூதாகரமாய்,
மடை திறந்த வெள்ளமாய்
உன்னைப்பற்றி
கவிதையெழுத வரும்!

*

புதுக்கவிதையின்
பூர்வீகம் வரை
பூத்திரிந்து
உன் அழகைப்
பிணைக்க
பித்தனாய்,
பிதன்று போவேன்...!

*

கண்மணி!
கம்பன் வீட்டு
கட்டிலும்

கவிபாடியதாம் அன்று!
இப்போதெல்லாம்....
என் வீட்டு
குட்டிப் பூனையும்
கொஞ்சம் கொஞ்சமாய்
உன்னை
உச்சாடனம் செய்கிறது....!

**

பாணகமுவ எஸ். முஸ்தாக்.



## உயிர் உரசும் நிமிஷங்களில்......

பூமி சுழல்கிறதோ.......
இல்லையோ........

•

சிந்தனை கிரணங்கள்
காற்றை துளைத்து
நீரில் விழுந்து—
சூரியனைத் தொட்டு.....
பகுத்தறிவுக்குள் சிறைப்படாது...
எங்கோ செல்கிறது.....

•

நேற்று இருந்த நானோ...
சில நிமிஷங்களுக்கு
முன்னிருந்த நானோ....
தற்போது இல்லை.

•

பழையது ஒவ்வொன்றிலும்
ஒவ்வொரு புதிதிது—
அமர்ந்து செல்கிறது....

•

மரணமில்லையானால்
என்னை வெறுத்த
இந்த—
காட்டு மிராண்டி வாழ்வை
எங்கு கொண்டு புதைப்பேன்....?

•

மரணமே...!
எப்படியாவது
என்னிடமும் வா...

•

வாழ்க்கையின்
சொர்க்கத்து மடியில்
உறங்கிக் கொண்டிருந்த
நான் எழுந்து.....!
மரணத்தின் நுனி நூலில்
என்னை—
தொங்கவைத்திருக்கிறேன்

•

மரணம் தான் சொர்க்கம்
உயிர் பிரியும் வினாடியில்
'பலமாக' அடிக்கும்...
என் இதயத்துக்கு

சலங்கை கட்டிவிடுங்கள்...!

•

என் கவிதைகளை
காணிக்கை தருகிறேன்

•

மரணமில்லாவிட்டால்
பூமியிலுள்ள ஜீவராசிகள்
பாவம்....பாவம்...!!

•••

-பொத்துவில் ஏ. மஜீத்-

## இந்த வாரம் உங்கள் பலன்

(26.02.95 முதல் 04.03.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், சனி |
| மேடம் | - கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| மகரம் | - வெள்ளி, புதன் |

சந்திரன்-மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் இழப்பு, மனக்கவலை. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 10 மணி |
| புதன்- அந்நியர் தொல்லை, தொழில் இழப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரியத்தடை. | காலை 7 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 1 மணி |
| சனி- மனக்கவலை, தொழில் நட்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு-தொழில் மந்தம், கடன் சுமை. | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- அந்நியரால் தொல்லை, மனக் கவலை. | காலை 10 மணி |
| வியாழன்- உறவினரின் இழப்பு, தொல்லையதிகம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- செலவு மிகுதி, காரியத்தடை. | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, கடன்படல். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- காரியசித்தி, பொருள் வரவு. | காலை 8 மணி |
| வியாழன்- துன்பம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- உறவினரால் கஷ்டம், மனக் கலக்கம். | காலை 6 மணி |
| சனி- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், மனப்பயம். | காலை 6 மணி |
| திங்கள்- காரியசித்தி, கடன் படல். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், பொருள் இழப்பு. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, முயற்சியதிகம். | காலை 7 மணி |
| வியாழன்- கடன்சுமையதிகம், மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, கௌரவம். | பி.ப. . 2 மணி |
| சனி- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- அந்நியர் தொல்லை, மனக்கவலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- புதிய நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், வீண் அலைச்சல். | காலை 8 மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- துன்பம் நீங்கும், பணச் செலவு, | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-9

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- துன்பம் நீங்கும், காரியானுகூலம். | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய தொழில் வாய்ப்பு, பணச் செலவு. | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| சனி- துயர் அதிகம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், பொருள் வரவு. | காலை 6 மணி |
| புதன்- காரியசித்தி, பணவரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், அலைச்சல் மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, பயனற்ற செயல். | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பூமியால் இலாபம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், மனக்கவலை. | காலை 6 மணி |
| திங்கள்- துன்பமதிகம், வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியரால் தொல்லை, பொருள் இழப்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- காரியத்தடை, கடன்படல். | காலை 7 மணி |
| வியாழன்- செய்தொழில் விருத்தி, முன்னேற்றம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மனக்கவலை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| சனி- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், கடன் சுமை. | பகல் 12 மணி |
| திங்கள்- பொருள் வரவு, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- அந்நியரால் கஷ்டம், மனக்கவலை. | பி.ப. 1 மணி |
| புதன்- காரியசித்தி, கௌரவம். | காலை 8 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், கடன்படல். | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, முன்னேற்றம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- முன்னேற்றம், பொருள் வரவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- துன்பம் நீங்கும், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- பயனற்ற செயல், மனக் கவலை. | பகல் 12 மணி |
| வியாழன்- மனக்கவலையதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்தநிலை. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மாற்றம், பொருள் வரவு. | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் பழி, மனக் கவலை. | காலை 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| வியாழன்- காரியானுகூலம், பொருள் வரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| சனி- பொருள் வரவு, உறவினர் உதவி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரியத்தடை, மனப்பயம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, காரியானுகூலம். | காலை 7 மணி |
| புதன்- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்- உறவினர் உபத்திரவம், மனக்கவலை. | காலை 6 மணி |
| வெள்ளி- உயர்ந்த நட்பு, தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

www.padippakam.com







## வாழ்த்துவோம் பாப்பா

வாழ்க! வாழ்க! தமிழ் வாழ்க!
வணக்கம் அன்னை தமிழே வாழ்க!
ஏழைகள் துயரை துடைப்பவர் வாழ்க!
இன்பத் தமிழை வளர்ப்பவர் வாழ்க!

தூய எண்ணம் படைத்தவர் வாழ்க!
எங்கும் என்றும் நல்லவர் வாழ்க!
சாதிக் கொடுமையை சாய்ப்பவர் வாழ்க!
சமுதாயத் தலைவர்களும் வாழ்க!

தன்னையே பிறர்க்கு கொடுப்பவர் வாழ்க!
தமிழை உயிராய் கொண்டவர் வாழ்க!
ஒழுக்கம் உடையவர் சிறப்புடன் வாழ்க!
அவர் வாழ்க்கை முழுதும் வளமுடன் வாழ்க!

ஊமை-குருடர்-முடவர் வாழ்க!
எளியவர் எமைப்போல் சுகமுடன் வாழ்க!
பண்புள்ள மாணவர்கள் வாழ்க! வாழ்க!
பார் போற்றும் பாரதிபோல் புகழ் கொண்டு வாழ்க!

செல்வன்.இராமநாதன் தமிழ்வண்ணன்-இரத்தினபுரி

"பாட்டினில் அன்பு செய்
பிணத்தினைப் போற்றேல்
பிழைக்கு இடங்கொடேல்
புதியன விரும்பு
பூமி இழந்திடேல்."
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# முயலின் சாகசம்



காலையில் கண் திறந்து பார்த்தது அந்த முயல்குட்டி. பச்சைப் புல்லையும், நீல நிற ஆகாயத்தையும் பார்த்து உலகம் எவ்வளவு அழகாக இருக்கிறது என்று வியந்தபடி, குதித்துக் குதித்து ஓடியது.

அப்பொழுது மரக்கிளைகள் சடசடத்தன. பறவைகள் படபடவெனச் சிறகடித்தபடி பறந்து சென்றன. அவை எழுப்பிய ஒலியால் பயந்துபோன முயல்குட்டி, ஏதோ ஒரு அசம்பாவிதம் நடந்திருக்கிறது என்று நினைத்தது. இந்த உலகம் எவ்வளவு பயம் நிறைந்தது என்று எண்ணியது. நாம் பயப்படுவதால்தான் இப்படி எதற்கும் பயப்படவேண்டி ஏற்படுகிறது. இனிமேல் இப்படி இருக்கக்கூடாது என்று நினைத்துக்கொண்டது.

உடனே அது ஓடிப்போய் ஒரு பாறையின் மீது ஏறி நின்றது. தன் முன்னங் கால்களைத் தூக்கி, காதுகளை மேலே உயர்த்தி, சிவப்பு மணிக் கண்களை உருட்டி, "எனக்கு யாரிடமும் பயமில்லை, துளிகூட அச்சமில்லை. எதற்கும் பயப்பட மாட்டேன்," என்று காடு முழுவதும் கேட்கும்படி கத்தியது.

அதன் கத்தலைக் கேட்ட தாத்தா, பாட்டி முயல்களும், அப்பா, அம்மா முயல்களும் ஓடி வந்தன. அண்ணன், அக்கா முயல்களும் அவைகளுடன் சேர்ந்து வந்தன. குட்டி முயல் நின்ற பாறையைச் சுற்றி எல்லா முயல்களும் கூடிவிட்டன.

நீளமான காதுகளையும், குட்டையான வாலையும் கொண்ட அந்த குட்டி முயல் திரும்பத் திரும்ப, தனக்கு யாரிடமும் துளிகூட அச்சமில்லை என்று சொல்வதை எல்லா முயல்களும் கேட்டுக்கொண்டிருந்தன.

தாத்தா முயல் நன்றாக நிமிர்ந்து பாறையில் நின்ற குட்டி முயலைப் பார்த்து, "டேய், உனக்கு ஓநாயிடம் கூடப் பயம் கிடையாதா?" என்று கேட்டது.

"ஓநாயிடமா?" என்று கேட்டுவிட்டுக் கடகடவெனச் சிரித்த குட்டி முயல், "ஓநாய் மட்டுமல்ல, நரி, புலியிடம் கூட எனக்குப் பயம் கிடையாது. கொஞ்சம் கூடப் பயம் கிடையாது". என்றது.

"உனக்கு அவ்வளவு தைரியமா?" என்று வியப்போடு கேட்டது பாட்டி முயல்.

"தைரியமல்ல அது அசட்டுத் தனம்," என்றது தாத்தா முயல்.

"ஒரு ஓநாயோ, அல்லது ஒரு நரியோ வரட்டும்.... அப்போது தெரியும் நான் அசடா அல்லது தைரியசாலியா என்று..." இப்படிக் கூறியது குட்டி முயல். இதைக் கேட்டதும் எல்லா முயல்களும் சிரித்தன.

இப்படி முயல்கள் எல்லாம் பேசிக் கொண்டிருந்தபோது, அந்த வழியால் வந்த ஓநாயின் காதில் இவற்றின் பேச்சுக்குரல்களும், சிரிப்பொலிகளும் கேட்டன. ஓநாய், முயல்கள் பேசிக் கொண்டிருக்கும் பாறைக்குச் சமீபமாகச் சென்றது. பதுங்கிப் பதுங்கிச் சென்ற ஓநாய், இலை, தழைகளுக்குள் ஒளிந்து நின்று தருணம் பார்த்துக்கொண்டு நின்றது.

குட்டி முயல் பாறையில் நின்றபடி, "இப்போது ஒரு ஓநாய், அல்லது ஒரு நரி என் கையில் கிடைத்தால் அதை நார் நாராக கிழித்து லபக் லபக்கென்று விழுங்கி விடுவேன்," என்று வீராப்புடன் பேசியது ஓநாய்க்குக் கேட்டது.

'அப்படியா தம்பி இரு.இரு. உன்னையே நான் விழுங்கி விடுகிறேன்', என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டது ஓநாய்.

"கேளுங்கள் பயந்தாங்கொள்ளிகளே... நான் தைரியசாலி. உங்களைப்போல் பயந்தவனல்ல..." என்று நாற்புறமும் பார்த்துச் சொல்லிக்கொண்டிருந்த குட்டி முயல், செடிகளுக்கு அருகே சிவந்த நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு, கூரான பற்களுடன் இருக்கும் ஓநாயைப் பார்த்து விட்டது.

"என்னை நம்ப மாட்டேன் என்கிறீர்கள். இப்போது நான் ஒன்று செய்யப் போகிறேன். அதை கவனியுங்கள். நான்... நான் நான்...", என்று சொல்லியபடி பந்து மாதிரி உயரே துள்ளி அப்படியே ஓநாயின் அகலமான நெற்றியின்மேல் பொத்தென்று விழுந்து, ஓநாயின் முதுகின் மேல் துள்ளிக் குதித்து, மீண்டும் பாறை மீது வந்து குதித்து கம்பீரமாக எழுந்து நின்றது.

முயல் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் ஓநாய் மீது பாய்ந்ததால், தன்னை யாரோ பெரிய கல்லொன்றால் தாக்கி விட்டதாக நினைத்த ஓநாய் தப்பினோம், பிழைத்தோம் என்று தலை தெறிக்க ஓடியது.

அதை எல்லா முயல்களும் பார்த்து விட்டன. உடனே அவை எல்லாம் பாறையைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டன.

"அருமை முயலே...நீ சொன்னபடி அஞ்சா நெஞ்சன்தான்... நம்மை எல்லாம் அடித்துச் சாப்பிடும் கிழட்டு ஓநாயை அடித்துத் துரத்திவிட்டாய் ! நீ பெரிய வீரன்தான், அசட்டுத் தைரியத்தில்தான் பேசுகிறாய் என்று உன்னைத் தவறாக எண்ணி விட்டோம், உண்மையிலேயே நீ அச்சம் இல்லாதவன்தான். வீரன்தான்," என்று பாராட்டின.

## விடுகதைகளும் விடைகளும்

01. சமையல் செய்யும் இடத்திலும் இருப்பான். சாமி சன்னிதானத்திலும் இருப்பான்- யார் அவன்?
02. ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக் காட்டுபவள்; ஆனால் எல்லோர்களாலும் வெறுக்கப்படுபவன் யார் அவள்?
03. கல்லையும் ஒரு எண்ணையும் இணைத்தால் ஒரு ஊரின் பெயர் வரும்-அந்த ஊர் எது?
04. ஓடாத ஓடை, நீரில்லாத ஓடை, ஆனால் அது ஊரொன்றின் பெயர் வரும் ஓடை. அதுஎன்ன?
05. ஒரு எண்ணையும் வணங்கக் கூடியவைகளையும் இணைத்தால் ஒரு திரைப்படத்தின் பெயர் வரும். அது என்ன?
06. கடையிலும் இருப்பான்.கல்யாண வீடுகளிலும் இருப்பான். யார் அவன்?
07. மலை ஒன்று பின்னால் உண்டு. தாவரம் ஒன்று முன்னால் உண்டு அது எந்த ஊர்?
08. வெள்ளையன் ஓடினால் கறுப்பனும் ஓடுவான் அவன் யார்?
09. பெண்களிடம் இது நிலையாக இருக்கும். தலைவர்களிடம் இது சில மணி நேரம் இருக்கும். அது என்ன?
10. அண்ணன் சமையலுக்கு உதவுவான் தம்பி எல்லோருக்கும் உதவுவான். யார் அவர்கள்?
11. பூ ஒன்று உண்டு. அதற்கு ஆதவன் பெயர் முன்னாலும் அகிம்சையின் வள்ளல் ஒருவரின் பெயர் பின்னாலும் உண்டு. அது என்ன பூ?
12. கடையிலே பூவாக இருக்கும். வீட்டிற்கு வந்தால் நீராக மாறும் அது என்ன?
13. பறக்கக் கூடிய ஒன்று. அதற்கு நான்கு எழுத்துகளுமுண்டு. முதல் எழுத்தை எடுத்தால் காப்பாற்றப்பட வேண்டிய ஒன்று. அது என்ன?
14. ஆணுக்கு எதிர்ச் சொல் ஒன்றையும் எண்ணையில் எரியும் ஒன்றையும் இணைத்தால் படத்தின் பெயர் ஒன்று வரும். அது என்ன?
15. பார்க்கக் கூடிய ஒன்று. அதற்கு நான்கு எழுத்துகளும் உண்டு மூன்றாவது எழுத்தை எடுத்தால் ஊர் ஒன்று உண்டு. அது என்ன?

1. தேங்காய் 2. காகம்
3. கல்லாறு
4. காங்கேயன்ஓடை
5. மூன்று தெய்வங்கள்
6. வாழைப்பழம்
7. புல்லுமலை
8. கண் 9. மாலை
10. தேங்காய், குரும்பை
11. சூரியகாந்தி பூ
12. உப்பு 13. விமானம்
14. பாவை விளக்கு
15. கண்ணாடி

தொகுப்பு-ஏ. ஆர். பாத்திமா பர்வின்
மட்/அல்ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி-05

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.03.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 80
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 77

பரிசுக்குரியவர்
ஏ.சியாப்டீன் இம்தியாஸ்
தமிழ் மகா வித்தியாலயம்-பூண்டுலோயா.

பாராட்டுக்குரியவர்கள்:

சண்முகநாதன் சர்வனந்தா-கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை.

ரட்ணம் உஷ்சாந்தினி
கைலன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்-ஹட்டன்.


அ.க. முஹமட் ஜலீதீன்-மகளிர் வித்தியாலயம்,சம்மாந்துறை.

ஆர். சாந்தகுமார்-கொழும்பு-6.

எஸ்.ஐ. பாத்திமா பஸ்மியா-பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம், புத்தளம்.

எஸ். பரமேஸ்வரி-மொனராகலை.

## அறிவோம் மனதில் பதிவோம்



கிழக்கு ஆபிரிக்காவில் வாழும் கிரினெக் மான்களுக்கு நீர் அருந்த வேண்டும் என்ற அவசியமே இல்லை. அவை தின்னும் இலை, தழைகளிலேயே அவற்றின் உடலுக்கான நீர்ச்சத்துக் கிடைக்கிறது.

தென் ஆபிரிக்காவிலுள்ள கொலம்பிய நாட்டில் 1983ம் ஆண்டு எமிலி மார்ட்டின் என்பவருக்குச் சொந்தமான பண்ணையில் 82 சென்ரி மீற்றர் விட்டம் உள்ள மகரந்தமுடைய மிகப்பெரிய சூரிய காந்தி பூ பூத்தது.





அமெரிக்காவைச் சேர்ந்த வில்லிபோஸ்ட் என்பவர் தனியாக விமானம் செலுத்தி உலகைச் சுற்றி வந்தார். 1933ம் ஆண்டு ஜுலை 15 ம் திகதி முதல் 22ம் திகதி வரை அவர் இந்தச்சாதனையைச் செய்தார்.

அல்பெட்ராஸ் என்ற பறவை உலகம் முழுவதும் சுற்றக்கூடியது. ஒரு நாளைக்கு 500 கிலோ மீற்றர் தூரம் வரை இது தொடர்ந்து பறக்கும். முட்டையிடும் சமயங்களில் மட்டும்தான் தரையில் தங்கும்.

## கம்பளிப் பூச்சியின் நடிப்பு



ஒரு வகை விட்டில் பூச்சிகளின் முட்டையிலிருந்து வெளிவரும் கம்பளிப்பூச்சிகள், பார்ப்பதற்கு மரக்குச்சிகளைப் போல இருக்கும். இவை மரக்குச்சிகளுடன் ஒன்றாக கிளைகளில் நிமிர்ந்த நிலையில் இருக்கும். ஈக்களும், சிறு பூச்சிகளும் இவற்றை மரக்குச்சிகள் என்று நினைத்து இவற்றின் மீது ஏறும். இவை ஏறித் தலைப்பக்கம் வரும்வரை காத்திருந்து, தலைப்பக்கம் வந்ததும் பூச்சியைப் பிடித்து உண்ண ஆரம்பித்து விடும். இப்படிக் குச்சிகளைப் போல நடித்தே பூச்சிகளைப் பிடித்து உண்பவை இந்தக் கம்பளிப் பூச்சிகள்.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன—எழுதுங்கள்.
முகவரி-
பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இல—1772
கொழும்பு.

www.padippakam.com




பவத்ராதன் திருமேனி முற்றத்தில் நிலைகொள்ளாமல் அலைந்து கொண்டிருந்தார்.

வேலைக்காரன் குஞ்சன் மேல் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு திருமேனியின் பின்னால் நிழல்போல் நடந்தான். அவன் மனசு நீலகண்டன் திருமேனியை உள்ளுக்குள் சபித்துக்கொண்டேயிருந்தது.

'வலுவில் போய்க் கேட்டும் ஸ்ரீலதாவைக் கோகுலுக்குத் திருமணம் செய்விக்க மறுத்து விட்டாரே நீலகண்டன்! இப்போது என்ன ஆயிற்று? அவருடைய அகம்பாவத்துக்கே ஒரு பேரிடி அல்லவா விழுந்திருக்கிறது!'

குஞ்சனின் மனசு, ஸ்ரீலதாவுக்கு ஏற்பட்ட ஏமாற்றம் தனக்கும் ஏற்பட்டது போல் உள்ளுக்குள் அழுது சபித்தது!

ஆனால் பவத்ராதன் திருமேனி?

நொந்து உருகிக் கொண்டிருந்தார்.

'துன்பம் என்பது யாருக்கு வந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அடுத்தவர்கள் கூறும் ஆறுதலில் தான்! பாவம் நீலகண்டன்!'

வருந்தினார் பவத்ராதன்.

அவருடைய உள்ளம் உண்மையோடு கழிவிரக்கப்பட்டது. ஏனென்றால், அவர் யாருக்கும் ஒரு தீங்கும் வரக்கூடாது என்று நினைப்பவர்; நினைத்துக்கொண்டுமிருப்பவர்.

ஆனந்த குருவைத் தான் நீலகண்டன் தேடிப் போயிருக்கக் கூடும் என்று நினைத்தபோதே அவர் நெஞ்சுக்குள் அனுதாபம் இழைய ஆரம்பித்து விட்டது! என்னதானிருந்தாலும் தன்னைப் போலவே நீலகண்டனும் ஒரு மாந்திரீகன் தான்! அவருக்கும், இவருக்கும் ஒரே குரு, ஒரே ஞானம்.

எனவேதான் அதே வருத்தம் இவருக்கும்!

ஒரு வேளை நீலகண்டன் அன்று தன்னை அவமானப்படுத்தாமல் ஸ்ரீலதாவைக் கோகுலுக்கே திருமணம் செய்து வைக்கலாம் என்று ஒப்புக் கொண்டிருந்தால்?

தனக்கும் இன்று நீலகண்டன் படுகிற துன்பம் தானே?

அதனால் தான் கோகுலுக்கு வந்த கொடுமை தனக்கும் ஒரு பொது எதிரி போலத் தெரிந்தது பவத்ராதனுக்கு.

குஞ்சன் குதூகலமாக இருந்தான்.

அது உயிரோடு விடாது இல்லையா திருமேனி? ஸ்ரீலதாவை ஏமாத்தினதற்கு இந்த தண்டனை கோகுலுக்கு வேணும்!"

"ஸ்ரீலதாவை கோகுல் கல்யாணம் செய்திருந்தாலும் இதுதான்டா குஞ்சா நிலமை!" என்றார் பவத்ராதன்.

அதைக் கேட்டபிறகுதான் குஞ்சனின் முகத்தில் யாரோ பளீரென்று அறைந்தாற்போலிருந்தது. அவன் திகைத்துப் போய் நின்றான்!

x x x x

சகுனத்தடை! ஏதேதோ துர்ச் சகுனங்கள் தன்னைத் தொடர வேண்டும் என்று ஒருவேளை பாவத்ராதன்தான் உபாசனா மூர்த்திகளை ஏவி விட்டிருக்கலாமோ? குழம்பினார் நீலகண்டன்.

அவருக்கு மனசில் இருந்தது யக்ஷியைப் பற்றிய பயம் மட்டுமில்லை; பவத்ராதனைப் பற்றிய பீதியும்!

ஸ்ரீலதாவோடு கோகுல் பழகியதைத் தெரிந்து கொண்டதுமே ஆவேசப்பட்டுத் தன்னிடம் மோதாமல் ஆனது ஆயிற்று! இனி ஏன் நமக்குள்ளே போட்டி? என்கிற பாணியில் இல்லத்துக்கு சம்பந்தம் பேச அல்லவா வந்தார் அவர்!

அப்போது நீலகண்டன் செய்தது என்ன?

முகத்தைக்கூடப் பார்க்காமல் அவரை அவமானப்படுத்தினார். அதோடு மட்டுமா?

அல்ல என்பதும் நிரூபணமாகி விட்டது! ஆனால் "அந்த பைஸாஸம் சாதாரணப் பைஸாஸம் அல்ல-அதனை இனியும் ஏழு நாளில் அழிக்காமல்விட்டால் அது உன் மகளை மட்டுமில்லை, உலகத்திலுள்ள வாலிபர்களை எல்லாம் அழித்துவிடும்" என்று எச்சரித்து அனுப்பியிருந்தார் ஆனந்த குரு.

இதற்காகவே திரிசூலம் ஒன்றினையும் தற்காலிகமாக ஆனந்த குரு கொடுத்து அனுப்பியிருக்கிறார். இதைக் கொண்டுபோய் இல்லத்தில் வைத்தால்தான் கோகுலைப் பயமுறுத்துகிற பிசாசு போகும்.

அதனை ஓட வைக்கவே ஓடோடி வந்து கொண்டிருந்த நீலகண்டனை இல்லம் போய்ச் சேரவிடாமல் இடையிடையே தடங்கல்கள்! இப்போது-கையிலிருந்த சூலமும் எங்கேயோ விழுந்து விட்டது!

"கடவுளே!" என்று கை கூப்பினார் நீலகண்டன். கையிலிருந்து சூலம் விழுந்த இடத்தில், ஒரே புல்லும், புதரும் மண்டிக்கிடந்தது! கண்ணுக்கே எதுவும் புலப்படவில்லை. என்றாலும்,

இருட்டுக்குள் அங்கேயும் இங்கேயும் மோத ஆரம்பிக்கிறபோது- மறுபடியும் பவத்ராதனின் நினைவே வருகிறது நீலகண்டனுக்கு.

'பவத்ராதா! உனக்கு ஏன் இப்படி ஒரு சந்தேகம்?'

புலப்பட்டது! இல்லத்துக்குப் போகிற வழியல்ல! ஏன்? புல்லரியும் குன்றுக்குப் போகிற வழியே அல்ல!

புரிந்தது.

அட கடவுளே! வழி தவறியா ஓடிக்கொண்டிருக்கிறோம் இனியும்? என்று புலம்பினார் அவர்!

x x x x

தளர்ந்து போயிருந்த கோகுலுக்கு லேசாக பிரக்ஞை வந்த போது கண்களில் ஒருவகை நிம்மதியும் தெரிந்தது.

அங்கே தன்னைப் பயமுறுத்திய பிசாசைக் காணவில்லை.

எழுந்து ஒருமுறை சடவு முறித்தான் கோகுல். சட்டென்று திரும்பினான். கதவைத் திறந்து வேறெங்காவது போய்விடலாம், அல்லது இல்லத்துக் கும்பலோடு கும்பலாக கலந்துவிடலாம் என்றெல்லாம் நினைத்தான் அவன்.

கதவருகே போனபோதுதான் சங்கடம் தெரிந்தது!

கதவை அவன் கை திறப்பதற்குள்ளாகவே கதவின் மீதிருந்து விலகி வந்தாள் யக்ஷி!

கலகலவென்று சிரித்தாள்.

"என்னை விட்டு விட்டு எங்கே போகப்போகிறீர்கள்?" என்றாள் அவள்.

விருட்டென்று கட்டிலின்மீது வந்து அமர்ந்தான் கோகுல். அவள் கேள்விகளுக்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை!

"சுவாமி! என்னைச் சோதனைக்குட் படுத்தாதீர்கள். தயவு செய்து தங்கள் இடுப்பில் இருக்கிற தாயத்தை கழற்றிப்போடுங்கள். எனக்கு நீங்கள் வேண்டும்!"

"எதற்கு?"

"மாலையிட்ட மாணவாளரிடம் ஒரு மனைவிக்கு என்ன வேண்டும்? அதுவும் இந்த முதலாவது ராத்திரியில்?"

"சொல்றது எதுவுமே எனக்குப் புரியலே!"

"புரியும்! முதலில்...தாங்கள் தங்கள் இடுப்பிலிருக்கிற தாயத்தைக் கழற்றுங்கள்..."

"முடியாது!"

"முடியாது?"

"முடியாது....முடியாது.....முடியாது!"

"அப்படியானால் நானே அதனைக் கழற்றுவதுதான் உத்தமம்."

சொல்லிவிட்டு அவள் தன் விரலை நீட்டி இடுப்புக்கு நேராகக் காட்டினாள்!

இத்தனை நேரமும் அவனுக்குத் வந்தபோது-

அறைக் கதவு தடதடவென்று உள்ளே அவள்மீது சரிந்து விழுந்தது. நீலகண்டன் இன்னும் ஒரு நிமிடம் தாமதித்திருந்தாலும் அந்தப் பிசாசு கோகுலைத் தோலுரித்துத் தின்னும் வாழைப்பழம் போல விழுங்கியிருக்கக் கூடும். அதுமட்டுமில்லை; அதன் புனர் ஜென்மமும் தொடர் கதையாகியிருக்கும்.

ஆனால் யோக வசமாய் அதற்குள் நீலகண்டன் வந்து விட்டார்.

அவரைக் கண்டதுமே அறைக்குள் கேட்ட சிரிப்பையும், அலறலையும் சுமதியின் பெற்றோர் விவரிக்க ஆரம்பித்தார்கள்.

அதைக் காதில் வாங்கிக் கொள்ளக்கூட அவர் நிற்கவில்லை.

தனக்குள் ஏதோ ஒரு சக்தி புகுந்து கொண்டாற்போல் கதவை ஒரே மூச்சில் இடித்துத் தள்ளி உள்ளே புகுந்ததுமே முதலில் அவர் அந்த அறைக்குள் சூலத்தை ஒரு மூலையில் நட்டுவைத்து விட்டுத்தான் நிமிர்ந்தார்.

அது சின்னஞ் சிறு சூலம்தான்! என்றாலும் பெரும்பாறையைக்கூடப் பிளக்கிற சிற்றுளிபோல்.

யக்ஷி செயலிழந்தாள்.

பூதத்தின் கைக் குழியிலிருந்த கோகுல் கட்டிலில் குதித்தான்.

இதற்குள் வேலைக்கார பாச்சு உட்பட குடும்பத்தினரும் உறவினரும் உள்ளே வந்து அண்ணாந்து பார்த்தார்கள்.

பூதம் ஒரு புகைச் சுருள்போலானது, அப்படியே அது வெளியே நகர்ந்து போனது. எல்லோருடைய முகத்திலும் இழந்துபோன சந்தோசம் மீண்டது! ஆனால் நீலகண்டனின் முகத்தில்?

மறுபடியும் ஒரு வெளிறல்.

இந்தச் சூலத்தின் வல்லமை ஏழுநாட்களுக்குத்தான். அதற்குள் அக்னி பர்வதத்திலிருந்து மகாசூலம் கொண்டுவர வேண்டும்.

"இனியும் கொஞ்ச நேரம் திருமேனி வரேலன்னா என்னை அந்தப் பூதம் விழுங்கியிருக்கும்!" என்றான் கோகுல்! நீலகண்டன் அப்போதும் பரபரப்பாகவே இருந்தார். அவருக்கு அவர் அவசரம். அதைச் சொன்னால் மற்றவர்களிடம் வந்திருக்கும் சந்தோசம் மொத்தமும் காணாமல் போய்விடும்.



# மகாசூலம்

காரணம் இந்த நேரம் பாச்சுவின் வாயடங்கிப் போயிருக்கிறதே என்கிற சந்தோசம். அடேயப்பா! அவன், அவனுடைய திருமேனியைப் பற்றி அளந்து விட்டது தான் எவ்வளவு...? எவ்வளவு?

உலகத்திலேயே மகாமாந்திரீகன் நீலகண்டன் திருமேனிதான் என்றல்லவா அவனுக்குப் பெருமையும், கவுரவமும்?

இப்போது அதெல்லாம் எங்கே? அளந்த வார்த்தைகள் அவ்வளவும் பொய்யாகி விட்டதே! நாக்கு உள்ளே இழுத்துக்கொண்டு விட்டதே!

அல்பத் தனமாய் குஞ்சன் இப்படி ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தபோது-ஒரு வார்த்தையும் உரையாடாமல் பவத்ராதன் திருமேனி ஆழ்ந்த யோசனையில் உலாத்திக் கொண்டிருந்தார். வெகு நேரமாக அவருக்குப் பின்னாலேயே அலைந்த குஞ்சனுக்கு ஓர் ஆவல்!

"அந்த நீலகண்டன் திருமேனிக்கு இனி என்ன ஆகும்? ஒரு வேளை கோகுலை அந்தப் பிசாசு கொண்டுபோயிடுமா திருமேனி? கொண்டு போயிடும்னு தான் எல்லாரும் சொல்றாங்க! பாவம்..., அவர் அகம்பாவத்துக்கு இப்படி ஏதாவது நடக்கணும்னு நானும் பாச்சுகிட்டே சாபம் குடுத்துட்டுத்தான் வந்தேன்...."

குஞ்சன் வழவழவென்று பேசினான்.

"வாயை மூடுடா!" என்றார் பவத்ராதன் கோபமாக.

"திருமேனி! அந்தப் பிசாசு ரொம்ப சக்தியுள்ள பிசாசாம் திருமேனி!"

"ஆமா ஆயிரம் இராட்சசிகளுக்கு இருக்கிற சக்தி அந்த ஒரு யக்ஷிக்கு இருக்கு!"

சொன்னார் பவத்ராதன்.

"அப்படின்னா நீலகண்டன் மகனை

**தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்**

**'முரசு'க்காக எழுதும் தொடர் இது!**

**வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!**

**கண்டுபிடிக்கும் வாசகர்களில்**

## எழுதுவது யார்?

**பத்து அதிஷ்டசாலிகளுக்கு**

அசத்தலான-பரிசுகள் காத்திருக்கின்றன.

தொடர்ந்து வாசியுங்கள் நாம்கேட்கும்போது விடையை எழுதி அனுப்பினால் போதும்.

"இனியும் நாலு நாள்லே கோகுலுக்கு கல்யாணம் நடக்கும். ஆனா அது ஸ்ரீலதாவோட இல்லே! சுமதியோட" என்று அவர் கோபத்தைத் தூண்டுகிற மாதிரியும் நடந்துகொண்டாரே!

சுமதியின் கழுத்தில் கோகுல் தாலி கட்டியபின்...?

சோபன அறையில் சுமதிக்குப் பதிலாக நிற்கிறது ஒரு பைஸாஸம்! இது நிச்சயமாக பவத்ராதன் வேலையாகத்தானிருக்க வேண்டும் என்று நினைத்துத்தான் பூஜை அறையில் போய் அமாந்தார் நீலகண்டன்.

'இல்லை' என்று தெரிந்து விட்டது! பவத்ராதன் அவ்வளவு பெரிய சக்திமான்

தனக்குத்தானே கேட்டுக் கொண்டவர்.... தடவிப் பார்த்த சில நிமிடங்களில்....

கையில் மாட்டியது அந்தச் திரிசூலம்!

பாதி உயிர் வந்தமாதிரி பதறி எழுந்தார் நீலகண்டன். அப்புறம்?

கண்ணை மூடிக் கொண்டு மீண்டும் ஓட ஆரம்பித்தார் அவர்.

'இனி இதை விடக் கூடாது!' என்கிற மன உறுதியோடு இருந்தது ஓட்டம்! இது இனியும் ஏழு நாட்களுக்குத்தான்! எடுத்துக் கொண்டு வரவேண்டியது அக்கினி பருவதத்திலிருக்கிற மகாசூலம்!

ஆனந்த குரு கொடுத்த விளக்கம் நீலகண்டனின் நினைவை மறுபடியும் எச்சரிக்க ஆரம்பித்தது.

உடனே மனசுக்குள் ஒரு நிமிடம் திட்டம் விரிந்தது.

"என்ன செலவானாலும் சரி; இல்லத்தையே விலை பேசி விற்றாலும் சரி...எப்படியாவது வாகன வசதிகள் செய்து அல்லது குதிரையில் போயாவது கொண்டு வந்து விடவேண்டும்.

இப்படியெல்லாம் நினைத்தும், திட்டமிட்டும் மனோரதமேறிப் போய்க்கொண்டிருந்த நீலகண்டன் திருமேனிக்கு அப்போது ஒரு சுழல் காற்றும் தன்னைச் சுற்றிக் கொண்டிருக்கிறது என்பது தெரியவில்லை!

ஓடி ஓடிக் கால்கள் தளர்ந்து போயின.

இனியும் இல்லம் கண்ணுக்குத் தென்படவேயில்லை.

அப்படியானால்.... நாம் எங்கே ஓடிக்கொண்டிருக்கிறோம்?

குழம்பிப்போய் நின்றார் நீலகண்டன்.

சுற்றுமுற்றும் பார்த்தார். சூது தோன்றாத ஒரு புதிய உபாயம்.

அவளையே ஏறிட்டுப் பார்த்தான் கோகுல்.

தந்தை அவனிடம் சொல்லிப் போனது ஞாபகம் வந்தது. 'எக்காரணத்தாலும் தாயத்தை இடுப்பிலிருந்து அவிழ்க்காதே! அவளால் இதைத் தொட முடியாது!'

அவள் தொடவில்லை.

விரலை மட்டுமே நீட்டிக் கொண்டிருந்தாள்.

கோகுல் அவளால் இதைத் தொட முடியாது என்கிற அலட்சியத்தோடு திரும்பிப் படுக்கையில் சாய்ந்த மறுநொடி....

இடுப்பிலிருந்த தாயத்து சூடேறிப் பழுத்தது! சிரித்தாள் அவள்.

எரிந்தது-இடுப்பு மொத்தமும்.

அலறினான் கோகுல்! கட்டிலில் எழுந்தும், புரண்டும், உருண்டும் சாடினான் அவன்.

யக்ஷி அப்போதும் விரலை நீட்டியபடி சிரித்துக்கொண்டே இருந்தாள்! அவளுடைய உபாயம் ஜெயிக்க, ஜெயிக்க உருவமும் மாறியது! இது அவளது மாயத் தந்திரம் என்பதை உணராமல் கோகுல் தனது இடுப்பிலிருந்த தாயத்தை இழுத்து எடுத்தான்! வீசினான்.

ஆச்சரியம்! அது அவன் தந்தை தந்த தாயத்தைப்போல் அப்போதும் அப்படியே இருந்தது! சாணம் பூசப்பட்ட தரையில் விழுந்து கிடந்தது! கோகுல் கட்டிலிலிருந்து அதை மறுபடியும் எடுக்கப் பாய்ந்தான் அப்போது-

பூதமாக வளர்ந்து நின்றிருந்தவள் எந்தவித இடையூறும் இல்லாமல் ஏதோ ஒரு பொம்மையைத் தூக்குவது போல் கோகுலைத் தூக்கினாள். இரண்டு கையிலும் பற்றியிருந்த கோகுலை ஒரு கையில் மாற்றிக் கொண்டாள். மறு கை அவன் கழுத்துக்கு வெகு ரசனையுடன்

பவத்ராதன் அந்த அகால இரவிலும் நீலகண்டனுக்கு நேர்ந்த துன்பத்துக்காகவே வருந்திக் கொண்டிருந்தார்.

தானும் நீலகண்டனும் ஆனந்த குருவிடம் வேதமும் மந்திரமும் படித்த காலத்தில் ஒருநாள்-

நீலகண்டனின் தந்தை ஆக்கிரமித்து வைத்துள்ள ஒரு மனைக்கட்டில் ஆவாகிக்கப்பட்ட கற்சிலை ஒன்று இருக்கிறதென்று சொன்னதுண்டு. அதை ஆனந்த குருவின் தாத்தாதான் ஆவாகித்ததாக ஒரு கதையையும் சொல்லியிருக்கிறார் அவர். பவத்ராதன் இனியும் அதை மறக்கவில்லை.

ஆனால்.... நீலகண்டன்?


மறந்துவிட்டார். அதனால் தான் வந்தது இத்தனை துன்பமும். இனி அதை மறுபடியும் ஆவாகிப்பது சுலபமான காரியமா? மாலையோ இரத்தமோ அந்தக் கல்லின்மீது பட்டால் அது மறுஜென்மம் எடுத்துவிடும் என்று ஆனந்தகுரு எச்சரித்த போது...... அதனை நீலகண்டன் அலட்சியப் படுத்திவிட்டார்.

குரு கற்றுத் தந்த மாந்திரீகத்தின்மீது மட்டும் நம்பிக்கை வைத்து.... அவருடைய போதனைகளை அலட்சியப் படுத்தியதன் நிமித்தமே நீலகண்டன் ஒரு துன் மாந்திரீகன் ஆனார் என்று பவத்ராதன் அறிவார்.


அந்த அலட்சியம்...இன்று அவருக்கே சோதனையாகியிருக்கிறது! கல்லில் அமைதியுற்றிருந்த யக்ஷியின் ஆத்மாவை வெறும் கதை என்று துப்பி ஒதுக்கி விட்டவர் நீலகண்டன்.

அது கதை மட்டுமில்லை; ஒரு பெண்ணின் மனக்கிளர்ச்சி உலகத்தையே பழிவாங்கத் தவித்த வரலாறு! பவத்ராதன் மறக்கவேயில்லை. (தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: என். சந்திரகுமார்
வயது: 23
முகவரி: 35, டாக்டர். எஸ்.டி.. பெர்ணாந்து மாவத்தை, கொழும்பு-15
பொழுபோக்கு: பாடல்கள், பத்திரிகை.




பெயர்: எஸ். ரஞ்சினி தேவி
வயது: 17
முகவரி: 57, பாத்திமா வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு




பெயர்: யூ. ஆனந்த்
வயது: 23
முகவரி: P.O. Box - 25809 SAFAT No. 13119 KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை



பெயர்: எல். முகம்மட் கான்
வயது: 21
முகவரி: 378, சந்தை வீதி, மீராவோடை 05, வாழைச்சேனை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி



பெயர்: என். றிஸா
முகவரி: இல. 389, யூனிட்-1, முள்ளிப்பொத்தானை, கந்தளாய்.
பொழுதுபோக்கு: ரீ.வீ., வானொலி, பத்திரிகை



பெயர்: ஏ. நஜீப்
வயது: 27
முகவரி: SATCO RCHQ P.O. Box. 10164 JUBAIL-31961 K.S.A
பொ.போ: ரீ.வீ., நாவல்

பெயர்: எஸ். சுதா
வயது: 24
முகவரி: SCHAFFHAUSER-STR. 139, ZURICH, SWITZE RLAND
பொழுதுபோக்கு: பத்திரிகை புத்தகம், சினிமா

பெயர்: ஏ. மகேந்திரன்
வயது: 24
முகவரி: 11, V.T.S., நீர்கொழும்பு வீதி, கந்தானை
பொ.போ: கதைப்புத்தகம், பத்திரிகை, ரீ.வீ.

பெயர்: எம். ரசீம்
வயது: 20
முகவரி: 64, ஒயபால வீதி, மாத்தளை
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை,

பெயர்: ஜே. பௌமி
வயது: 23
முகவரி: 29 3/1, 8வது ஒழுங்கை, காலி வீதி, கொழும்பு-3
பொ.போ: பத்திரிகை, நாவல், சினிமா.

பெயர்: எம். நஸார்
வயது: 28
முகவரி: இல. 251, ஹேந்தெனிய, பேராதனை,
பொழுதுபோக்கு: பேனா நட்பு, நண்பர்களுடன்

பெயர்: ரி. சுரேஷ் மகேந்திரகுமார்
வயது: 16
முகவரி: உனுகல குறூப், ஹாலி-எல.
பொ.போ: வழமையானவை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தாய்

## மக்சீம் கார்க்கி

### 14

"நான் உன்னைக் கேட்கவில்லை" என்று கடுமையான குரலில் எதிர்த்துச் சொன்னான் அதிகாரி. "ஏ, கிழவி வாயைத் திற'"

தாயின் உள்ளத்தில் அந்த மனிதன் மீதுள்ள வெறுப்பு மேலோங்கியது. குளிர்ந்த தண்ணீரில் திடீரென்று விழுந்துவிட்டதுபோல, அவளது உடம்பு முழுவதும் நடுநடுங்கி விறைத்தது. அவள் நிமிர்ந்து நின்றாள்; அவளது நெற்றி வடு கன்றிச் சிவந்தது; அவளது புருவங்கள் கண்ணுக்குள் இறங்குவதுபோல சுழித்தன.

"சத்தம் ஒன்றும் போட வேண்டாம்!" என்று கையை நீட்டிக்கொண்டு சொன்னாள் தாய். "நீங்கள் இன்னும் சிறு வயதினர், உங்களுக்குத் துன்பமும் துயரமும் இன்னதென்று தெரியாது!"

"அம்மா, சாந்தமாயிருங்கள்!" என்று கூறி பாவெல் அவளைப் பேச விடாமல் தடுத்து நிறுத்த முயன்றான்.

"நில்லு, பாவெல்!" என்று கத்திக்கொண்டே, அவள் மேஜையை நோக்கி விரைந்தாள். "நீங்கள் இவர்களை ஏன் இட்டுச் செல்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"வாயை மூடு! அது உன் வேலையல்ல!" என்று அதிகாரி ஆவேசத்தோடு எழுந்து சத்தமிட்டான். "கைதான வெஸோவ்ஷிகோவைக் கொண்டு வாருங்கள்!"

பிறகு அவன் ஏதோ ஒரு காகிதத்தைத் தனது மூக்கினருகே கொண்டு போய் வாசிக்க ஆரம்பித்தான்.

போலீஸார் நிகலாயைக் கொண்டு வந்தார்கள். அதிகாரி வாசிப்பதை நிறுத்தி விட்டுக் கத்தினான்:

"உன் தொப்பியைத் தூர எடு!"

ரீபின் பெலகேயாவிடம் வந்து, முழங் கையால் அவளை லேசாக இடித்து விட்டுச் சொன்னான்.

"அம்மா, அதைரியப்படாதே."

"என் கைகளை பிடித்துக்கொண்டால், தொப்பியை எப்படி எடுப்பதாம்?" என்று அந்த அதிகாரி வாசித்த வாக்கு மூலத்தை அமுங்கடிக்கும் குரலில் சத்த மிட்டான், நிகலாய்.

"இதிலே கையெழுத்துப்போடு" என்று கையிலிருந்த காகிதத்தை மேசை மீது எறிந்துவிட்டு, கத்தினான் அதிகாரி.

அவர்கள் கையெழுத்திடும்போது, தாய் அவர்களைக் கவனமாகப் பார்த்தாள்; அப்போது அவளது கோபம் தணிந்து விட்டது; உணர்ச்சி உள்ளடங்கி விட்டது. அவளது கண்களின் பலவீனமான துயர நிலையால் ஏற்பட்ட கண்ணீர்தான் நிரம்பித் ததும்பி நின்றது. அவளுக்குக் கல்யாணமானதிலிருந்து இருபது வருஷ காலமாக, இந்த மாதிரி எத்தனையோ தடவை கண்ணீர் விட்டிருக்கிறாள்; எனினும் கடந்த சில வருஷங்களாக, கண்ணீரின் வேதனையை மறந்திருந்தாள். அந்த அதிகாரி அவளைப் பார்த்தான்; பிறகு துவேஷபாவம் கொண்ட வறட்டுப் புன்னகையோடு சொன்னான்:

"தாயே! உன் கண்ணீரை மிச்சப்படுத்திவை; இல்லையென்றால், பின்னால் அழுது தீர்க்கக் கண்ணீரே இருக்காது!"

அவளுக்கோ மீண்டும் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"ஒரு தாய்க்கு எதற்கும், எத்தனை தடவை வேண்டுமானாலும், சிந்தித் தீர்க்க கண்ணீர் உண்டு, உங்களுக்கு ஒரு தாய் இருந்தால், அப்போது தெரியும்!"

பளபளப்பான பூட்டு மாட்டியிருந்த சிறு பெட்டியில் தனது தஸ்தாவேஜுக்களை அதிகாரி அவசரமாக வைத்தான்.

"புறப்படுங்கள்!" என்று உத்தர விட்டான்.

தன்னோடு அவர்கள் கைகுலுக்கிக் கொண்டபோது அன்பும் அமைதியும் நிறைந்த குரலில் விடை கொடுத்தான் பாவெல்: "போய்வா அந்திரேய், போய்வா நிகலாய்!"

"ஆமாம், போய்விட்டு வந்தாலும் வருவார்" என்று அந்த அதிகாரி ஏகத்தாளமாய்ச் சொன்னான்.

நிகலாய் நெடுமூச்சு விட்டான். அவனது தடித்த கழுத்தில் இரத்தம் பாய்ந்து புடைத்தது; அவனது கண்களில் கோபம் முட்டி மோதிப் பொங்கிக்கொண்டிருந்தது. ஹஹோல் பளிச்சென்று சிறு புன்னகை செய்து தலையை ஆட்டினான்; தாயிடம் மட்டும் இரகசியமாக ஏதோ சொன்னான். அவளோ சிலுவைக் குறியிட்டபடி சொன்னாள்:

"கடவுள் யார் நல்லவர் என்பதைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்..."

கடைசியாக, அந்தக் காக்கிச் சட்டை ஆசாமிகள் வாசல்புறத்தை நோக்கிச் சென்றார்கள்; காலில் அணிந்த பூட்ஸின் தார் ஆணிகளின் சப்தம் கலகலத்து மறைய அவர்களும் கண் மறைந்து போய்விட்டார்கள். ரீபின் தான் கடைசியாகப் போனான். அவன் போகும்போது பாவெலைக் கவனமாய்ப் பார்த்துவிட்டுப் போனான்.

"சரி. நான்...வ...ரட்....டுமா?" என்று ஏதோ சிந்தித்தவாறே சொல்லிவிட்டு, தாடியுள் இருமிக்கொண்டே வெளியே போனான்.

பாவெல் தனது கைகளைப் பின்னால் கோர்த்துக்கொண்டு சிதறிக்கிடந்த புத்தகங்களையும், துணிமணிகளையும் தாண்டித் தாண்டி மெதுவாக உலவினான்.

"பார்த்தாயா? அவர்கள் இப்படித்தான் செய்வார்கள்" என்று சோர்ந்துபோன குரலில் சொன்னான் அவன்.

அவனது தாய் குழம்பிக் கிடந்த வீட்டின் சூழ்நிலையைப் பரிதாபகரமாகப் பார்த்தாள்.

"நிகலாய் ஏன் இவ்வளவு முரட்டுத்தனமாய் நடந்துகொண்டான்?" என்று வருத்தத்தோடு கேட்டாள்.

"ஒருவேளை அவன் உள்ளுக்குள் பயந்து போயிருக்கலாம்" என்றான் பாவெல்.

"அவர்கள் பாட்டுக்கு வந்தார்கள். இவர்களைப் பிடித்தார்கள். கொண்டு போய்விட்டார்கள். இப்படித்தான்.." என்று கைகளை ஆட்டிக்கொண்டே சொன்னாள்.

அவளது மகன் கைதுசெய்யப்படவில்லை; எனவே அவளது இதயம் அமைதி நிறைந்து அடித்துக்கொண்டது. ஆனால், தன் கண்முன்னால் நடந்துபோன மறக்க முடியாத அந்தக் காட்சியை நினைத்து நினைத்து அவளது சிந்தனை செயலற்று ஸ்தம்பித்துத் தவித்துக்கொண்டிருந்தது.

"அந்த மஞ்சள் மூஞ்சிக்காரன்- அவன் நம்மைக் கேலி செய்தான்! பயமுறுத்தினான்!..."

"சரி, அம்மா" என்று திடீரென்று தீர்மானமாகச் சொன்னான் பாவெல். "நீ வா. இதையெல்லாம் ஒழுங்கு படுத்தலாம்."

அவன் 'அம்மா' என்றும் 'நீ' என்றும் தாயை அழைத்தான். அவளுக்கு வெகு நெருக்கமாய் இருக்கும் பொழுது தான் தாயை அவன் அவ்வாறு அழைப்பது வழக்கம். அவள் அருகே சென்று அவன் முகத்தைப் பார்த்தாள்.

"அவர்கள் உன்னை இழிவுபடுத்தி விட்டார்களா?" என்று அமைதியுடன் கேட்டாள்.

"ஆமாம், அதுதான் சங்கடமாயிருக்கிறது. அவர்கள் என்னையும் கொண்டு சென்றிருந்தால் நல்லது!"

அவனது கண்களில் கண்ணீர் ததும்பியிருப்பதாக அவளுக்குப் புலப்பட்டது; அவனது இதய வேதனையை ஆற்றுவதற்கு முயல்வதுபோல, அவள் பெருமூச்சு விட்டுக் கொண்டு சொன்னாள்:

"பொறு பொறு, அவர்கள் உன்னையும் கூடக் கொண்டுபோய்விடுவார்கள்!"

"நிச்சயம் கொண்டு போவார்கள்!"

அவள் ஒரு கணம் மௌனமானாள்.

"பாஷா, நீ எவ்வளவு உறுதி வாய்ந்தவன்!" என்று சொன்னாள் அவள். "நீ ஒரு வேளையாவது உன் தாயைத் தேற்றியிருக்கிறாயா? நான் ஏதோ பயங்கரத்தைச் சொன்னால், நீ அதைவிடப் பயங்கரத்தைச் சொல்லி, என்னையே பயப்பட வைக்கிறாயே!" என்று பரிதவித்தாள்.

அவளை ஏறிட்டுப் பார்த்தவாறே தாயை நெருங்கினான் அவன்.

"எனக்கு அதெல்லாம் தெரியாது அம்மா. நீதான் இதற்கெல்லாம் உன்னைப் பழக்கிக்கொள்ள வேண்டும்."

அவள் பெருமூச்சுவிட்டாள்; உணர்ச்சி வசப்பட்டு வெடிக்கத் தயாராயிருக்கும் குரலை உள்ளடக்கிக்கொண்டு சிறிது நேரம் கழித்து அவள் கூறினாள்:

"அவர்கள் மனிதர்களைச் சித்திரவதை செய்வார்கள் என்றா நினைக்கிறாய்? அந்த மனிதர்களின் உடம்பைக் கிழித்து எலும்புகளை நொறுக்கி... அதைப்பற்றி நினைத்தாலே ஐயோ, என் கண்ணே!...என்னால் தாங்க முடியவில்லையடா...."

"அவர்கள் ஆன்மாவையே நொறுக்குகிறார்கள்; அதுதான் மிகுந்த வேதனை தருகிறது. அவர்கள் தமது தீய கரங்களால் உன் ஆத்மாவைத் தொடும்போது..."

□□□

மறுநாள் புகின், சமோய்லவ், சோமவ் முதலியவர்களையும் வேறு ஐந்து பேர்களையும் கைதுசெய்துவிட்டதாகத் தெரிய வந்தது. அன்றிரவே பியோதர் மாசின் பாவெலின் வீட்டிற்கு வந்தான். அவனது வீட்டிலும் சோதனை நடந்திருக்கிறது; அந்தச் சோதனையால், தான் ஒரு வீரனாகிவிட்டதாகக் கருதி மிகவும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான்.

"நீ பயந்துவிட்டாயா, பியோதர்?" என்று கேட்டாள் தாய்.

அவன் வெளிறிப்போனான்; முகம் கடுகடுத்தது; மூக்குத் துவாரங்கள் நடுநடுங்கின.

"அந்த அதிகாரி என்னை அடித்து விடுவான் என்று நான் பயந்தேன். அவன் பூதாகாரமாக இருந்தான். கரிய தாடி; மயிரடர்ந்த கைகள். கண்களே இல்லாது போனவன் மாதிரி கறுப்பு மூக்குக் கண்ணாடி வேறு மாட்டியிருந்தான். அவன் ஆங்காரமாகச் சத்தமிட்டு, தரையைக் காலால் மிதித்தான். 'உன்னை நான் சிறையில் போடுவேன்' என்று கத்தினான். என்னை இதுவரையிலும் யாரும் அடித்ததில்லை. என் தாயும் தந்தையும்கூட அடித்ததில்லை. நான் அவர்களுக்கு ஒரே பிள்ளை; செல்லப்பிள்ளை."

அவன் கண்களை ஒரு கணம் மூடினான்; உதடுகளைக் கடித்துக் கொண்டான்; இரண்டு கைகளாலும் தலைமயிரைப் பின்புறமாகத் தள்ளிவிட்டுக்கொண்டான். பிறகு செக்கச் சிவந்த கண்களோடு பாவெலைப் பார்த்துச் சொன்னான்:

"எவனாவது என்னை அடிக்கத் துணிந்தால்-அவ்வளவுதான். நான் ஒரு வாளைப்போல் அவன்மீது பாய்ந்து சாடுவேன்; என் பற்களால் கடித்துக் குதறுவேன். அவர்கள் வேண்டுமானால் என்னைக் கொன்று தீர்க்கட்டும்; அத்துடன் இந்த உயிர் போகட்டும்!

"நீ ஒரு நோஞ்சான். சண்டைக்கே லாயக்கில்லை" என்றாள் தாய்.

"இருந்தாலும் சண்டை போடத்தான் செய்வேன்!" என்று அடி மூச்சுக் குரலில் பதிலளித்தான் பியோதர்.

பியோதர் போன பிறகு தாய் பாவெலை நோக்கிச் சொன்னாள்: "எல்லோரையும்விட இவன்தான் முதலில் ஓடப் போகிறான்."

பாவெல் பதில் பேசவில்லை.

சில நிமிஷ நேரத்தில், சமையலறைக்கு அடுத்துள்ள வாசற் கதவு திறக்கப்பட்டது; ரீபின் உள்ளே வந்தான்.

"வணக்கம்!" என்று இளஞ் சிரிப்போடு சொன்னான் அவன். "நான் பழையபடியும் வந்துவிட்டேன். நேற்று ராத்திரி அவர்கள் என்னைக் கொண்டு வந்தார்கள்; இன்று நானாக வந்திருக்கிறேன்." அவன் பாவெலின் கையைப் பிடித்துக் குலுக்கினான்; பெலகேயாவின் தோளில் கையைப் போட்டுக்கொண்டான்.

"எனக்குத் தேநீர் கிடைக்குமா?" என்று கேட்டான்.

அடர்ந்து வளர்ந்த கரிய தாடியும், கறுத்த கண்களும் கொண்ட அவனது அகன்ற பழுப்பு முகத்தைக் கண்களால் மௌனமாய் அளந்து நோக்கினான் பாவெல். அவனது அமைதியான பார்வையில் ஏதோ ஓர் அர்த்தம் தொனித்தது.

தாய் தேநீருக்குத் தண்ணீர் போடுவதற்காக அடுக்களைக்குச் சென்றாள். ரீபின் உட்கார்ந்து, தனது முழங்கைகளை மேஜை மீது ஊன்றி பாவெலையே பார்த்தான்.

"சரி" என்று ஏதோ ஒரு சம்பாஷணையில் குறுக்கிட்டு பேசும் தோரணையில் பேச ஆரம்பித்தான் அவன் "உன்னிடம் நான் ஒளிவு மறைவில்லாமல் சொல்ல விரும்புகிறேன். உன்மீது கொஞ்ச காலமாய் எனக்கு ஒரு கண்தான். நானும் உனக்குப் பக்கத்து வீட்டிலேதான் குடியிருக்கிறேன். உன் வீட்டுக்கு நிறையப் பேர் வந்து போவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் குடிப்பதைக் காணோம்; கூச்சலையும் காணோம். அதுதான் முதல் காரணம். கலாட்டாப் பண்ணாமல் இருக்கிறவர்களை எல்லோரும் உடனே கவனிக்க ஆரம்பித்துவிடுவார்கள். ஏனடா இப்படி இருக்கிறார்கள்? என்று அதிசயப் படுகிறார்கள்.நான் ஒதுங்கி வாழ்கிறேனா, அது அவர்கள் கண்களை உறுத்திவிட்டது!"

அவனது பேச்சு அமைதியாகவும் அழுத்தமாகவும் ஒலித்தது. பேசும் போது அவன் தனது கரிய கரத்தால் தாடியை வருடிவிட்டுக்கொண்டே, பாவெலின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

"ஊரில் உன்னைப்பற்றி எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். உதாரணமாக, என் எஜமான் உன்னை ஒரு மதத் துரோகி என்கிறார். நீதான் தேவாலயத்துக்கே போவதில்லையே? நானும் போகவில்லை. பிறகு அந்தப் பிரசுரங்கள் வந்து சேர்ந்தன. அதுவும் உன் வேலையா?"

"ஆமாம்" என்றான் பாவெல்.

"நீ என்ன சொல்கிறாய்?" என்று சமையலறையிலிருந்தவாறு தலையை நீட்டிக்கொண்டு வந்து கேட்டாள் அவனது தாய். "அதை நீ மட்டுமே செய்யவில்லை!"

பாவெல் சிரித்தான் ரீபினும் சிரித்தான்.

"ரொம்ப சரி" என்றான் ரீபின்.

தனது வார்த்தைகளை அவர்கள் மதியாததைக் கண்டு மனம் புண்பட்ட மாதிரி சிணுங்கிக்கொண்டு உள்ளே போய்விட்டாள் தாய்.

(தொடர்ந்து வரும்)

என்றும் முதலிடம்

உலகில் மிகச் சிறந்த நாவல் எது? [illegible] தாய்!! தாய்!!!

உண்மைகள் [illegible] வசீகரமானவை. அதுதான் 'தாய்' நாவல் [illegible] முதலிடத்தில் இருக்கிறது!

[illegible] தொடர்ந்து வாசியுங்கள்!

ரகுநாதனின் [illegible] பிரசுரப்படுத்துகிறது. -ஆ.ர.

---

"சுதா, இப்ப மயூரி என் பேச்சைத்தான் கேட்பாள். எனக்கு தேவை அவள் மனசுமில்ல, பாசமுமில்ல. அழகான அவள் உடம்பு மட்டுந்தான். அதை மட்டும் எடுத்துக் கிட்டு உன் பாசத் தங்கச்சிய உன் கிட்டயே ஒப்படைச்சிடுகிறேன்!!

# புத்தி தெளிந்தது

ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்



அன்று வெகுநேரமாகியும் உறங்க மனமில்லாதவளாய் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள் மயூரி. அவள் கண்ணிலிருந்து வடிந்த கண்ணீர் தலையணையையும் நனைத்திருந்தது.

"ஏம்மா.... மயூ... சாப்பிடாம கூட படுத்திட்ட? உனக்கு பிடிச்ச கத்தரிக்காய் கறி வைத்திருக்கேன். வந்து சாப்பிடம்மா" அவளின் அக்கா சுதாதான் எழுப்பினாள். அக்காவை பார்க்கக்கூட மனமில்லாதவளாய் முகத்தை திருப்பிக்கொண்டாள் மயூரி.

"என் கண்ணல்ல மயூ... அக்கா சொல்லுறத கேளம்மா. உனக்கு இன்னும் வயசா போச்சு. 17 வயசு தானே ஆச்சு. இன்னும் எத்தனையோ விசயங்கள பற்றி தெரிஞ்சிக்க இருக்கு. இதுக்குள்ள என்னம்மா உனக்கு காதல்? அக்கா உனக்கு கெட்டத செய்வேனா?" மயூரியின் தலைமயிரை கோதியபடி சொன்ன சுதாவுக்கு தொண்டை கரகரத்தது.

"உனக்கு சரியான பொறாமை! சுரேசுக்கு என்ன குறைச்சல்? சொத்து இல்லையா? சொந்தமில்லையா? வீடு இல்லையா? வேலை இல்லையா?" மயூரியின் பேச்சில் காரமிருந்தது.

"எல்லாமிருக்கு! ஆனா எதையும் புரிஞ்சிக்க அனுபவந்தான் உனக்கில்ல. சொத்து, சொந்தத்த வச்சு ஒரு மனுசன எடைபோட கூடாதம்மா" அவள் பேச்சில் பரிவு தெரிந்தது.

"நானும் படிச்சவ எனக்கும் புத்தியிருக்கு என் வாழ்க்கையை அமைச்சிக்க எனக்கும் உரிமையிருக்கு. அதைத்தான் நான் செய்யிறேன். ஆனா நீ... உனக்கொரு வாழ்க்கை கிடைக்கலன்னு என் வாழ்க்கைய அழிக்கப் பார்க்கிற!" மீண்டும் அவள் கண்ணில் நீர். எப்படியோ பல மணித்தியால வாதங்களின்பின் இருவரும் பட்டினியோடு உறங்கிப்போனார்கள்.

சுதா- மயூரி!

சிறு வயதிலே பெற்றோரை இழந்தவர்கள். மூத்தவள்... சுதாதான் கஷ்டப்பட்டு இளையவள் மயூரியைப் படிக்க வைத்தாள். பெரியவளாக்கினாள். அவள் அதற்காக எத்தனை தியாகங்கள் செய்திருப்பாள்? பெண்ணாக பிறப்பதே பாவமென எத்தனை தடவைகள் எண்ணியிருப்பாள். எப்போதும் தன்னுயிர் தங்கையின் விருப்பங்களுக்கு அவள் தடை போட்டதேயில்லை. சுரேஷ்- மயூரி காதலுக்குக்கூட தடையாக நிற்பதற்கு முக்கியமாக ஒரு காரணமிருந்தது.

□□

அன்று வெள்ளிக்கிழமை. வழக்கம் போல் கோயிலுக்கு போய்விட்டு வீட்டுக் கருகில் வந்த மயூரி, அக்கா சுதாவோடு யாரோ பேசுவதைக் கேட்டு வெளியிலேயே நின்றாள். ஆனாலும் அது தன்னுயிர்க் காதலன் சுரேசின் குரலாக இருந்ததால் ஆசையுடன் பேச்சுக்கு காது கொடுத்தாள்.

"சுரேஷ் உன்னை கையெடுத்து கும்பிடுறேன். என் தங்கச்சியின் வாழ்க்கையோடு விளையாடாத! என்னைத்தான் நீ அழிச்சு நாசப்படுத்தி கெடுத்தா. ஆனா என் தங்கச்சி பூ மாதிரி. நான் வாழுறதே அவளுக்காகத் தான். அவளையும் நாசப்படுத்திடாத." அழுகைக் குரலில்.

"சுதா! இப்ப மயூரி என் பேச்சைத்தான் கேட்பாள். எனக்கு தேவை அவள் மனசுமில்ல. பாசமுமில்ல. அழகான அவள் உடம்பு மட்டுந்தான். அத மட்டும் எடுத்துக் கிட்டு உன் பாசத் தங்கச்சிய உன்கிட்டயே ஒப்படைக்கிறேன்" தொடர்ந்து சிரிப்பு.

"அது நான் உயிரோட இருக்கும்வரை நடக்காது. என் தங்கச்சி என்ன மாதிரி ஒண்ணும் ஏமாந்துபோக மாட்டாள்."

"போடி பைத்தியக்காரி! என்மேல் ஆசையில அவ மயங்கி இருக்காடி. என் பேச்சுதான்டி அவளுக்கு மந்திரம். நீ இனிமே ஒண்ணும் செய்யமுடியாது. அப்ப நான் போயிட்டு வாறன்..." என வில்லனின் ஸ்டைலில் கூறிவிட்டு வெளியேறினான் சுரேஷ்.

இத்தனையையும் ஒன்றுவிடாமல் கேட்டுக்கொண்டிருந்தாள் மயூரி.

"அக்கா என்னை மன்னிச்சிடுங்க" என கதறியழுதபடி காலில் விழுந்தாள் மயூரி. சுதாவோ மூடி மறைத்திருந்த நாடகமொன்று அரங்கேறியதை எண்ணி சிலையாய் நின்றாள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# உனக்காகவே வாழ்கிறேன்

சிறுகதை

"இதோ...பாருங்க.... ஒரு பெண் கணவனை இழந்துவிட்டாள் என்பதற்காக அவள்மீது விதவைக் கோலம் திணிக்கப்படக்கூடாது"

சேத்தூர் எஸ்.பகீரதி



மதுமதி புகைவண்டி ஜன்னலூடே பார்வையை மேயவிட்டிருந்தாள். நெற்றியில் சின்னதாய் கறுப்பு ஸ்ரிக்கர் பொட்டு; காதுகளில் சின்னத் தோடுகள்; கழுத்தில் புரளும் மெல்லிய தங்கச் சங்கிலி; கையில் ஒற்றை வளையல்; மெல்லிய நீல நிறச் சாரி; பார்ப்பவர்கள் மீண்டும் ஒருமுறை சலனமில்லாமல் அவளது அடக்கமான அழகைப் பார்க்கலாம். பார்த்துக்கொண்டே இருக்கலாம். மதுமதிக்கு அருகில் இருந்த நடுத்தர வயதுப் பெண்மணி கேள்விகளால் அவளைத் துளைத்துக் கொண்டிருந்தாள். மதுமதிக்கு பேசுவதற்குப் பிடிக்கவில்லை. அந்தப் பெண்மணியின் கணவர் அந்தக் காலை நேரத்திலும் உறங்குவது மதுமதிக்கு வியப்பாக இருந்தது. அந்தப் பெண்ணின் பேச்சைக் கேட்க மதுமதியைத் த்விர யாருமில்லை. எனவே மதுமதி வரும் கோபத்தை அடக்கிக்கொண்டு அவளது கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"ஏன்மா உன் பெயர் என்ன?" "தனியாகவா வந்தே?" "ஊர் எது?" "இப்போ எங்கே போறே?" அவளது கேள்விகள் தொடர்ந்தன. "ஏன்மா உனக்கு இன்னும் கல்யாணமாகலையா?" என்று திடீரென அப்பெண் கேட்டதும் சின்ன முறைப்புடன் "ஆச்சு" என்றாள் மதுமதி. மதுமதியின் கழுத்தில் தாலியையும் நெற்றியில் குங்குமத்தையும் தேடி கழுத்தையும் நெற்றியையும் கண்களால் துழாவியவாறே கேட்க நினைத்ததைக் கேட்டே விட்டாள் அப்பெண். "கேட்கிறேன்னு தப்பா நினைக்காதம்மா. உன்னை பார்த்தா கல்யாணமான பொண்ணாத் தெரியலைம்மா. தாலிதான் கழுத்தில இல்ல. அது ஃப்பாஷன். எந்த நேரமும் கழுத்தில் தாலி தேவலைன்னு என் பொண்ணுகூடச் சொல்றா. ஆனா நெத்தில குங்குமப் பொட்டைக்கூடக் காணோமே.." அந்தப் பெண்மணி நிறுத்தினாள்.

மதுமதி அவளை ஒருகணம் பார்த்துவிட்டு "என் கணவர் இறந்திட்டார்மா" என்றதும் அப்பெண்மணி திடுக்கிட்டாள். "ஏன்மா புருஷன் செத்தா பொட்டு, பூ ஒண்ணும் வைக்கக் கூடாதேம்மா.." அவள் மதுமதியின் முகத்தை ஒரு மாதிரியாகப் பார்த்தவாறே கேட்க, "இதோ பாருங்க. ஒரு பெண் கணவனை இழந்துட்டா அவ இஷ்டம் இல்லாம அவ மேல விதவைக் கோலம் திணிக்கப்படக் கூடாது. கல்யாணமான இந்த ஐஞ்சு வருஷ காலமா என் புருஷனால வாழ்க்கையில நொந்துபோனவ நான். என் அம்மாவுக்காக, அப்பாவுக்காக, தங்கச்சிகளுக்காக, புருஷனுக்காக, அவரோட குடும்பத்துக்காக நான் வேலைக்காரியாக இயந்திரமாக, தியாகியாக இதுவரைக்கும் வாழ்ந்திருக்கேன். இனி நான் எனக்காக வாழணும்" என்றவாறே அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

அப்பெண்மணியும் மதுமதியிடம் வேறு ஒன்றும் பேசவில்லை.

□□□

மதுமதியின் மனதுக்குள் பிரசன்னா எதற்கெடுத்தாலும் புருவத்தை நெருக்கி கண்களை இடுக்கிச் சிரிக்கும் சின்னச் சிரிப்பு அவளை ஹிம்சை பண்ணியது. ஊருக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்துகொண்டு யாருமில்லாதவனாய்- எதிலும் பிடிப்பற்றவனாய் வாழ்ந்துகொண்டிருந்த பிரசன்னாவுக்கு மதுமதியைக் கண்ட பிறகே வாழ்க்கை என்பதன் அர்த்தம் புரியத் தொடங்கியது. ஒருவர் மீது ஒருவர் வைத்திருந்த நேசம், பரிவு ஒருவருக்காக ஒருவரின் விட்டுக் கொடுப்புகள், உலகம் பற்றிய விமர்சனங்கள் எல்லாம் விரல் கூடப் படமுடியாதளவுக்கு மனசளவில் மட்டும் காதலாகப் பூத்தது.

குடும்ப கௌரவத்திற்காகவும் நலனுக்காகவும் தங்கைகளின் எதிர்காலத்திற்காகவும் அவளது கெஞ்சல்கள், அழுகை, கதறல் எதையும் பொருட்படுத்தாமல் பணக்காரனான ஜெகனுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டாள். நடந்தது நடந்து முடிந்து விட்டதென மதுமதி பிரசன்னாவை மறக்க முயன்று குடும்பத்துக்காகத் தன்னையே அர்ப்பணித்து வாழப் பழகிக் கொண்டாள். ஆனால் ஜெகனிடம் இல்லாத தீய பழக்கவழக்கங்களே இல்லை. திருமணமான ஐந்து வருடத்தினுள் ஜெகனாலும், அவனது குடும்பத்தாலும் மதுமதி பட்ட வேதனைகளும் சோதனைகளும் எண்ணியும் அடங்காதவை. கடவுளுக்கே பொறுக்காமல்தானோ என்னவோ விபத்து ஒன்றில் ஜெகன் இறந்து போனான்.

வீட்டிற்கு மதுமதி வந்து சேர்ந்ததும் அம்மாவைப் பார்த்துக் கலங்கிப் போய் விட்டாள். அப்பாவின் பிரிவும் அம்மாவைப் பாதித்திருந்தது. மூன்று நாட்கள் வரை மதுமதியை அவளது தங்கைகள் கவனித்தார்கள். அப்புறம் முகம் சுளிப்பு, குத்தல் பேச்சுக்கள்.. மதுமதியால் சகிக்க முடியாமல் அம்மா எவ்வளவோ தடுத்தும், மதுமதி கால்போன போக்கில் போனாள். அவளது கடைசி ஒரே ஆசை பிரசன்னாவை ஒரு தடவை பார்க்க வேண்டும். அவனுடன் பேச வேண்டும் என்பதுதான்.

□□□

புகைவண்டி தரிப்பிடத்தில் நின்றதும் மதுமதி நினைவுகளில் இருந்து மீண்டவளாய் 'திடுக்' என கண்களை விழித்துக் கொண்டாள். பக்கத்தில் இருந்த பெண்மணியிடம் விடை பெற்றுக் கொண்டு பிரசன்னாவின் புதிய வீட்டு முகவரியை எடுத்துக்கொண்டு நடந்தாள். அவளுக்குத் திருமணமான ஒரு சில மாதங்களில் பிரசன்னா எங்கோ சென்று விட்டான். மதுமதியின் அவசரத் திருமணம் ஜெகனின் ஊரில் நடந்ததால் சில நாட்களின் பின்பே பிரசன்னா அறிந்தான். திருமணம் பற்றிச் சொல்லக்கூட மதுமதிக்கு அவகாசம் இருக்கவில்லை. பிரசன்னாவை ஒரு தடவை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மதுமதிக்கு இருந்ததே தவிர அவள் மனதில் சலனங்கள் இல்லை. மனம் தூய்மையாக இருந்தது.

ஒரு பெரியவரிடம் பிரசன்னாவின் வீட்டை விசாரித்ததும் "ஓ.. வாத்தியார் தம்பியா அவரோட வீடு அதுதான்மா" என்றது 'பிரசன்னாவுக்கு எப்போது வேலை கிடைத்திருக்கும்?' என தனக்குள் நினைத்தவாறு மதுமதி பிரசன்னாவின் வீட்டை அடைந்து கதவைத் தட்டினாள். பதில் இல்லாததால் மதுமதி மெதுவாக உள்ளே சென்றாள். ஹாலினுள் யாருமில்லை. அருகில் இருந்த அறையை எட்டிப் பார்த்தாள். அங்கும் யாரையும் காணவில்லை. வீட்டிலுள்ள பொருட்கள் நேர்த்தியாகவும் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்ட மதுமதி தனக்குள் வியந்தவாறே எதிர் அறையை எட்டிப் பார்த்தவள் அதிர்ந்தே விட்டாள். அந்த அறை நிறைய மதுமதியின் உயரத்திலேயே தீட்டப்பட்ட சித்திரமாய் எத்தனையோ மதுமதிகள். மதுமதி வந்ததைக் கூட கவனிக்காத பிரசன்னா மௌனமாய் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். "மது..மது வா மது.. நீ வரமாட்டே. எனக்குத் தெரியும்" அவனது உதடுகள் இடைவிடாது தனது பெயரை மட்டும் உச்சரிப்பதை மதுமதியால் கேட்க முடிந்தது.

திடீரென திரும்பிய பிரசன்னா இன்ப அதிர்ச்சிக்குள்ளானான். அவனது இதயம் இலேசாகி ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்வு. இதுவரை மனதுக்குள் மௌனமாய்ப் பூட்டி வைத்து பூஜித்திருந்த தேவதை தன் எதிரிலேயே...... நம்பாதவனாய்.. நம்பியவனுமாய் "மது" என்றான். நீர் முட்டிய விழிகளோடு "என்னை மன்னிச்சுடுங்க பிரசன்னா. நான் பாவி. உங்களோட வாழக்கிடைக்காதவ. ஆனா.. இதெல்லாம் என்ன பைத்தியக்காரத்தனம்" தனது படங்களைக் காட்டிக் கேட்டாள். "இது பைத்தியக்காரத்தனமா எனக்குத் தெரியலை மது" அவன் சொன்னான். மதுமதி தீர்மானமாய் சொன்னாள். "என்னை மறந்திருப்பீங்கன்னு நினைச்சன். இதென்ன கோழைத் தனம்? தயவுசெய்து இனி என்னை மறந்திடுங்க" என்றவாறே மதுமதி வெளியேறினாள்.

பிரசன்னா பிரமை பிடித்தவன்போல் பிதற்றத் தொடங்கினான். "போ மது போ. யாருமில்லாத எனக்கு வாழக் கற்றுத் தந்தவ நீ. சின்ன வயசிலேயே வாழ்க்கைய இழந்திட்டு நீ நிற்கிறதை நினைச்சுக்கூடப் பார்க்க முடியுதில்லை. உன்னோட நினைவுகளையே இதுவரை சுவாசிச்சுக் கொண்டு இருந்த நான் உன் நினைவுகளோடையே செத்துடறேன். அநாதையா பிறந்து வளர்ந்தவன் அநாதையாகவே சாகிறேன். அப்போதாவது உன்னோட கண்களில் இருந்து வாற நீர் எனக்காக... எனக்காக.. வரட்டும். எனக்காக நீ சிந்துற ரெண்டு சொட்டு கண்ணீர்த்துளி போதும் என்னோட ஆத்மா மோட்சம் பெறும்." (முழந்தாளிட்டு பிரசன்னா வெகுநேரம் வரை அழுது கொண்டிருந்தான். அவன் தோளில் ஆதரவாக மெல்லிய பூங்கரத்தின் ஸ்பரிசத்தில் சிலிர்த்துத் திரும்பியவனின் இதயத்தில் இனிய அதிர்வு. புன்னகை தவழும் முகத்துடன் மதுமதி நின்றிருந்தாள். முதன் முறையாகப் பிரசன்னாவின் கண்களை ஒருமுறை ஆழமாகப் பார்த்தாள். அது அவனுள் எதையோ தரிசிப்பது போன்றிருந்தது. ஆனால் அந்தப் பார்வை "உங்களுக்கு நான் இருக்கிறேன்" என மதுமதி கூறுவதாய் பிரசன்னா உணர்ந்தான்.

# 50 சதம்!

எம். சுரேஷ்

ஏகப்பட்ட நெரிசல் மனிதர்கள் விறகாகிப்போனார்கள். கண்டக்டரின் இரைச்சலுடன் பஸ் வண்டி அமைதியாக ஓடியது!

குளிரூட்டும் பொருட்டு சிலர் ஏறி இறங்கினர். "இடைக்கிடை" அழகான காட்சிகள் சிகப்புப் பெயின்ட் குடித்த உதடுகள் சூரியனைச் சூடாக்கியது. இது



கலர்கலராய் முகங்கள். வித்தியாசமான வியர்வை வாசங்கள்! "வேலை" "அவசரம்" இரண்டு வார்த்தைகள் மந்திரமாகின. ஆங்காங்கே இலவசமாய்க் காலை நேரம். பழைய மனிதர்கள் புதிதாகிப் பின், மீண்டும் பழசாகிப்போகப் பயணித்துக் கொண்டிருந்தனர்.

வழமைபோலவே என்னை சில கண்கள் விழுங்கின. நின்றேன். பின் அமர்ந்தேன். பக்கத்தில் ஒரு நடுத்தர வயதுக்காரர். முன் சீட்டில் ஒரு வயதான மனிதர்.

பஸ் வண்டி தூரத்தை விழுங்கியது. வயதான மனிதர் கண்டக்டரைப் பார்த்துப் பலமுறை மெதுவாக எதையோ கேட்டார்.

"என்ன வேண்டும்?" கண்டக்டருக்குப் பயங்கர எரிச்சல்.

"மிகுதி ஐம்பது சதம்!"

கண்டக்டர் முகத்தைக் கோணலாக்கிக் கேலியாய் சிரித்தான்.

"ஒரு ஐம்பது சதத்திற்கு இந்த ஆள் படும் பாட்டைப் பாருங்கள்"

கண்டக்டர் முணுமுணுக்க ஏனைய பிரயாணிகளுக்கு தர்ம சங்கடமாய் இருந்தது.

எனக்குப் பக்கத்திலிருந்த நடுத்தர வயதுக்கார மனிதர் என் பக்கம் திரும்பி "ஒரு ஐம்பது சதத்தை விட்டுக் கொடுத்தால் என்ன குறைந்தா போகும்?" வெகு நாகரிகமாய்க் கேட்க, நான் மெதுவாக,

"நீங்கள் ஒரு ஐம்பது சதத்தைக் குறைத்துக் கொடுத்தால்· இந்த பஸ் நடத்துனர் அதை அமைதியாகப் பெற்றுக் கொள்வார் என நினைக்கிறீங்களா?" கேட்டேன். அந்த மனிதர் பார்வையால் என்னை எரிக்க முயன்று பின் சிரித்தார். அசடு வழிந்தது!!

# மொட்டைக் கடிதம்



அம்தரவல்ல-நிலாவாசன்

மியூசிக் கோணர் "இன்ஸ்டிரியூட், மாணவர்களுக்கு பிரக்டிகல் கொடுத்து விட்டு அமர்ந்து சிகரட் பத்திய ஷானாஸை நோக்கி பியோன் காதர் நாநா இளித்தவாரே வந்தார்.

"லெட்டர் சேர்... விஷயம் என்ன'ன்னா தமிழ்லதான் அட்ரஸ் எழுதி இருக்கு." சொன்ன காதர் நாநா லெட்டரைக் கொடுத்து விட்டு தலை சொறிந்தார். "வேறென்ன"

"லீவ் வேணும் சேர்..."

"ஏன் இன்றைக்கும் யாராவது இறந்திட்டாங்களா, இல்ல மூன்றாவது பெண் பெரிய மனுஷியாயிட்டாளா"

"இல்ல... என்று புன்னகைக்க முயன்ற காதர் நாநா முகத்துக்கு கோபத்தை வைத்துக் கொண்டு சொன்னார். "பாருங்க சேர், என் ரெண்டாவது பொண்ணுக்கு எவனோ ஒரு தடிப்பயல் காதல் வரம் கேட்டு கடிதம் எழுதியிருக்கிறான். இன்னொருத்தன் என் மூத்த பொண்ணு போட்டோ கேட்டு எழுதியிருக்கிறான்."

ஷானாஸ் சிரித்து விட்டுக் கேட்டான். "ரெண்டும் உங்க பெயருக்குத்தான் வந்ததா."

"இல்ல சேர், தபால்காரன் ரெண்டு லெட்டரையும் என் கைலதான் தந்தான். உடைச்சுப் பார்த்தால் விஷயம் இப்படிப் போகுது."

"நீங்க செஞ்சது தப்பான காரியம். அடுத்தவர்களுக்கு வாற கடிதங்களை உடைச்சுப் பார்க்கக் கூடாது."

"இல்லேன்னா விஷயம் விளங்கி இருக்குமா, சேர்"

"அப்பிடியா.... அப்போ ரெண்டு பொண்ணுக்கும் அந்தப் பையன்களோட ஏதாவது அது இது இருக்குமோ..."

"இருக்கு. மூத்த பொண்ணு ஒத்துக் கிட்டா."

ஷானாஸ் சிரித்தான். காதர் நாநாவும் வெட்கியவர்போல் சிரித்தார்.

அப்படியென்றா அந்தப் பொடியன உங்களுக்குத் தெரியுமா?" என்றான் ஷானாஸ்.

தெரியும் சேர், கொழும்பில வேலை. சொந்தத் தொழிலில்ல. ஒரு கடையில தான்- நல்ல பையன்.

"நீங்களே சர்டிபிகேட் கொடுக்கிற மாதிரி இருக்கு."

"ஓ....சேர். அதற்குப் பிறகு கன விஷயம் நடந்திருக்கு. அந்தப் பையன் வீட்டுக்குப் போய் அவங்க எங்க வீடு வந்து எல்லாம் பேசி முடிச்சு.... இனி கல்யாணம் மட்டும் தான் பாக்கி."

"ஆஹா..." என்ற ஷானாஸ் உண்மையிலேயே சந்தோஷப்பட்டான். "எனக்கும் கல்யாணத்துக்குச் சொல்லுங்கள்" என்றான் ஆர்வமாய்.

"சொல்லாமலா சேர். நாளைக்கு டேட் குறிக்க மாப்பிள்ளை வீட்டார் வாராங்க. அதனால நாளைக்கும் 'லீவ்' வேணும்.

"சின்ன பொண்ணுக்கு கடிதம் எழுதின பையனத் தேடிப் பிடிக்கணும்"

ஷானாஸுக்குச் சிரிப்பு வந்தது. "உங்களுக்கு ரொம்பத்தான் தைரியம்...." என்றவன் "அந்தப் பையன் மொட்டையாத்தான் கடிதம் எழுதி இருக்கிறதாச் சொன்னீங்க. எப்பிடித் தேடிப் பிடிப்பீங்க." என்றான்.

காதர் நாநா கேலியாகச் சிரித்தார். "கஷ்டமே இல்ல சேர், இன்றைக்கு ஊர் கோடித் தெருவுல இருக்கிற 'சொஸைடி' லைப்ரரி திறக்குது. என் பொண்ணு தப்பாமப் போவா. அந்தப் பையனும் வருவான்.

"வந்து...."

"வந்து பொண்ணு பின்னாடி சுத்துவான். சிரிப்பான், சீண்டுவான்.

"ஆஹா... உங்க திட்டம் பிரமாதம்" என்று சொல்லிக் கொண்ட ஷானாஸ் "அந்தப் பையனின் கெட்ட காலம்..." என்று உள்ளத்துள் எண்ணினான். வெளிப்படையாக "திட்டாமல் அறிவுரைபோல் சொல்லுங்கள். என்றான்.

"திட்டவாவது அறிவுரை சொல்வதாவது, அவன் எனக்கு ரெண்டாம் மருமகன் இல்லையா.."

"அப்போ இந்தப் பையனையும் மருமகனாக்கிட்டீங்க."

"வேறென்ன சேர், இப்படி வாற சம்பந் தங்களால சீதனப் பேச்சே இல்ல. அதுக்காக சீதனம் கொடுக்க மாட்டேன்'னு சொல்லவும் இல்ல. பையன் தேடி வாறான். சீதனத்துக்கு இறுக்கம் இருக்காது. முடிஞ்சதக் கொடுக்கலாம்."

"நல்ல திட்டம்.." என்றான் ஷானாஸ் புன்னகையை சிந்தி.

"அப்புறம் எனக்குள்ள வேலை அந்தப் பையன் யார் என்று பார்த்து எங்களுக்கு ஏற்ற இடமா இருந்தா வீட்டுக்குப் போய் அவன் பெற்றோருடன் பேசப் போறேன்."

ஷானாஸ் எழுந்து காதர் நாநாவை ஆதரவாகக் கட்டிக் கொண்டான்."நீங்கள் மூளையைப் பாவித்து நடந்து கொள்கிறீர்கள். பொண்ணைப் போட்டு அடிக்காமல் பையன் வீடு போய் கலாட்டா செய்யாமல் காரியம் நடக்கச் சிந்திக்கிறீர்கள். உங்களைப் போலத்தான் எல்லாப் பேரண்ஸும் இருக்கணும். கல்யாணச் சாப்பாட்டு செலவ நான் ஏற்றுக்கொள்கிறேன்....." என்றான்.

காதர் நாநாவின் கண்கள் லேசாய்ப் பூக்க நெகிழ்ச்சி உதட்டுத் துடிப்பின் உபயத்தில் தெரிந்தது.

"நான் தானா சேர் மூளைசாலி. நீங்கள் தான் தேவையற்றவங்களுக்கு அவங்க கேட்காமலே உதவ நினைக்கிற நீங்கதான் காரியம் நடக்கச் சிந்திக்கிறீங்க. நான்... நான் உங்கள முதலாளியா அடைஞ்சதற்கு கொடுத்து வெச்சிருக்கேன்...." என்றவன் "நான் போய் வரவா சேர்...?" என்றான் தாழ்மையாய்.

"போய்ட்டு வாங்க.." என்றவன் சிகரட் பில்டரை ஆஷ்ட்ரேயில் அழுத்தி விட்டு வந்திருந்த கடிதத்தில் பார்வையைச் சீராக்கி.. தூரத்தில் போய்த் திரும்பிப் பார்த்த காதர் நாநாவை நோக்கிக் கேட்டான். "இந்த லெட்டர் எப்போ வந்தது."

"வீட்டுக்குப் போனேன். இன்று காலையில் வந்தது என்றுதான் உங்க உம்மா சொன்னாங்க."

சொன்ன காதர் நாநா, மீண்டும் அங்கு நின்றால் இன்னொரு வேலை வரலாம் என்று அவசரமாய்க் கிளம்பி- ஷானாஸ் கடிதத்தைப் பிரித்து படிக்க ஆரம்பித்து..

"அவன் மியூசிக் திறமை பற்றிய பாராட்டுக் கடிதம். ஒவ்வொரு வார்த்தையிலும் ஒரு கோடி அர்த்தங்கள். இருட்டில் தட்டுத் தடுமாறி போய்க் கொண்டிருக்கையில் தூரத்தில் வருகிற வெளிச்சத்தின் மீது வைக்கும் எதிர்பார்ப்பைப் போல ஒரு சந்தோஷம். புகழ் மாலையில் பற்றிக் கொண்ட புத்துணர்ச்சி. நிறையப் பாராட்டுக் கடிதங்களை படித்து பழக்கப்பட்டவன். இந்தக் கடிதம் முடிந்திருந்த இடம் படித்து முகம் இருண்டான். ஏற்பட்ட சந்தோஷ ராகங்கள் கொஞ்சம் கொஞ்மாய் சரிய ஆரம்பித்தது.

"உங்க ரசிகை ஷாமா... என்று பெயர் மட்டுமிருக்க முகவரிக்குரிய இடம் இடை வெளியாய்.

"பெயருடன் முகவரியையும் எழுதினால் நன்றிக் கடிதமாவது எழுதலாம்." என்றது மனம். கொஞ்சம் கோபமும் வந்தது. அன்புக்குரிய ஷாமா உங்கள் முகவரியையும் எழுதுங்கள், நான் நட்பைப் பேணுபவன்." என்று அவன் உள்ளக் குருவி கூவியது. அவனுக்கு வந்த மொட்டைக் கடிதம் அனாதரவாய் நிற்க காதர் நாநாவுக்கு வந்த கடிதங்கள் சிறகு கட்டிக் கொண்டதை சிந்தித்துப் பார்த்தான். கவிதை ஒன்றை அக்கடித்தின் மீது எழுதினான்.

அன்புள்ள ராகத்துக்கு
தூரத்திலிருந்து நீ
தோகை விரித்தால்
தாகித்திருக்கும் இசையெப்படி
கவிதை எழுதும்.
முகவரிக் கருவியை
முன்னுரையாக்கு.
காலத்தின் மீது
பாடல் வரையலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# நினைவுகளும் பறக்கும்!

மலர் ஒரு கையில் நார் மறுகையில், தொடுத்தால்தான் அது ஆகும் மாலை! தொடுக்காமல் எங்கோ நோக்கிக் கொண்டிருந்தாள் பாவை.

அங்கே அவன் சிரித்தான் அவளை நோக்கி கையசைத்தான்.

" 'வா சொர்ணா வா!" என்று வாயசைத்தான். அவள் ஓரடி முன்னே எடுத்துவைத்துவிட்டு மறு அடி எடுத்துவைக்க தடுத்தது வெட்கம். தலை குனிந்து தரை பார்த்தாள்.

தரையிலும் அவன் நிழலைத்தான் பார்த்தாள். பாத விரல்களுக்கு பூசியிருந்தாள் மருதாணி.

வெட்கத்தில் சிவந்திருந்த அவள் முகநிறத்தை மிஞ்சவில்லை அந்த மருதாணி வர்ணம். "ஏன் தயக்கம் ? என்னருகே வா ராணி"

குனிந்தபடி அவன் நிழல் மீது நகர்ந்தாள் சொர்ணா.

"வானத்தில் நிலவசையும் திசையெல்லாம் வெளிச்சம் வரும். வையகத்துப் பெண்களிலே அழகான நீ அசைந்து வரும் போது விரகதாபம் வரும். வெண்ணிலவை நான் இப்போ ரசிப்பதில்லை; உன் பொன் அழகை என் விழிகள் கண்டுவிட்ட காரணத்தால்!"

## இலக்கிய நயம் - தருவது ரசிகன்

கவிதை நடையில் வார்த்தைகளை அவள் மீது மழையாகப் பொழிந்தான். வெட்கத்தில் அவள் நடை தடுமாறியது. கால்கள் பின்ன தரைநோக்கி கவிழப்போனவளை அவன் முன்னேறி தன் இருகரத்தால் தாங்கிக்கொண்டான்.

"விழுந்திருந்தால் உடைந்திருக்கும் என் இதயம்."

அவன் சொல்ல அவள் உள்ளத்தில் உற்பத்தியானது அருவி.

முகம் நோக்க வெட்கப்பட்டு விழிகள் மூடிக்கொண்டாள்.

சூடான மூச்சை வெளியிட்ட நாசியை விரல்களால் வருடிவிட்டு 'இதழ்களில் ஆட்காட்டி விரல் வைத்து அவன் மெல்ல வருட மூடியிருந்த அவள் இமைகளிலும் வியர்த்தது.

இதயம் தறிகெட்டு ஓடும் புரவிபோல துடித்தது.

நெருப்பு-நெருப்பு. ஆசையும் நெருப்பு. அதுதான் வெப்பம். வெப்பமும் பயமும் ஒன்றாய் கலக்க உடலெங்கும் வியர்த்தது.

இதழ்களின் மென்மை பூவின் இதழ்கள் போல இதமான உணரல். அவன் மெல்லக் குனிந்து இதழ்களை நெருங்க அவன் மூச்சுக்காற்று அவள் முகத்தில் பட்டு வியர்வை கலைந்தது.

"என்ன செய்யப் போகிறான்?"

அறியும் துடிப்பில் விழிகள் திறக்காமல் மனதுக்குள் ஆவல் இறக்கை கட்டிக்கொண்டது.

இதழ்களில் அமர்ந்தன இனியவன் உதடுகள். பூவின் இதழ்களில் பனித்துளி போல் பூவையின் இதழ்களில் காளையின் உதடுகள் கொட்டின ஈரம்.

இனிதாய் உணர்ந்தாள் ; இன்னும் வேண்டும் என்பதாய் உணர்ந்தாள்.

பாவை இதழ்களில் ஊறிய கள்ளில் மெய்மறந்து போன காளை ஆர்வ வேகத்தில் பற்களால் கடித்தான்.

வலியது ஆசை என்பதால் கடித்த வலி தெரியாமல் பாவை கண்மூடி ரசித்தாள்.

கள்ளின் சுவையில் களித்த வண்டு அவள் நெஞ்சத்து மலைகளில் இறங்கி அமர்ந்தது.

' பலாக் கனிகளின் பாரம் தாளாமல் வளைந்த கிளைகள் பார்த்திருக்கிறேன். வலிய கனிகள் தாங்கியும் இந்த வண்ண உடல் வளையாத அதிசயம் இப்போதுதான் காண்கிறேன்'.

மெய்மறந்த வண்டு நினைத்து வியந்தது.

"சொர்ணா!"

என்று சொக்கிய வண்டு கிறக்கமாய் அழைத்தது.

"எ..என்ன.?"

மகரந்தம் குறையாத மலரின் குரலில் சின்னதாய் நடுக்கம்.

" நான் எங்கே இருக்கிறேன் சொர்ணா.?"

"இங்கேதான்."

"இங்கேதான் என்றால் எங்கே.?"

"உளறுகிறீர்கள்."

"தவறு சொர்ணா. உழலுகிறேன் என்று சொல். வற்றாத இன்ப அருவியில் உழலுகிறேன் சொர்ணா".

அவள் தோள்களில் முகம் சரித்து உதடுகளால் ஊர்வலம் நடத்தினான்.

இடதுகரத்தால் இடையினை வளைத்து மெல்லக் கிள்ள,

"ம்... வலிக்கிறது.."

என்று சிணுங்கினாள சொர்ணா.

"சந்தேகம் தீர்ந்தது."

என்றான் காளை.



"என்ன சந்தேகம்?"

"பொற்சிலையோ பேசும் பெண் உருவோ? என்ற சந்தேகம்."

சொர்ணா அவன் கூற்றாலும் கூச்சத்தாலும் நெளிந்தபடி நகைத்தாள்.

அப்படி அவள் நெளிந்தபோது அவள் இடையின்மீதிருந்த அவன் கரம் நழுவியது.

நழுவிய கரம் செய்த விஷமமும், விஷமம் செய்யப்பட்ட இடமும் சொர்ணாவை மேலும் நெளியவைத்தது.

உடல் முழுக்க சிவந்து சிலிர்க்கவைத்தது.

பலம் இல்லாத தடையாக,

"வேண்டாம் விடுங்கள்..."

சிணுங்கினாள். அவனுக்குள் சிறையாகி ஒடுங்கினாள்.

நெஞ்சத்தில் நெஞ்சம் தஞ்சமாக,

இருவரே ஒருவராய் மாறிய விந்தை கண்டு வீசும் தென்றலும் வியந்து செல்ல,

பேச்சின் ஒலி அடங்கி மூச்சின் ஓசை மட்டுமே இரு உயிர்கள் இருப்பதற்கு சாட்சியாக, மெய்மறந்திருந்தனர் மனம் கலந்தவர்கள்

"சொர்ணா....... சொர்ணா...."

அழைத்தது தோழி.

"இது என்ன என்னவர் குரல் பெண் குரலாய் கேட்கிறது?"

சொப்பனத்தில் இருந்த சொர்ணாவுக்கு ஆச்சரியம்.

தோழிக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல நிலமை புரிந்தது.

"விழித்துக்கொண்டே இன்பம் செழிக்கும் கனவோடி சொர்ணா?"

காதருகே சென்று உரத்துக் கேட்டதால், மலையுச்சியில் இருந்து பிடிப்பு, விலகி விழுந்ததுபோல் திகைத்து திரும்பி நோக்கினாள் சொர்ணா.

"எப்போதடி வந்தாய்?"

"சொப்பனத்தில் நீ சொக்கிப் போய் இருத்தபோது!."

சொர்ணா வெட்கப்பட்டாள். கனவு சிதைந்ததே என்று வருத்தப்பட்டாள்.

" மாலை தொடுக்க அமர்ந்துவிட்டு மனதை எங்கோ அலையவிட்டிருக்கிறாய். வஞ்சக வண்டை இந்த மலர் தேடுகிறது. உன் கையிலுள்ள மலரோ மாலையாக முன்னரே வாடுகிறது."

அடி... போடி. உனக்கு வேறு வேலையே இல்லை"

சொர்ணா சொல்ல தோழி நகைத்தாள்

"வண்டாக இருந்தால் எனக்கும் விருந்துண்ணும் வேலை இருந்திருக்கும்."

போலியாய் தோழியை அடிக்கப் போனாள் சொர்ணா.

"உண்மையைச் சொன்னால் ஏனம்மா கோபம்.? உன்னிடத்தில் என்னை இருத்தி சொல்லவோ ஒரு கவிதை? "

"சொல்லேனடி பார்க்கலாம்."

தோழி சொன்னது பாரதிதாசன் கவிதை. காளையைத் தேடும் காதல் பாவையின் நெஞ்ச மஞ்சத்து தேடுதல் கவிதை.

**"விடிந்தால் அவன் உருவிலே என் விழி திறக்கும் - என்**
**வேலைக் கிடையில் நினைவெல்லாம் எங்கோ பறக்கும்.**
**கொடியவன் பிரிந்தான் என்பதால் என்னுள்ளம் இறக்கும் - பின்**
**கொஞ்ச வருவான் என அது மீண்டும் பிறக்கும்**

..........................

**மறந்திருக்கவோ என்னால் முடிவதும் இல்லை - அந்த**
**வஞ்ச வண்டுக்கென் நெஞ்சந்தானே முல்லை!**
**உறங்கும் போதும் இமைக்குள்ளும் செய்குவான் தொல்லை - என்**
**ஒளி இதழ் அடையுமா அவன் முத்தப் பல்லை?"**

*—பாரதிதாசன்.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல—90

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | | |
| | | ■ | 4 | | | ■ |
| | ■ | 5 | | | ■ | 6 |
| 7 | 8 | | | ■ | 9 | |
| ■ | | | ■ | 10 | | |
| 11 | | | ■ | | ■ | ■ |
| | | ■ | 12 | | | |

### இடமிருந்து வலம்

01. இதனை நினைத்துக்கொண்டு சிலர் உரலை இடிப்பார்கள்.
03. கேலி என்பதை இப்படியும் அழைக்கலாம்.
04. நாம் வாழும் உலகில் இதற்கும் இடமுண்டு.
05. இதுவும் ஆடைதான். ஆனால் அணிய முடியாது.
07. இதன் அசைவுக்கும் பல அர்த்தங்கள் உண்டு.
09. இது கனிந்தால் இனிமை.
10. இது எதிர்க்கப்பட வேண்டியது.
12. அன்பளிப்பு என்றும் சொல்லலாம்.

### மேலிருந்து கீழ்

01. இது இருந்தால்தான் உலை வைக்கவும் முடியும்.
02. அரசின் வருமானத்திற்கு இதுவும் பேருதவி.
04. ராசி பலனில் காணலாம்.
05. இவரும் கவிஞர்தான்.
06. உடைகளுக்கு மட்டுமல்ல உள்ளத்திற்கும் இது தேவை.
08. கண்ணன் பாடல்களில் இவரது பெயரையும் நீங்கள் அறிந்திருக்கலாம்.
10. பொறுமையாக காத்திருந்து உறுமீன் தேடும்.
11. கூட்டாளிக்கு இப்படியும் ஒரு பெயர்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 04.02.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-90**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.**

### குறுக்கெழுத்துப் போட்டி இல-88ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சு | ரு | ட் | டு | ■ | 2 தோ | 3 கை |
| 4 ரு | சி | ■ | 5 தி | ரு | ப் | தி |
| தி | ■ | 6 வே | ■ | ■ | பு | ■ |
| ■ | 7 பா | ட் | டா | ளி | ■ | 8 க |
| 9 கோ | ட் | பா | டு | ■ | 10 நா | டி |
| வி | டி | ள | ■ | 11 பா | ■ | த |
| ல் | ■ | ர் | ■ | 12 வை | ர | ம் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.88இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி: வி. சங்கீதா, தெஹிவளை
2. ரீ. சேகர், ஹட்டன்
3. என்.பி. அயுப், மதவாச்சி
4. ஐ.எம். இர்பானா, சிலாபம்
5. என். பிரசாந்த், பதுளை
6. என். லிடியா ரோஹினி, களுவாஞ்சிக்குடி
7. ஏ. ஜெகானா பேனிஸ், லுனுகல
8. எம். அப்துல் மஜீத், பேருவளை
9. எப். லீலா, தோப்பூர்
10. திருமதி, ஷகீலா, கொச்சிக்கடை

**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

# ஸ்போர்ட்ஸ்

## இது வேறு விளையாட்டு



பிரபல டெனிஸ் வீராங்கனை மாட்டினா நவரத்திலோவா டென்னிஸ் உலகில் இருந்து ஓய்வு பெற்று விட்டார் என்பது அனைவரும் அறிந்த செய்தி.

தற்போது அவர் பெண்கள் பேஸ்போல் விளையாட்டில் இறங்கியுள்ளார். இதற்காகத் தீவிர பயிற்சியும் எடுத்து வருகிறார்.

'சில்வர் புல்லட்' என்ற அணியில் நவரெத்திலோவா சேர்ந்திருக்கிறார். அமேரிக்காவில் கிரிக்கெட்டைவிட பேஸ்போலுக்குத்தான் மவுசு அதிகம். டென்னிஸ்ஸைப் போல் பேஸ் போலிலும் மார்ட்டினா சாதனை படைப்பாரா?

## மனைவி எழுதிய புத்தகம்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை புரிந்துள்ள கபில்தேவ் பற்றி அவரது மனைவி ரோமி தேவ் எழுதிய 'ட்ரம்ப் ஒவ்த ஸ்பிரிட்' (உத்வேகத்தின் வெற்றி) என்ற புத்தகம் கடந்த 07ம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற விழாவில் வெளியிடப்பட்டது.

கபில்தேவின் அரிய புகைப்படங்களும், அவரைப் பற்றிய பிரபலமானவர்களின் கருத்துக்களும் 160 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ளன. இப்புத்தகத்தின் விலை.1800 இந்திய ரூபாய்.

இந்தப் புத்தகத்தின் முதல் பிரதியைப் பிரபல ஓவியர் எம்.எச்.ஹுஸைன் வெளியிட அதை பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சன் பெற்றுக் கொண்டார். இந்தப் புத்தக வெளியீட்டு விழா, இந்திய கப்டன் அசாருதீனின் பிறந்த நாளாகவும் அமைந்திருந்தது. அவரும் சக வீரர்களுடன் வந்திருந்தார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய 'லிட்டில் மாஸ்டர்' சுனில் கவாஸ்கரும், அமிதாப்பச்சனும் பேசுகையில் கபில் தேவின் சாதனைகளைப் பாராட்டினார்கள்.

## கபிலைப் புகழும் அக்ரம்



கபில்தேவ் டெஸ்ட் போட்டிகளில் 437 விக்கெட்டுக்களை வீழ்த்திச் சாதனை படைத்தது பழைய செய்தி. இது பற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான வாசிம் அக்ரம் கூறும் போது,

"எந்த ஒரு பந்து வீச்சாளரும் உடல் ரீதியில் விளையாடத் தகுதியானவராக இருந்தால், அவரால் கபில்தேவ் ஏற்படுத்தியுள்ள சாதணையை நிச்சயம் முறியடிக்க முடியும்." என்று தெரிவித்தார். மேலும் கிரிக்கெட்டில் சாதனை படைக்க வேண்டும் என்பதில் தான் அதிக அக்கறை செலுத்த விரும்பவில்லை என்றும் அக்ரம் கூறியுள்ளார். மேலும் அவர் கபிலைப் பற்றிக் கூறும்போது,

கபில்தேவ் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரராவார். அவர் தலைசிறந்த பந்து வீச்சாளர் மட்டுமல்ல. அவர் மிகச் சிறந்த துடுப்பாட்டக்காரரும், களத்தடுப்பு வீரரும் ஆவார்." என்று கூறினார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 69

இவ்வாரம் (26.02.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

காலத்தின் குரல்:

ஒரு மரத்தினிரு கிளைகள் ஒன்றையொன்று பகைத்ததனால் அரியவரும் பெரியவரும் அத்தனை பேர்தனை மாய்க்கும் குருச்சேத்திரப் போர் முனைதான் குமுறுமொரு எரிமலையாய் குருதி வெள்ளம் பெருகிவரக் காத்திருக்கும் காட்சி கண்டோம்! குதிபோடும் குதிரைகளும் மிதித்தோடும் யானைகளும் எதிரெதிரே அணியணியாய் அடலேறு வீரர்களும் எண்திசையும் ஆர்ப்பரித்து எழுந்து வரும் சாயலிலே மண்ணதிர்ந்து மலை பிளந்து மரணமொழி யெழுகிறதே! திண்ணமிது இப்பாரில் இப்போர் போலொரு போரை விண்ணவரும் காண்பதற்கு வாய்ப்பேதும் வருவதில்லை!

-காட்சி தொடக்கம்-

மதுராபுரி அரசன் சல்லியன் பாண்டவர் படையில் இணைவற்குப் பெரும் படையுடன் வருகிறான். அவர்களை வரவேற்கும் தோரணையில், இளைப்பாறும் முகாம் ஒன்று எதிர்பட்டு வியப்பினை அளிக்கிறது.

**மது.மன்:** தளபதி! நாம் வரும் பாதை பற்றி யுதிஷ்டிர மன்னருக்கு அறிவிக்கவில்லையே! அப்படியிருந்தும் நம்மை வரவேற்க எத்தனை ஆயத்தங்கள் செய்யப் பட்டுள்ளன.

சில வீரர்கள் குதிரைகளில் வருகிறார்கள்.

**வீரன்:** வாழ்க மதுராபுரி மாமன்னர்! எங்கள் மன்னரின் சார்பில் தங்களையும் தங்களைச் சார்ந்த அனைவரையும் வரவேற்கிறோம்!

**மது.மன்:** நாங்கள் இப்பக்கம் வருவதை எவ்வாறு அறிந்துகொண்டீர்கள்?

**வீரன்:** மதுராபுரியிலிருந்து தாங்கள் வரும் பாதை எதுவானாலும் இதே உபசரணை தங்களைக் காத்திருக்கிறது. தங்கள் படைகளும் தாங்களும் எத்தகைய துன்பமும் அடையக்கூடாது என்பதற்காக எமது மன்னரின் ஏற்பாடு இது! தாங்கள் சம்மதித்தால் எம் மன்னரின் விடுதிக்கு தங்களை அழைத்துச் செல்கிறோம்!

**மது.மன்:** அப்படியே ஆகட்டும்!

மதுரா மன்னர் சல்லியன் வாழ்க வாழ்க என்ற கோஷம் வானளாவ எழ வரவேற்கப் படுகிறார்.

அடுத்த நாள்–உதயம்.

**மது.மன்:** உங்களது உயர்ந்த உபசரணை பற்றி நிச்சயம் மகாராஜா யுதிஷ்டிரரிடம் கூறுவேன்.

**வீரன்:** தங்கள் திருப்தியே எமது சேவைக்கு பெருமதிப்பாகும் மகாராஜா!

**மது.மன்:** கேட்டீரா தளபதி! சேவையினையே ஒரு கலையாகக் கண்டவர்கள் இவர்கள். எம்மைத் திருப்திப்படுத்தி அதில் பெரு மகிழ்வினைக் காண்கிறார்கள்!

பயணத்தைத் தொடர்கிறார்கள்.

□□□

**சகுனி:** கவனமாகக் கேள் மருமகனே! என்னுடைய திட்டப்படியே எல்லாம் நடக்குமானால்...

**வீரன்:** வணக்கம் இளவரசே!

**துரி:** சல்லிய மகாராஜா வந்துவிட்டாரா?

**வீரன்:** ஆம் இளவரசே! நாங்கள் அவருக்களித்த உபசாரத்தால் மகிழ்ந்து போனார்! இதனை நிச்சயம் யுதிஷ்டிர மன்னரிடம் தெரிவித்து எங்களுக்கு வெகுமதி வாங்கித்தரப் போவதாகக் கூறினார்.

**துரி:** கேட்டீர்களா மாமா! நாம் தான் உபசரிப்புக்கான ஏற்பாடு செய்தோம்! இதனை யுதிஷ்டினரிடம் கூறப்போகிறாராம் சல்லிய மன்னர்!

**சகுனி:** அன்பு மருமகனே! அந்த மாமனாரை உன்பக்கம் வசீகரிக்க செய்யப்பட்ட சூழ்ச்சி வெற்றியளித்துவிட்டது. இது பாண்டவர்களுக்கு முகத்தில் கரி பூசி விட்டிருக்கும்.

□□□

பாண்டவர்களின் பாசறை.

**அர்ச்:** கேசவா! இங்கு நாம் ஏன் தாமதிக்க வேண்டும் என்று அண்ணாவிடம் கேட்டுப் பாருங்கள்!

**கிருஷ்:** ஏன் நீர் கேட்டால் என்னவாம்.....?

**அர்ச்:** அவர் வயதில் மூத்தவராயிற்றே!

**கிருஷ்:** 'நானும் தான் அவரைவிட வயதில் இளையவனாயிற்றே! சரி! மைத்துனரே! இதோ இந்த வில் வீரன் தங்களிடம் ஏதோ கேட்கச் சொல்லுகிறார்.

**யுதிஷ்:** அர்ச்சுனா! ஏன் நீயே என்னிடம் கேட்டால் என்ன...?

**அர்ச்:** அண்ணா! இங்கேயே தாமதிக்கிறோமே! ஏன்? யாரையாவது எதிர்பார்க்கிறீர்களா?

**யுதிஷ்:** ஆமாம்! கல்லிய மாமா வர வேண்டுமே!

**நகுல:** அவர் யாரை கொல்லப்போகிறார்?

**கிருஷ்:** வெறுமனே உயிர்களைப் போக்கடிப்பது மட்டும்தான் போரின் தன்மையல்ல நகுலா? ஒரு அம்பு முதலில் எதிரியின் கவசத்தைத் தாக்குமா அல்லது மார்பினைத் தாக்குமா?

**நகுல:** கவசத்தை ஊடுருவிச் சென்று மார்பினைத் தாக்கும்.

**கிருஷ்:** சில மார்புகள் சிறப்புடையன; அதேபோல் மார்புக் கவசங்களும்தான்! மதுராபுரி மாமன்னர் சல்லியரை நாம் களத்திருக்கிறோம். போர் முனைக்குப் போவதற்கு முன்னர் பல தரப்பட்ட அம்சங்களையும் சீர்தூக்கிப் பார்த்தாக வேண்டும். நம் அனைவருக்கும் சல்லிய மன்னரை நன்கு தெரியும். அத்துடன் உனக்கு அவர் மிக நெருங்கிய உறவினரும்கூட. எதிரணியில் ஒரு மாமா சகுனி இருக்கிறார். அதுபோன்று நம்மிடமும் சல்லிய மாமா இருக்க வேண்டியது அவசியமாகிறது.

□□□

மதுராமன்னரும் படைவீரரும் முன்னேறும் போது தளபதி படைகளை நிறுத்தும்படி கட்டளையிடுகிறார்.

**தளபதி:** நிறுத்துங்கள்! வாழ்க மகாராஜா! தாங்கள் விரும்பினால் இன்றிரவு இங்கு விடுதிவிட்டு நாளைக்காலை புறப் படலாம்!

**மது.மன்:** வேண்டியதில்லை. கடந்த வாரம் முழுவதும் நாம் இடையில் தங்கவில்லை. தர்மராஜா யுதிஷ்டிரர் நம்மை வரவேற்று உபசரிக்கக் காத்துக்கொண்டிருப்பார். நாம் பயணத்தைத் தொடர்வோம்.

அடுத்த தரிப்பிடத்திலும் மன்னர் சல்லியரையும் படையினரையும் இடைமறித்து உபசரணைகள் தொடர்கின்றன. பெண்கள் மது பரிமாறுவதுடன் இசைநடன விருந்தளிக்கின்றனர்.

**வீரன்:** வாழ்க மகாராஜ! அஸ்தினாபுரத்தின் இளவரசர், காந்தாரி புதல்வர், வீரர் துரியோதனார் தங்கள் சமூகம் நாடி வருகிறார்!

**மது.மன்:** துரியோதனனா? அவனை நான் ஏன் பார்க்க வேண்டும்? அவனுக்கு எதிராக பாண்டவருடன் சேர்ந்து போராடவன்றோ புறப்பட்டு வந்துள்ளேன்! எதற்கும் யுதிஷ்டிரரின் தம்பி தானே துரியோதனன்! பார்ப்பதில் தவறில்லை. வரச்சொல்!

துரியோதனனுடன், கர்ணன், சகுனி, துச்சாதனன் வருகின்றனர்.

**துரி:** வணக்கம் மாமா அவர்களே!

**மது.மன்:** யுதிஷ்டிர மன்னரின் படை வீட்டுக்கு உங்களைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்!

**துரி:** என்ன? யுதிஷ்டிரரின் படைவீடா...?

**மது.மன்:** ஆமாம்! நான் இதுவரை இத்தகை உபசரணை எதனையும் பெற்றதில்லை! மதுராபுரியிலிருந்து புறப்பட்டதிலிருந்து மாலையானதும் யுதிஷ்டிரரின் வீரர்கள் எங்கிருந்தோ ஓடிவந்து வாடிகளுக்கு அழைத்துச் சென்று மிகமிகப் பிரமாதமாக உபசரிக்கின்றனரே!

**கர்ண:** இது மாபெரும் அநீதியாயிற்றே...? இந்த விருந்துபசாரமெல்லாமே இளவரசர் துரியோதனனுடையதாயிற்றே! தாங்களோ பாண்டவர்களைப் புகழ்கிறீர்கள்!

**சகுனி:** அங்கத்துக்கதிபனே! அவ்வாறு கூறலாகாது. பலன் கிடைக்கும் என்றெண்ணி உதவுவது தவறு. மன்னர் சல்லியர் - நகுலன், சகாதேவனுக்கு மாமனார் என்றால் துரியோதனனுக்கும் இவர் மாமாதானே. இன்று யுத்தம் பிரகடனப் படுத்தினாலும் அவர்கள் ஒரே குடும்பத்தவர்கள்தானே! தண்ணீரை கோல் கொண்டு பிரிக்க முடியுமா?

**மது.மன்:** உனது பணியாட்கள் தங்களை யார் என்று என்னிடம் வெளிப்படையாகக் கூறியிருக்க வேண்டுமல்லவா துரியோதனா?

**துரி:** அவர்களைப் பற்றி தாங்கள் விசாரித்து அறியவில்லையே! அவர்களுடைய உபசரணைகளில் தாங்கள் மகிழ்ச்சியடைந்தீர்கள்!

**மது.மன்:** மகனே! நான் பாண்டவர்களின் அணியில் சேர்வதற்காகவல்லவா புறப்பட்டு வந்தேன்!

**துரி:** அதனை நான் தடுக்கவில்லையே! தங்களுடைய சௌகரியத்தைத்தானே கவனித்தேன்! அது எனது கடமையாயிற்றே!

**மது.மன்:** தெரிந்தோ தெரியாமலோ உமது விருந்துபசாரத்தை ஏற்றுவிட்டேன். ஆகவே நான் ஏதாவது கைமாறு செய்ய வேண்டாமா?

**துரி:** இல்லை! எனது விருந்தோம்பலுக்கு நான் விலை கூறலாமா? கைமாறாக - அது வாழ்த்தாக இருந்தாலும் ஏற்பது முறையாகாதே!

**மது.மன்:** அவ்வாறானால் என்னுடன் - நான் போர்க்களம் ஏகுமுன் சண்டையிடு. எப்படியும் நான் நன்றிக்கடன் தீர்த்தாக வேண்டும்!

**துரி:** மன்னிக்க வேண்டும் மாமா! எனது சொந்த முகாமுக்கு வந்த தங்களை என் விருந்தினனாக ஏற்று உபசரித்த பின்னர் தங்களுடன் போரிடுவது முறையாகுமா?

**மது.மன்:** அவ்வாறானால் நான் உனக்கு ஏதாவது அளித்தாக வேண்டுமே! என்ன வேண்டும் கேள் மகனே!

**சகுனி:** மருமகனே! பெரியவர்களின் மனதை நோகடிக்கலாகாது. அவரோ என்னைப் போல உனக்கு ஒரு மாமாதான். கட்டளையிடுகிறார். எதையாவது கேட்டுப் பெற்றுக்கொள்!

**துரி:** தாங்கள் வற்புறுத்துவதால் கேட்கிறேன்! அஸ்தினாபுரி படைகளின் தளபதியாக பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**சல்லி:** மகனே! ஏற்கனவே அப்பதவியினை கங்கை மைந்தர் பீஷ்மர் ஏற்றுக்கொண்டுள்ளாரே!

**கர்ண:** அப்போது என்னுடைய தேர்ச்சாரதியாக அமர்ந்து உதவிபுரிய வேண்டுகிறேன். அர்ச்சுனனுக்கு கிருஷ்ணன் சாரதியாக அமர்கிறான். அதற்கு இணையாக தங்களைத்தவிர வேறு எவரும் இந்த உலகில் கிடையாது. அது தவிர பரசுராமரின் சீடனா- அல்லது துரோணாச்சாரியாரின் சீடனா உலகில் சிறந்த வில்வீரன் என்பதை இந்தப் போரே நிர்ணயிக்கவிருப்பதால் தங்கள் துணை எனக்கு நிச்சயம் தேவைப்படுகிறது மாமன்னவரே!

**சல்லி:** அங்கநாட்டதிபனே! உன்னுடைய எதிரி என்னுடைய உறவினன் என்று நன்றாகத் தெரிந்தும் உன்னுடைய இரதத்தின் சாரதிப் பொறுப்பினை என்னிடம் ஒப்படைக்கத் துணிந்தாய்! பாராட்டுகிறேன்! மாவீரனாகிய உனது சாரதியாகக் கடமை பார்ப்பதில் பெருமைப்படுகிறேன். உனது வேண்டுகோளை நிராகரித்து உன்னை அவமானப்படுத்தமாட்டேன்!

-காட்சி மாற்றம்-

□□□

துரோணாச்சாரியார், கிருபாச்சாரியாருடன் துச்சாதனன்

**கிருபா:** கேட்டீர்களா செய்தி! மதுராவின் மன்னர் சல்லியன் அங்க மன்னன் கர்ணனின் தேர்ச்சாரதியாம்!

**துச்சா:** எனது முன்னிலையிலேயே சல்லிய மன்னர் கர்ணனின் கோரிக்கையை ஏற்றார். இந்த மகிழ்ச்சியான செய்தியினைக் கூறவே இங்கு வந்தேன்!

**துரோ:** அர்ச்சுனனுக்கும் கர்ணனுக்குமிடையில் நடைபெறும் மோதலில் - இதனால் ஒரு திருப்பம் ஏற்படலாம். இருப்பினும் வாசுதேவ கிருஷ்ணனைப் போன்றதோர் சாரதி முக்காலத்திலும் கிடையாது. மதுரா மன்னர் தற்போது எங்கிருக்கிறார்?

**துச்சா:** அவர் எமது அணியில் இணைந்துவிட்ட தகவலை யுதிஷ்டிரரிடம் கூறுவதற்காகப் போயிருக்கிறார். இவ்வாறானால் இறுதியில் எல்லோருமே எமது அணியில் சேர்ந்துவிடுவார்கள்! அவர்கள் ஐவர் மட்டுமே போர்க்களத்தில் தனித்துவிடக்கூடும்!

-காட்சி மாற்றம்-

பாண்டவர்களிடம் சல்லிய மன்னர் வருகிறார்.

**கிருஷ்:** மதுராபுரி மன்னவரே! தாங்கள் துரியோதனனுடன் இணைந்ததைப்பற்றி எதுவித பிரச்சினையுமில்லை. ஆனால் தங்கள் வாழ்த்துக்கள் என்றும் பாண்டவர்களுக்காகவே இருக்கும் என்று நம்புகிறேன்!

**சல்லி:** வாசுதேவா! இத்தகைய குள்ளத்தனமாக என்னை துரியோதனன் ஏமாற்றுவான் என்று நான் கருதவேயில்லை. பாண்டவர்களுடன் இணையவே நான் படையுடன் வருவது தெரிந்திருந்தும், திட்டமிட்டு என்னை மாட்டி வைத்துவிட்டான். எனது படைகளும், படைக்கலங்களும் நானும் அப்பக்கம் இருந்தபோதிலும் மானசீகமாக என்றும் பாண்டவர்களையே நான் வாழ்த்தி நிற்பேன்.

**சகா:** மாமா! நீங்கள் எங்கள் மானத்தையே வாங்கிவிட்டீர்கள்!

**யுதிஷ்:** தம்பி சகாதேவா! பொறுமையை இழக்கலாகாது!

**சகா:** எங்களுடைய இரதங்களின் முன்னால் அந்தத் தேரோட்டி மகன் கர்ணனின் இரதத்தைச் செலுத்திவர உங்களுக்கு எவ்வாறு மனம் துணிந்தது? உங்களுக்கு நினைவிருக்கிறதா அண்ணா! மூத்த அண்ணன்மாருக்கு உணவளிக்கு முன்னர், பெரியம்மா என்னை மடியில் கிடத்தி உணவூட்டு வாரே! அரக்குமாளிகையிலிருந்து வெளி யேறுகையில் என்னைத்தானே முதலில் அம்மா அனுப்பி வைத்தார்! வனவாசம் புறப்படும்போதும் திரௌபதியிடம் "இவன் என் அன்புக்குரியவன்; மிகவும் கவனமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறினாரே! மாமா! போர் முனைக்குப் புறப்படுமுன்னர் நீங்கள் தாயார் குந்தியிடம் சென்று, எங்களுக்கு எதிரணியில் சேர்ந்துவிட்டதாகக் கூறிவிட்டு வாருங்கள்! மாமா! தங்களுடைய செயல் எங்கள் அண்ணன்மார் முன்னிலையில் நாங்கள் மாற்றாந் தாய் மக்கள்தான் என்ற உணர்வினைப் பெற வைத்து விட்டதே!

**அர்ச்:** தம்பி சகாதேவா! நீ என்றும் எங்களின் அன்புக்குரியவனே! மாற்றாந்தாய் என்ற வார்த்தையினைக் கூறி ஏன் எம் அன்புத் தாய்மாரை இழிவுபடுத்த நினைந்தாய்? இரு தாய்மாரின் இணையற்ற அன்பில் வளர்ந்த நாம் ஐவரும் பாக்கியசாலிகளே! அவர்கள் ஊட்டிய அன்பினால் எம் இதயம் நிரம்பியிருக்கிறது. ஒரு வீரனுக்குரிய கடமையை ஏற்றுள்ள மாமாவின் மனம் வருந்த வைக்காதே! அவர் துரியோதனனுக்கு தெரிந்தோ தெரியாமலோ கடனாளியாகிவிட்டார். அவன் வேண்டுவதை அவனுக்கு அளிக்காமல் அவர் எம்மிடம் வந்திருப்பாரானால் அவர் என்றும் துரியோதனனுக்குக் கடனாளியாகவே இருந்திருப்பார். எமது பிதாமகரும் துரியோதனனுடன்தான் இணைந்திருக்கிறார். இதனால் அவர் எம்மைப் பார்க்கிலும் துரியோதனனை அதிகம் நேசிக்கிறார் என்று கூறிவிட முடியுமா? எமது குருவான துரோணாச்சாரியாரும் அப்பக்கமே உள்ளார். இதனால் அவர் எம்மீது வைத்துள்ள மதிப்புக் குறைந்து விடுமா? சகாதேவா! நம் மாமாவைப் பார்த்து இத்தகைய கடுமையான வார்த்தைகளை நீ பயன்படுத்தியிருக்கலாகாது. போய் அவரிடம் மன்னிப்புக்கேள்! அத்துடன் மாற்றாந் தாய் பிள்ளைகள் என்ற வார்த்தைகள் எதுவும் உன் வாயில் இனிமேல் என்றுமே வரலாகாது.

**சகா:** மாமா அவர்களே! தயவு செய்து என்னை மன்னியுங்கள்! நான் பெரும் தவறு செய்துவிட்டேன். அம்மா அறிந்தால் அவர் என் மீது கொண்டுள்ள அன்பே வெறுப்பாக மாறிவிடக்கூடும்!

பின்னணிப்பாடல்:

**துரியன் விரித்த வலையினில் வீழ்ந்தவன்**
**மதுரா மன்னவன் மயங்கித் தயங்கினன்**
**பாண்டவர் படையினி லிணைந்திடவந்துமோர்**
**பகைவரின் பாசறை புகுந்திட நேர்ந்ததே!**

-காட்சி மாற்றம்-

காந்தாரியிடம் குந்தி வருகிறார்.

**தோழி:** வணக்கம் மகாராணி! மகாராணி குந்திதேவி தங்களைப் பார்க்க வருகிறார்.

தடுமாற்றத்துடன் காந்தாரி எழுகிறார்.

**காந்:** என்ன...? என்னைப் பார்க்கவா குந்தி வருகிறாள்? (குந்தியிடம்) இத்தனை நாட்களின் பின்னர் என்னிடம் வருவதால் உன்னை மன்னித்துவிட்டேன் என்றோ மகிழ்ச்சி யுடன் இருக்கிறேன் என்றோ எண்ணிவிட வேண்டாம்!

**குந்தி:** அக்கா...!

**காந்:** அக்காவாம் அக்கா....! இந்த அக்காவைப் பற்றி ஒருதரமாவது எண்ணிப் பார்த்தாயா? இந்த மாளிகை, என் கணவர், என் மகன் துரியோதனன் ஆகியோர் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் துன்பமிழைத்திருக்கலாம்! அதற்காக என்னை ஏன் தண்டிக்க நினைத்தாய்?

**குந்தி:** தயவு செய்து மன்னித்து விடுங்கள் அக்கா! சிறியவர்கள் செய்த பிழைகளை தங்களைப் போன்ற பெரியவர்கள் மன்னிப்பது கடனல்லவா?

**காந்:** அப்படியானால், துரியோதனனையும் துச்சாதனனையும் மன்னித்து விடும்படி திரௌபதியிடம் கூறலாமே!

**குந்தி:** அக்கா! எங்கள் எல்லோரையும்விட தாங்களே மூத்தவர்; அவர்களை நீங்கள் மன்னித்து விட்டீர்களா?

**காந்:** இல்லை... இல்லவே இல்லை....! இவர்களை மன்னித்தாலும் துரியோதனனை எப்போதும் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கும் என் அண்ணன் சகுனியையும் அந்தத் தேரோட்டி மகன் கர்ணனையும் என்றும் மன்னிக்கவே மாட்டேன்!

**குந்தி:** கர்ணன், மகன் துரியோதனனுக்கு நன்றிக்கடன்பட்டவனாயிற்றே!

**காந்:** ஏன் நீ கர்ணனுக்காகப் பரிந்து பேசுகிறாய்...?

**குந்தி:** துரியோதனன் தான் கர்ணனுக்கு ஓர் அந்தஸ்தினை வழங்கினான். இதனாலேயே அவன் தன் உயிரையே துரியோதனனுக்காகக் கொடுக்கவும் தயாராக இருக்கிறான்!

**காந்:** கர்ணனையும் அவன்பட்ட கடனையும் ஒருபுறம் தள்ளிவிட்டு நம் இருவரின் துர்ப்பாக்கிய நிலைபற்றி சிறிதளவு சிந்திப்போம். நம்மக்களை வெற்றிபெற வாழ்த்தவோ அல்லது தூற்றவோ சபிக்கவோ முடியாத நிலையில் நாமிருக்கிறோம். பாரதவம்சமே அழிந்தொழிந்து போவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். குந்தி! நீயாவது என் மகன்களை சபித்துவிடாதே!

**குந்தி:** அக்கா! ஒரு தாயால் தன் பிள்ளைகளை சபிக்க முடியாது.... வாழ்த்தத்தான் முடியும். விதுரர் மனையில் அவர் மனைவி எனக்கு வேண்டியவற்றை அன்புடன் செய்கிறாள். ஆனால் இன்று நான்படும் வேதனையிலிருந்து எனக்கு சற்று ஆறுதலளிக்க அவளால் முடியாது. ஆகவே தங்களை நாடி வந்துள்ளேன்.

**காந்:** நாம் இருவரும் இன்று ஒரே நிலையில் தானுள்ளோம்! நாம் வெவ்வேறு உருவங்களுடனிருந்தபோதும் இருவரினது துயரமும் கண்ணீரும் ஒன்றேதான்!

**குந்தி:** அக்கா! துரியோதனன் போர்க்களம் செல்வதற்கு முன் என்னிடம் வந்து வெற்றிபெற வாழ்த்தும்படி கோரினான்.

**காந்:** அத்தகைய வாழ்த்துக்கள் எதையும் நீ கூறவில்லையே!

**குந்தி:** அவ்வாறு என்னால் வாழ்த்தி அனுப்ப முடியவில்லை. மகன் துரியோதனன் என்னிடம் முதன்முதலில் கேட்ட ஒரே ஒரு வேண்டுகோளையும் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. இதற்காகவே தங்களிடம் மன்னிப்புக்கோர வந்தேன் அக்கா! ஆனால் அவனுக்கு நீண்ட ஆயுள் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தினேன் அக்கா!

**காந்:** குந்தி! இதற்காக என்னிடமுள்ள என் தாய்மை உனக்கு என்றென்றும் கடமைப் பட்டிருக்கும்!

-காட்சி மாற்றம்-

காந்தாரியின் அந்தப்புரத்துக்கு திருதராட்டிரர் வருகிறார்.

**காந்:** வாருங்கள் பிரபு!

**திருத:** குந்தி இன்று உன்னிடம் வந்தாளாமே! எதற்காக வந்தாள்?

**காந்:** என்னுடைய மன்னிப்பினைக் கோரியே வந்திருந்தாள்!

**திருத:** மன்னிப்பா....எதற்கு?

**காந்:** வெற்றிபெற வாழ்த்தியனுப்பும்படி மகன் துரியோதனன் குந்தியிடம் சென்றுள்ளான். அத்தகைய வாழத்தினை அளிக்க குந்தியால் முடியவில்லை. இதற்காகவே என்னிடம் மன்னிப்புக் கோரினாள். ஆண்டவன் இத்தகைய அன்புள்ளம் கொண்டவர்களை ஏன்தான் இப்படிச் சோதிக்கிறான்?

**திருத:** ஆண்டவன் அந்த இரகசியத்தை என்னிடம் கூறவில்லையே!

**காந்:** பிரபு! எனக்கு அனுமதி அளியுங்கள்! அந்த வாசுதேவ கிருஷ்ணனிடம் சென்று எனது பிள்ளைகளை பாதுகாத்துத் தரும்படி இரந்து கேட்கப்போகிறேன்! 'உன்னிடம் அமைதியை நாடி வந்திருக்கிறேன்! பாரத வம்சம் இரத்தம் சிந்தி அழியாமல் காப்பாற்று' என்று வேண்டுகோள் விடுக்கப்போகிறேன்!

**திருத:** சத்திரியர்கள் தர்மம் கொடுக்கப் பிறந்தவர்களேயன்றி, இறப்பதற்குப் பிறந்தவர்களல்ல; அமைதிகோரும் தூதுவனாகவே கிருஷ்ணன் இங்கு வந்தான். ஆனால் நாம் அவனுக்குரிய மதிப்பினை அளிக்கத் தவறிவிட்டோம். நாமேதான் யுத்தத்தின் பாதையைத் தேர்ந்தெடுத்தோம்! எனது வாழ்க்கைப் பாதையில் முதன்முதலாக விதியின் வழிக்கு இடம்விட்டு அதனால் ஏற்படப் போகும் பலாபலனை ஏற்கவும் நான் சித்தமாகிவிட்டேன் காந்தாரி!

பின்னணிப்பாடல்:

**மதியினை மாய்த்துமோர் மறுவுடனிழைத்த**
**சதியினால் வகுத்த சஞ்சலம் தீருமோ?**
**விதியின் வலியினை வைவதா லெவருமே**
**எதுவித பலனையு மெய்திட முடியுமோ?**

(தொடர்ந்து வரும்)



எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
436331
வன்னா நகைகளின் கூடம்
என்னம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

# தருவது விபோட



## சீறாத சிங்கம்

சிங்கக்குட்டியின் வயது 4 மாதம். குழந்தையின் வயது 14 மாதம். குழந்தையையும் குட்டியையும் ஒன்றாகவே வளர்க்கின்றார்கள் உரியவர்கள். இங்கிலாந்தில் உள்ள வனவிலங்கு பாதுகாவலரின் வீட்டில் கண்ட காட்சி.

Kala JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
433686

## அழகு காட்டும் அகாசி



சர்வதேச டென்னிஸ் வீரர்கள் வரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கிறார் அகாசி. முதலாம் இடத்தில் இருப்பவர் பீட்சாம்பிராஸ்.

ஆனால் சாம்பிராஸை விட அகாசிக்குத்தான் இரசிகர்கள் எக்கச்சக்கம். அதிலும் குறிப்பாக ஐ லவ் யூ சொல்லும் இரசிகைகள் ஏராளம்.

24 வயதுடைய அகாசி சமீபத்தில் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற டென்னிஸ் போட்டியில் கடந்தவருட சாம்பியன் பீட் சாம்பிராஸை வென்றதோடு தனது புகழை உயர்த்திக்கொண்டார். இதன் மூலம் அகாசிக்கு கிடைத்த பணம் ஒரு கோடியே 50 இலட்சம்.

அகாசி அடுத்து மோதப் போகும் களம் பிரெஞ்சு டென்னிஸ் போட்டி. அங்கும் ஆடி ஜெயித்தால் நான்கு பெரிய டென்னிஸ் போட்டிகளில் சாம்பியனாகிய பெருமை சேர்ந்துவிடும்.

ஏற்கனவே ஒரே ஒரு வீரர் அந்த பெருமையைப் பெற்றிருக்கிறார். அவர் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்தவர், பெயர் ரொட் லேவர்.

அகாசி சாதிப்பாரா? அவரது இரசிக இரசிகைகள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.





அவுஸ்திரேலியாவில் உள்ள பிரெண்ட் வாலராக் தம்பதியினருக்கு ஒரே நேரத்தில் பிறந்தவை ஐந்து குழந்தைகள். இயற்கையான கருத்தரிப்பு மூலமே ஐந்து குழந்தைகளும் பிறந்ததில் தம்பதிக்கு தாளாத சந்தோசம். தனது வேலையையும் உதறி எறிந்துவிட்டு அரச கொடுக்கும் உதவித் தொகையை மட்டுமே வைத்துக்கொண்டு மனைவிக்கு உதவுகிறார் பிரெண்ட் வாலராக். குழந்தை வளர்ப்பு என்றால் சும்மாவா சிரமந்தானே!

## பூ நடுங்கும் பூகம்பம்



இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே உலகம் முழுவதையும் அதிர்ச்சியில் புரட்டிப்போட்ட சம்பவம் ஜப்பான் பூகம்பம். தொழில் நுட்பத்தில் வளர்ந்த ஜப்பான் கூட இயற்கையின் விதியை முன்கூட்டியே அறிய முடியாமல் போனது. பூகம்ப நிகழ்வின் பின் அதிர்ச்சியில் உறைந்துள்ள பாட்டியும் பேரனும்.

## அட...... என்ன இது?



அதிசயிக்கவைக்கும் முச்சக்கரவண்டி. பின்னுள்ள சக்கரத்தின் உயரம் 11 அடி. முன்னுள்ள சக்கரத்தின் உயரம் 5 அடி. செலுத்த இரண்டு பேர் வேண்டும். இதனை உருவாக்கியவர் ஆர்தர் டிஸொன். அதனால் "டிஸொன் கொலோசால் ட்ரைசைக்கிள்" என்ற பெயரிடப்பட்டுள்ளது. உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம்பிடித்துவிட்டது.

## சிந்தும் நகை கோடி தரும்!



தமிழ்நாட்டில் புகழ் பெற்ற சினிமா நட்சத்திரங்கள் மார்க்கெட் போனபின்னர்தான் தொலைக்காட்சிப் படங்களில் நடிப்பதுண்டு. ஹொலிவூட்டில் தொலைக்காட்சி படங்களில் நடிப்பவர்களுக்கே தனி மவுசு.

படத்தில் இருப்பவர் பெயர் சிபி செப் பேர்ட். நம் நாட்டிலும் 'மூன்லைட்டிங்' என்ற தொலைக்காட்சித் தொடர் ஒளிபரப்பானது. அதிலும் கதாநாயகி இவர்தான். தொலைக்காட்சி தொடரில் நடிப்பதற்காக ஹொலிவூட் பட வாய்ப்புக்கள் சிலவற்றையும் தன்னிச்சையாக புறக்கணித்திருக்கிறார். "கோடி கோடியாக பணம்

சம்பாதிப்பதைவிட மனதுக்கு இதமான துறையில் நிலைப்பதையே விரும்புகிறேன்." என்கிறார் சிபி செப் பேர்ட். "அது சரி, சிபி, நீங்கள் யாரையாவது காதலிக்கிறீர்களா?" கோடி பெறும் புன்னகையை மட்டுமே பதிலாக தருகிறார் சிபி.